# காப்பியங்கள் - I

# காப்பியங்கள் - I

# பொருளடக்கம்


- காப்பியங்கள் - I
- பாட ஆசிரியரைப் பற்றி
- பாடம் 1 P10411 காப்பியத்தின் இலக்கணம்
- பாட அமைப்பு
- 1.0 பாட முன்னுரை
- 1.1 காப்பியம்
- 1.2 காப்பிய இலக்கணம்
- 1.3 காப்பியப் பாகுபாடு
- 1.4 காப்பிய உறுப்புகள்
- 1.5 காப்பியங்கள்
- 1.6 தொகுப்புரை

- பாடம் - 2 P10412 சிலப்பதிகாரம் - வழக்குரை காதை
- பாட அமைப்பு
- 2.0 பாட முன்னுரை
- 2.1 சிலப்பதிகாரம்
- 2.2 வழக்குரை காதை
- 2.3 வழக்குரை காதை நிகழ்ச்சிகள்
- 2.4 வெண்பா
- 2.5 தொகுப்புரை

- பாடம் - 3 P10413 மணிமேகலை-விழாவறை காதை
- பாட அமைப்பு
- 3.0 பாட முன்னுரை
- 3.1 மணிமேகலை
- 3.2 விழா அறை காதை
- 3.3 இந்திர விழா
- 3.4 தொகுப்புரை

- பாடம் - 4 P10414 சீவக சிந்தாமணி - விமலை பந்தாடுதல்
- பாட அமைப்பு
- 4.0 பாட முன்னுரை

- 4.1 சீவக சிந்தாமணி
- 4.2 விமலையார் இலம்பகம்
- 4.3 இலம்பகத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகள்
- 4.4 இலக்கியச் சிறப்பு
- 4.5 தொகுப்புரை

- பாடம் - 5 P10415 கம்பராமாயணம் - கங்கைப் படலம்
- பாட அமைப்பு
- 5.0 பாட முன்னுரை
- 5.1 கம்பராமாயணம்
- 5.2 குகன்
- 5.3 தொகுப்புரை

- பாடம் - 6 P10416 பெரிய புராணம்-கண்ணப்ப நாயனார் புராணம்
- பாட அமைப்பு
- 6.0 பாட முன்னுரை
- 6.1 பெரிய புராணம்
- 6.2 கண்ணப்ப நாயனார் புராணம்
- 6.3 இடம்பெறும் நிகழ்ச்சிகள்
- 6.4 தொகுப்புரை

- P10411 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P10411 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P10412 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P10412 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P10413 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P10413 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P10414 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P10414 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P10415 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P10415 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P10416 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P10416 தன் மதிப்பீடு : விடைகள் - II

# காப்பியங்கள் - I

P10411 காப்பியத்தின் இலக்கணம்

P10412 சிலப்பதிகாரம் – வழக்குரை காதை

P10413 மணிமேகலை-விழாவறை காதை

P10414 சீவக சிந்தாமணி – விமலை பந்தாடுதல்

P10415 கம்பராமாயணம் – கங்கைப் படலம்

P10416 பெரிய புராணம்-கண்ணப்ப நாயனார் புராணம்

# பாட ஆசிரியரைப் பற்றி



1. பெயர் : முனைவர் வேல். கார்த்திகேயன்

2. கல்வித் தகுதி : எம்.ஏ.,பிஎ.ட்., பிஎச்.டி.,

3. பணி நிலை : தமிழ் விரிவுரையாளர் சிந்திக் கல்லூரி 146, பூந்தமல்லி நெடுஞ்சாலை, நூம்பல், சென்னை-600 077 கல்லூரிப் பணியில் ஏழு ஆண்டுகள்

4. ஆய்வுத்துறை : முனைவர் பட்ட ஆய்வு-பக்தி இலக்கியம்-"திருநாவுக்கரசர் தேவாரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்"

5. நூல்கள் : 1. சென்னையில் திருப்புகழ்த் தலங்கள்
2. கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகளின் தனிப்பாடல்களும் காப்புப் பாடல்களும் – ஓர் ஆய்வு
3. சென்னை – கோயம்பேடு அருள்மிகு குறுங்காலீஸ்வரர், வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயில் தல வரலாறு
4. திருநாவுக்கரசர் தேவாரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்



1. பெயர் : முனைவர் திருமதி. வி.சி.சசிவல்லி

2. கல்வித் தகுதி : எம்.ஏ., பிஎச்.டி.,

3. பதவி : ஓய்வுபெற்ற முதுநிலை ஆய்வாளர்

4. அனுபவம் : 1970 முதல் 1977 வரை
மகளிர் கிறித்துவக் கல்லூரியில்
விரிவுரையாளர் பணி.
1982 முதல் 1997 வரை சென்னை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்
முதுநிலை ஆய்வாளர் பணி

5. பிஎச்.டி.
பட்டத்திற்கான
தலைப்பு : The Mysticism of Love in Saiva Tirumurais

6. எழுதியுள்ள
நூல்கள் : 1. காரைக்கால் அம்மையார் (ஆங்கிலம்) 1984
2. தமிழர் திருமணம் (தமிழ்) 1985
3. சமயச் சொல்லகராதி (தமிழ்) 1987
4. பண்டைத் தமிழர் தொழில்கள் (தமிழ்)1989
5. அழகியல் சிந்தனைகள் (தமிழ்) 1996
6. Mysticism of Love in Saiva Tirumurais(English) 1996
7. முல்லை (தமிழ்) 1998
8. திருப்புகழ் ஒளிநெறி (இவை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்)

# பாடம் 1 P10411 காப்பியத்தின் இலக்கணம்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

காப்பியம் என்னும் சொல்லின் பொருளையும், காவியம் அல்லது காப்பியம் என்னும் தொடர்நிலைச் செய்யுள் பற்றிய செய்திகளையும் இப்பாடம் தெரிவிக்கின்றது.

தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணம் பற்றிய செய்திகள் இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன. மேலும் பிற நூல்கள் கூறும் செய்திகளும் தரப்பட்டுள்ளன.

காப்பியப் பண்பான பாவிகம் பற்றிய செய்திகள் இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

காப்பியத்தின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்த செய்திகள் தரப்பட்டுள்ளன.

பண்டைக் காலம்முதல், இக்காலம் வரையிலுள்ள காப்பியங்கள் குறித்த பாகுபாடும் இப்பாடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்தில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் குறித்த செய்திகள் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- தனிப் பாடல்களாக இருந்த இலக்கிய வகை, காப்பிய இலக்கியமாக வளர்ந்த தன்மையை அறிய முடிகிறது.
- காப்பிய இலக்கணம் குறித்துத் தண்டியலங்காரம் முதலான நூல்கள் கூறும் செய்திகளை அறிய முடிகிறது.
- தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பியத்தின் பங்கு, பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்னும் பாகுபாடு, காப்பிய வளர்ச்சிப் படிநிலைகள் ஆகியவற்றை இப்பாடத்தின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது.
- தன்னேரில்லாத் தலைவனின் உயரிய பண்புகள், பண்டைக் கால மக்களின் வாழ்வு, சமயம், அரசியல், பண்பாட்டு நெறிமுறைகள் முதலியவற்றைக் காப்பியங்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.
- கவிஞனின் புலமைத் திறம், காப்பியப் படைப்பில் முழுமையாக வெளிப்படும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.
- பல்வேறு நீதிகளை உள்ளடக்கிச் சுவைபட விளக்கும் ஆற்றல் வெளிப்படுவதனை அறிந்துணரலாம்.

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை

1.1 காப்பியம்

1.2 காப்பிய இலக்கணம்

1.3 காப்பியப் பாகுபாடு

1.4 காப்பிய உறுப்புகள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

1.5 காப்பியங்கள்

1.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 1.0 பாட முன்னுரை

தமிழ் இலக்கியம் பல வகைப்படும். தன்னுணர்ச்சிப் பாடல்களும், அகம்,புறம் பற்றிய பாடல்களும் சங்க இலக்கியமாக மலர்ந்தன. அற நூல்கள் நீதி இலக்கியமாக வடிவம் கொண்டன. பிற்காலத்தில் பக்திப் பனுவல்கள், பக்தியின் அடிப்படையில் இலக்கியத் தன்மை பெற்றுப் பெருமை கொண்டன.

நல்ல நீதிகளை உள்ளடக்கிக் கதைபொதி பாடல்களாக அமைந்தவை காப்பியம் என்னும் இலக்கிய வகையாக மலர்ந்தன. இலக்கியம் கண்டதன் பின், இலக்கணம் இயம்புதல் என்னும் கருத்துப்படி, இந்தக் காப்பிய இலக்கியங்கள் தோன்றிய பிறகு, அவற்றுக்கான இலக்கண விதிகளும் நூல்களில் இடம் பெற்றன.

தண்டியலங்காரம் என்னும் நூல், காப்பிய அமைப்பை, சிறப்பாகத் தமிழ்ப் பெருங்காப்பியங்களின் இலக்கணத்தை, வரையறுத்துக் கூறுகின்றது. அவ்வகையில் காப்பிய இலக்கணம் குறித்த கருத்துகள் நம் பாடப் பகுதியில் தெரிவிக்கப்படுகின்றன. காப்பியம் என்பதன் பொருள்; காப்பியத்தின் தோற்றம், வகைகள்; காப்பியத்தின் இலக்கணம்; பெருங்காப்பியம், சிறு காப்பியம் பற்றிய செய்திகள் ஆகியவை இப்பாடத்தில் விளக்கப்படுகின்றன.

# 1.1 காப்பியம்

காப்பியம் என்பது ஓர் இலக்கிய வகை. வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைபொதி பாடல்கள் என்று விரிந்து கொண்டே வந்த இலக்கிய வளர்ச்சி காப்பியத்தில் முழுமை எய்தியது எனலாம்.

## 1.1.1 விளக்கம்

காப்பியம், ஆங்கிலத்தில் EPIC எனப்படுகிறது. இச்சொல் EPOS என்ற கிரேக்கச் சொல்லின் அடிப்படையில் உருவானது. இதற்குச் சொல் அல்லது பாடல் என்பது பொருள்.

காவியம் என்னும் வட சொல்லின் தமிழ் வடிவமே காப்பியம் எனக் கொள்வதுண்டு. காவியம் என்பது கவியினால் செய்யப்பட்டது எனப் பொருள் தரும்.

காப்பியம் என்பதைக் காப்பு + இயம் என்றும் பிரித்துப் பொருள் காணலாம். இப்பெயர் தொடக்கத்தில் இலக்கண நூல்களைச் சுட்டுவதற்காகவே அமைந்து, இடைக் காலத்தில் வடமொழித் தொடர்பால் ஒருவகை இலக்கிய வடிவத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது என்பர்.

காப்பியத்தைத் தொடர்நிலைச் செய்யுள் எனவும் குறிப்பர். காவியம், காப்பியம் என்னும் இவ்விரு சொற்களும் சில தமிழ்க் காப்பியப் பெயர்களில் அமைந்திருப்பதைக் காணலாம். சான்றுகள்:

- காவியம் என்று பெயர் பெறுபவை

யசோதர காவியம், நாககுமார காவியம், இயேசு காவியம், இராவண காவியம், .....

- காப்பியம் என்று பெயர் பெறுவன

கண்ணகி புரட்சிக் காப்பியம், கற்புக் காப்பியம்

## 1.1.2 தோற்றம்

எம்மொழியிலும், தொடக்கத்தில் காப்பிய இலக்கியம் தோன்றுவதற்கான அடிப்படைகளும், வளர்ச்சிப் படிநிலைகளும் அமைந்திருக்கும். திடீரென ஒரு பேரிலக்கியப் படைப்பு ஒரு மொழியில் முகிழ்த்து எழுதல் என்பது இயலாத ஒன்று.

முதலில் தனிப் பாடல்களாகவும், செய்யுள் தொகுப்புகளாகவும் இருந்த தொல்

பழங்கால (Primitive) இலக்கியப் படைப்பு மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றது; கதையைத் தொகுத்துக் கூறும் பாடல்கள் பிறந்தன. கற்பனை வளம் விரிவடைந்தது. இவ்வாறுதான் காப்பியப் படைப்புகள் உருவாயின.

தனிமனிதனின் வீரதீரச் செயல், அவன் பிறப்பு, வளர்ப்பு, அவன் சார்ந்த மரபு முதலான வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள், விழாக்களிலும் வழிபாடுகளிலும் பாடுபொருளாயின. அவனது புகழ் ஓர் உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டது. அவன் ஒரு குறிக்கோள் மனிதனாக உயர்த்தப்பட்டான். மேலும் அவன் தெய்வீக நிலையை எய்தினான். அவனைப் போற்றிப் புகழ்ந்த நிலை, படிப்படியாக அவன் வாழ்க்கை வரலாறு பற்றிய கதையாக உருவாகித் தனிச்சிறப்பும் உயர்வும் பெற்றது.

பின்னர் இசையோடு கூடிய கூற்று வகைக் கதைப்பாடல்கள் உருவாகத் தலைப்பட்டன. புலவர்கள் இவ்வரலாற்றுப் பழங்கதைப் பாடல்களைத் தொகுத்து, அவற்றை ஒரு முறைப்படுத்தித் தம் கவித்துவச் சிறப்பால் உயிரோட்டமுள்ள ஓர் ஒப்பற்ற படைப்பாகக் காப்பியத்தை ஆக்கித் தந்தனர்.

### 1.1.3 காப்பிய மரபு

காப்பிய இலக்கணங்களாகச் சொல்லப்பட்டவற்றைப் பின்பற்றிய காப்பியக் கவிஞர்கள் பலரும், சில இயல்புகளை ஒரே மாதிரியாகத் திரும்பத் திரும்ப அமைத்தனர். அவை காப்பிய மரபுகள் ஆயின. எடுத்துக்காட்டாக மலை, கடல், நாடு, வளநகர், பருவம் என்னும் வருணனைகளைத் தனித்தனியே நாட்டுப் படலம், நகர்ப் படலம் எனப் பகுத்து விரிவாகப் பாடினர். இவை காப்பியக் கதைப் போக்கிற்குப் பெரிதும் துணை செய்யாத நிலையிலும் இம் மரபுகள் காப்பிய அமைப்பில் வேரூன்றி விட்டன.

காப்பியத்தைத் தொடங்கும் போது வாழ்த்து, வணக்கம், வருபொருள் கூறுவதும் மரபாக உறுதிப்பட்டது. காப்பியத்தின் முதல் சொல் பெருமைக்குரிய சொல்லாக அமைய வேண்டும் என்பது கூட மரபு ஆனது. எடுத்துக்காட்டாக, கம்பராமாயணம் உலகம் யாவையும் எனத் தொடங்குகிறது. பெரியபுராணம் உலகெலாம் உணர்ந்து எனத் தொடங்குகிறது.

காப்பியத்தினுள் தலையாய அறக் கருத்துகளைப் பாவிகமாக (உட்பொதிவாக) வைப்பது அல்லது வெளிப்படையாகச் சொல்வது மரபு ஆயிற்று.

இயற்கையிறந்த நிகழ்வுகளும் (Supernatural), எதிர்வரும் நிகழ்வுகளை உணர்த்துவதான கனவு, நிமித்தம், வான்மொழி (அசரீரி) ஆகியவையும் காப்பியங்களில் இடம்பெறுவது மரபாயிற்று.

காப்பியங்களில் கதைநிகழ்ச்சி, இடையில் தொடங்கப் பெறுவதும், பல கலைகள் குறிக்கப்படுவதும், இசைப்பாடல், கட்டுரை ஆகியவை இடம் பெறுதலும்

மரபாகக் காணப்படுகின்றன.

## 1.2 காப்பிய இலக்கணம்

தண்டியலங்காரம் வடமொழியில் தண்டி இயற்றிய காவ்யாதர்சம் என்னும் நூலைத் தமிழ்ப் படுத்தி அவரால் இயற்றப்பட்டது. காப்பிய இலக்கணத்தைத் தண்டியலங்காரம் விரிவாக எடுத்துரைக்கின்றது. காப்பியத்தைப் பெருங்காப்பியம், காப்பியம் என்று இரு வகைப்படுத்தி, அவற்றின் இலக்கணத்தைத் தனித்தனியே எடுத்துச் சொல்கிறது.

### 1.2.1 பெருங்காப்பியம்

1) பெருங்காப்பியமாவது வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைத் தொடக்கத்தில் பெற்று வரும். அவற்றுள் இரண்டோ மூன்றுமோ பெற்றும் காப்பியம் தொடங்கலாம்.

2) அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளைப் பயனாகத் தருவதாக அமையும்.

3) தன்னிகர் இல்லாத தன்மை உடையவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

4) மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரனின் தோற்றம் ஆகியவற்றைப் பற்றிய வருணனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

5) திருமணம் புரிதல், முடிசூடல், சோலையில் இன்புறுதல், நீர் விளையாடல், மதுவுண்டு களித்தல், மக்களைப் பெற்றெடுத்தல், ஊடல் கொள்ளுதல், புணர்ச்சியில் மகிழ்தல் முதலிய நிகழ்வுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

6) அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தல், தூது செல்லல், போர் மேற்கொண்டு செல்லுதல், போர் நிகழ்ச்சி, வெற்றி பெறுதல் போன்ற நிகழ்வுகளும் இடம் பெறுதல் வேண்டும்.

7) சந்தி எனப்படும் கதைப் போக்கு (கதைத் தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு என்பவை) வரிசைப்படி அமைந்திருக்க வேண்டும்.

8) அமைப்பு முறையில் பெருங்காப்பியம் உள் பிரிவுகளுக்குச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பெயர்களில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

9) எண்வகைச் சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்புகளும் கேட்போர் விரும்பும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10) கற்றறிந்த புலவரால் புனையப்பட்டதாக இருத்தல் வேண்டும். நாற்பொருளும் குறையாது வரவேண்டும். இவை தவிரப் பிற உறுப்புகளில் சில குறைந்தும் வரலாம்

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று
ஏற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு, வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவுஇகல் வென்றி
சந்தியின் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி,
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப

(தண்டியலங்காரம், நூற்பா – 8)

கூறிய உறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபாடு இன்றென விளம்பினர் புலவர்

(தண்டியலங்காரம், நூற்பா – 9)

### **1.2.2** சிறுகாப்பியம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் குறைந்து வருவது காப்பியமாகும். தண்டியலங்காரம் கூறும் காப்பியம் என்பது சிறுகாப்பியத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அறமுதல் நான்கினுங் குறைபா டுடையது
காப்பியம் என்று கருதப் படுமே

(தண்டியலங்காரம், நூற்பா – 10)

மேற்கூறிய பெருங்காப்பியமும், காப்பியமும் ஒருவகைச் செய்யுளாலும், பலவகைச் செய்யுள்களாலும், உரைநடை கலந்தும், பிறமொழி கலந்தும் வரலாம்.

அவைதாம்
ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே

(தண்டியலங்காரம், நூற்பா – 11)

மேற்கூறியவாறு தண்டியலங்காரம் காப்பிய இலக்கணத்தைத் தெரிவிக்கின்றது.

- பாவிகம்

காப்பியத்தினுடைய பண்பாகப் பாவிகம் என்பதையும் அந்நூல் குறிக்கின்றது.

பாவிகம் என்பது காப்பியப் பண்பே
(தண்டியலங்காரம், நூற்பா – 91)

காப்பியம் முழுவதிலும் கவிஞன் வலியுறுத்த விரும்பும் காப்பியத்தின் சாரமான அடிப்படைக் கருத்தினையே பாவிகம் எனலாம். காப்பியத்தில் இடம்பெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் இக்கருத்து ஊடுருவி நிற்பது. இது நூலின் தனிச் செய்யுள்களிலோ, பகுதிகளிலோ புலனாவது இல்லை. தொடக்கம் முதல் முடிவு வரை நூலை முழுமையாக நோக்கும் போதே இப்பண்பு விளங்கும்.

**1.2.3** பிற நூல்களில் காப்பிய இலக்கணம்

வீரசோழியம் புராணத்திற்கும் காப்பியத்திற்கும் மிகுந்த வேறுபாடு இல்லை என்னும் அடிப்படையில், காப்பிய இலக்கணத்தைத் தெரிவிக்கின்றது. பன்னிரு பாட்டியல் காப்பியத்தைத் தலை, இடை, கடை என மூன்றாகப் பிரித்து விளக்குகின்றது. மாறனலங்காரம், வச்சணந்தி மாலை, நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், தமிழ்ப் பேரகராதி, அபிதான சிந்தாமணி ஆகிய நூல்களிலும் காப்பிய இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் கூறும் தொன்மை, தோல் முதலான இலக்கிய வனப்புகள் (அழகு) எட்டினையும் காப்பியத்தோடு தொடர்புபடுத்திக் காண முடியும்.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின் என்ற விதிப்படி, காப்பியங்களின் அமைப்பு அடிப்படையிலேயே இவ்வகை இலக்கணங்கள் அமைந்தன

எனலாம். தமிழ்க் காப்பியங்களில் இவ்விலக்கண அமைதி பெரும்பாலும் அமைந்துள்ளது. தமிழில், முன்னர் குறிப்பிட்ட பெருங்காப்பியம், காப்பியம் முதலானவைகளுடன் இதிகாசம், புராணம், கதைப்பாடல் ஆகியவற்றையும் காப்பியத்துள் அடக்குவதுண்டு.

# 1.3 காப்பியப் பாகுபாடு

தண்டியலங்காரம் காப்பியத்தைப் பெருங்காப்பியம், காப்பியம் என்று இரு வகைப்படுத்துகிறது என்பதை முன்னர்க் கண்டோம். பன்னிரு பாட்டியல் தலை, இடை, கடை என்று மூன்று வகையாகப் பிரித்துக் கூறுகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்தினையும் ஐம்பெருங் காப்பியங்கள் என்று வழங்குவது மரபாக இருந்து வருகிறது. வடமொழியில் பஞ்சமகாகாவியம் என்று வழங்குவதைப் பின்பற்றி இவ்வாறு தமிழிலும் வழங்கும் போக்கு அமைந்தது எனலாம்.

## 1.3.1 ஐம்பெருங் காப்பியம்

ஐம்பெருங்காப்பியம் என்னும் வழக்கு, முதன்முதலில் நன்னூல் மயிலைநாதர் உரையில் காணப்படுகிறது. கந்தப்ப தேசிகர் இயற்றிய திருத்தணிகை உலாவில் இவ்வைந்து காப்பியங்களையும் ஐம்பெருங்காப்பியங்கள் என்று முதன் முதலில் தெளிவாகக் கூறியுள்ளார். சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம் ஆகிய ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்கள் என்று குறிக்கப்படுகின்றன.

## 1.3.2 தன்மை அடிப்படை

மேலை நாட்டினர் காப்பியத்தின் தன்மைகளுக்கு ஏற்பப் பின்வருமாறு வகைப்படுத்துவர். அவை,

1) தொல்பழங்காலக் காப்பியம் (PRIMITIVE EPIC)
2) கலைக் காப்பியம் அல்லது இலக்கியக் காப்பியம் (ART EPIC (or) LITERARY EPIC) என்பன.

1) தொடக்கக் காலக் காப்பியங்களில் வீரதீரச் செயல்களே முக்கியத்துவமும் தலைமைச் சிறப்பும் பெற்றன. இந்த வீர உணர்வில் மிகுந்து விளங்கிய காப்பியங்களையே தொல்பழங்காலக் காப்பியம் என்பர். இவ்வகைக் காப்பியங்களுக்கு எடுத்துக்காட்டு: ஹோமரின் இலியாது, ஒதீஸி.

2) ஒரு தனிப் பெருவீரனைச் சுற்றி மட்டும் அமையாமல், கதை நிகழ்வுகளுக்கு ஓர் இலட்சியக் கனவு நோக்கத்தையும் இணைத்துக் காட்டப்பட்டிருப்பது கலை அல்லது இலக்கியக் காப்பியம் என்பர். மிகப் பழைய காப்பியங்களைத் தனியே பிரித்து விட்டால், மற்றவை இவ்வகையில் அடங்கும்.

## 1.3.3 பாடுபொருள் அடிப்படை

இவை தவிரப் புலவர்கள் பாடக் கூடிய பாடுபொருள் அடிப்படையிலும் (சுவை, வரலாறு, பக்தி முதலியன) பாகுபாடு செய்யலாம் என்பது கீழே விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

| பெயர் | ஆங்கிலப் பெயர் |
|---|---|
| நகைச்சுவைக் காப்பியம் | Burlesque Epic |
| நிகழ்ச்சிக் காப்பியம் | Epic of Action |
| வீர சாகசக் கற்பனைக் காப்பியம் | Romantic Epic |
| வீரக் காப்பியம் | Heroic Epic |
| அங்கதப் பொருண்மைக் காப்பியம் | Satire Epic |
| உருவக நிலைக் காப்பியம் | Symbolic Epic |
| எள்ளல் (கேலி) காப்பியம் | Mock Epic |
| செந்நடைக் காப்பியம் | Classical Epic |
| வரலாற்றுக் காப்பியம் | Historical Epic |
| தேசியக் காப்பியம் | National Epic |
| புராணக் காப்பியம் | Mythological Epic |
| சமயக் காப்பியம் | Religious Epic |
| அறக் காப்பியம் | Moral Epic |

# 1.4 காப்பிய உறுப்புகள்

முன்பு காப்பிய இலக்கணம் என்னும் பகுதியில் நாம் கண்ட காப்பிய உறுப்புகள் சிலவற்றை இங்குக் காணலாம்.

## 1.4.1 கதை அமைப்பு

காப்பியத்தின் உயிர் நாடியான கதை, காலத்திற்கும், காப்பிய ஆசிரியனின் நோக்கத்திற்கும் ஏற்ப அமையும். வாய்மொழிக் கதைகள், பழமரபுக் கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள், கற்பனையில் எழுந்தவை என்பனவற்றுள் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் காப்பியத்தின் கதை அமையும்.

## 1.4.2 தலைவன்

மக்களில் நற்பண்பு மிக்கவர்களைக் காப்பியத் தலைவர்களாகக் கொள்ளும் மரபு உள்ளது. தன்னேரில்லாத் தலைவன் என்பவன் பேராண்மை, எல்லாரையும் தன்வயப்படுத்தும் தகுதி, உயர்பண்புடைமை, விழுமிய கல்வியறிவு, அனைவரையும் ஈர்க்கும் தோற்றப் பொலிவு, அனைவராலும் விரும்பப்படும் இயல்பு, தான்வாழும் காலத்திலேயே தன்னைப் பற்றிய வரலாறு தோன்றக் காரணமாக இருத்தல் போன்ற தலைமைப் பண்புகள் உடையவனாய் இருத்தல் வேண்டும் எனலாம்.

## 1.4.3 பாத்திரப் படைப்பு

பாத்திரப் படைப்புத்தான், காப்பியங்களுக்கு உயிர்த் தன்மையாகும். காப்பியத்தில் எல்லாப் பாத்திரங்களும் ஒரே அளவில் ஒரே சீராகப் பங்கு பெறுவதில்லை. காப்பியக் கதையின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை, கதை நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் பாத்திரங்களை முதன்மைப் பாத்திரங்கள் எனலாம். ஒன்றிரண்டு செயல்களோடு காப்பிய அரங்கிலிருந்து மறைகின்ற பாத்திரங்களைத் துணைப் பாத்திரங்கள் எனலாம். மேலும் எதிர்நிலைப் பாத்திரங்களும் உண்டு.

## 1.4.4 கிளைக் கதைகள்

கிளைக் கதைகள், மையக் கதைக்குத் துணையாக அமையும். இவை இன்றியும் கதை நிகழலாம் என்பதால் இவை முதன்மை இடம் பெறுவதில்லை, கிளைநிலை மட்டுமே பெறும். காப்பியத்தில் சுவை கூட்டுவதற்காக, தேவைக்கு ஏற்பக் கிளைக் கதைகள் மிகுந்தும் குறைந்தும் அமையும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 1.5 காப்பியங்கள்

காப்பியங்கள் உலகிலுள்ள பல மொழிகளிலும் படைக்கப்பட்டு உள்ளன. அவை அந்தந்த நாட்டுப் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்து காணப்படுகின்றன. அக்காப்பியங்கள் பற்றிய செய்திகளைக் கீழே காணலாம்.

### 1.5.1 உலக மொழிகளில் காப்பியங்கள்

உலக மொழிகள் பலவற்றிலும் தொன்று தொட்டுக் காப்பியம் என்னும் இலக்கிய வகை படைக்கப்பட்டு வந்திருக்கிறது. அவற்றுள் சிலவற்றை காணலாம்.

| காப்பியத்தின் பெயர் | ஆசிரியர் | மொழி / நாடு |
|---|---|---|
| இலியாது, ஒதீஸி | ஹோமர் | கிரேக்க மொழி |
| ஆர்லண்டோ இன்ன மராட்டோ | பயர்டோ | இத்தாலி |
| ஷாநாமா | அபுல்காசிம் மன்சூர் | பாரசீகம் |
| மே | மெக்கா | செக்மொழி |
| வாண்டன் ஓஸ்ரெய்னால்ட் | பிளீமிஷ் | டச்சு மொழி |

### 1.5.2 இந்திய மொழிக் காப்பியங்கள்

இந்திய மொழிகளிலும் பழங்காலம் முதல் காப்பியப் படைப்புகள் தோன்றி வந்துள்ளன. பின்வரும் இந்தியக் காப்பியங்கள் குறிப்பிடத் தக்கவை ஆகும்.

| காப்பியத்தின் பெயர் | ஆசிரியர் | மொழி |
|---|---|---|
| இராமாயணம் | வால்மீகி | வடமொழி |

மகாபாரதம் வியாசர்
வடமொழி

இராம சரித மானஸ் துளசிதாசர்
ஹிந்தி

குமார சம்பவம்,இரகு வம்சம் காளிதாசர்
வடமொழி

நூர் நாமா அமீர் குஸ்ரு
பாரசீகம்

சுதாம சரித்திரம் பக்தசிரோமணி
குஜராத்தி

பத்மாவதி ஆலாவுல்
வங்காளம்

பிரபுலிங்க லீலை சாமரசன்
கன்னடம்

குமார சம்பவம் நன்னிசோட
தெலுங்கு

**1.5.3** தமிழில் காப்பியங்கள்

தமிழில் காலந்தோறும் தோன்றிய காப்பியங்களை இதிகாசம், புராணம், பெருங்காப்பியம், சிறுகாப்பியம், கதைப்பாடல் எனத் தமிழறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இருப்பினும் வடநூலார் வடமொழியில் கவியால் எழுதப்படும் அனைத்தையும் காவியம் என்னும் சொல்லால் குறித்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

- இதிகாசம்

கடவுளரும் கடவுளின் அம்சம் ஆனவர்களும், மானிடராகப் பிறந்து, பல தெய்வீகச் செயல்களை ஆற்றி, இறுதியில் தெய்வீக நிலை எய்துவதைப் பற்றி விரிவாகப் பேசுவன இதிகாசங்கள் எனப்படும். (இதிகாசம் என்னும் சொல்லின் பொருள் இவ்வாறு நடந்தது என்பதாம்.)

- புராணம்

கடவுளர் பற்றிய புராணங்களில் தெய்வங்கள், தெய்வீக நிலையில் நின்று

செயல்படுகின்றன. இத்தெய்வங்களின் அற்புதச் செயல்கள் ஒரு தலத்தைச் (இடம்) சார்ந்து அமைகின்ற போது அதைப் பற்றிக் கூறும் கதைப் பாடல்கள் தல புராணங்கள் என்று பெயர் பெறுகின்றன.

- காப்பியம்

சிறப்பு மிக்க, மனிதப் பாத்திரங்கள், நல்வினை தீவினைப் பலன்களை உலக வாழ்க்கையில் அனுபவித்து, நல்வினை ஆற்றி, இறுதியில் இறவா இன்பமாகிய இறைநிலை எய்துதல் பற்றி விரிவாகச் சிறப்பித்துக் கூறுவனவே காப்பியங்கள் எனப்படுகின்றன.

தமிழில் காப்பியப் படைப்பு, இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தொடங்கியது எனலாம். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும், சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலையும் தமிழில் முதற் காப்பியங்களாகப் போற்றப்படுகின்றன. இவையிரண்டும் ஐம்பெருங் காப்பியங்களில் இடம் பெற்றுள்ளன. இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று சான்றோர்களால் பாராட்டப்படுகின்றது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு காலப் பகுதியிலும் காப்பியப் படைப்பு நிகழ்ந்த வண்ணமாகவே இருந்திருக்கின்றது. அவற்றுள் சில குறிப்பிடத்தக்க காப்பியங்களைச் சுட்டிக் காட்டலாம்.

| காப்பியத்தின் பெயர் | ஆசிரியர் | சமயம் |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் | சமணம் |
| சீவகசிந்தாமணி | திருத்தக்கதேவர் | சமணம் |
| சூளாமணி | தோலாமொழித்தேவர் | மணம் |
| மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் | பௌத்தம் |
| குண்டலகேசி | நாதகுத்தனார் | பௌத்தம் |
| இராமாயணம் | கம்பர் | வைணவம் |
| பாரதம் | வில்லிப்புத்தூரார் | வைணவம் |
| பெரியபுராணம் | சேக்கிழார் | சைவம் |
| திருவிளையாடற்புராணம் | பரஞ்சோதி முனிவர் | சைவம் |
| சீறாப்புராணம் | உமறுப்புலவர் | இஸ்லாம் |

| | | |
|---|---|---|
| தேம்பாவணி | வீரமாமுனிவர் | கிறித்துவம் |
| இரட்சண்ய யாத்திரிகம் | கிருஷ்ணப்பிள்ளை | கிறித்துவம் |

இதிகாசங்களிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, விரிவாக்கிக் காப்பிய வடிவில் தரும் இலக்கியத்தை, கண்ட காவியம் என்று வடமொழி அறிஞர் குறிப்பிடுவர். அத்தகைய முயற்சி தமிழிலும் நிகழ்ந்தது. நைடதம் (அதிவீர ராம பாண்டியர்), நளவெண்பா (புகழேந்திப்புலவர்), குசேலோபாக்கியானம் (வல்லூர் தேவராசப் பிள்ளை), அரிச்சந்திர புராணம் (நல்லூர் வீரைகவிராயர்) முதலியவை இந்த வகைக்கு எடுத்துக் காட்டுகள் ஆகும்.

இன்றுவரை தமிழில் உருவான காப்பியங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 150 ஆகும்.

தமிழ்க் காப்பியங்களின் அமைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சிலப்பதிகாரம் பற்றிய செய்திகளை இங்குக் காண்போம்.

சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். மகளிர் காலில் அணியும் அணி சிலம்பு. சிலம்பால் விளைந்த நூல் ஆதலின் சிலப்பதிகாரம் என்றாயிற்று. கண்ணகியின் சிலம்பும், பாண்டிமாதேவியின் சிலம்பும் கதைக்கு அடிப்படையானவை. இக்காப்பியம் மூன்று காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்டது.

சோழ நாட்டில் புகார் நகரில் பிறந்த கண்ணகி, பாண்டி நாட்டு மதுரையை அடைந்து, கணவனை இழந்து, சேர நாட்டில் புகுந்து தெய்வமாகியதே கதையாம். இதனைச் சமணக் காப்பியம் என்பர் அறிஞர்.

### 1.5.4 இக்காலக் காப்பியங்கள்

பழையன கழிதலையும், புதியன புகுதலையும் காலந்தோறும் தோன்றுகின்ற இலக்கியங்களில் காணலாம். அவ்வகையில், தமிழ்க் காப்பிய வளர்ச்சிப் போக்கும் அமைந்துள்ளது. பழங்காலத்தில் சமய அடிப்படையில் பல காப்பியங்கள் எழுந்தன. இடைக்காலத்தில் சமயங்களை வளர்த்த சமயச் சான்றோர் வரலாறுகளைப் பாடுவது மிகுதியாகக் காணப்பட்டது. குறிப்பாகச் சோழர் காலத்தில்தான் மிகுதியான காப்பியங்கள் தோன்றின. அதனால் தமிழிலக்கிய வரலாற்றில் சோழர் காலத்தைக் காப்பிய இலக்கியக் காலம் என்று தமிழறிஞர்கள் கூறுவார்கள். கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் மிகுதியும் புராண நூல்கள் எழுந்தன. சோழர் காலத்தை அடுத்தும் இக்காலத்திலும் கதைப் பாடல்கள் மிகுதியாகத் தோன்றியுள்ளன.

இக்காலத்தில் காப்பிய இலக்கணங்களுள் ஒரு சிலவற்றை மட்டும் பின்பற்றி அமைக்கப்பட்ட செய்யுள் படைப்புகள் சிறு காப்பியம், சிறு காவியம், குறுங்காப்பியம்,

குறுங்காவியம் என்று பெயரிட்டு வழங்கப்படுகின்றன. இக்காவியங்கள் மொழிபெயர்ப்பாகவும், தழுவல் காப்பியங்களாகவும் இருக்கின்றன. அண்மைக் காலம் வரையிலும் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள் கீழே பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன.

பாரதியார் - கண்ணன் பாட்டு,
குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம்.

பாரதிதாசன் – பாண்டியன் பரிசு, தமிழச்சியின்
கத்தி, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், சஞ்சீவி பர்வதத்தின்
சாரல், வீரத்தாய், புரட்சிக்கவி.

கவிமணி – மருமக்கள் வழி மான்மியம்

கண்ணதாசன் – ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி,
ஏசு காவியம்.

முடியரசன் – பூங்கொடி, வீரகாவியம்

கவியோகி சுத்தானந்த பாரதியார் – பாரத சக்தி மகா காவியம்

டாக்டர் சாலை இளந்திரையன் – சிலம்பின் சிறுநகை

தி. வெங்கட கிருஷ்ணய்யங்கார் – இராகவ காவியம்

புலவர் குழந்தை – இராவண காவியம்

வாணிதாசன் – கொடிமுல்லை

அண்ணாதாசன் – கலைஞர் காவியம்

தமிழ் ஒளி - மாதவி காவியம்

இக்காலக் காப்பியத்தைப் பற்றிய விளக்கத்தை ஒரு சான்று கொண்டு நோக்கி உணரலாம்.

- பாரதியார் – பாஞ்சாலி சபதம்

பாஞ்சாலி சபதம், பாரதக் கதையின் ஒரு பகுதியாகத் திகழ்கின்றது. சூதில் அனைத்தையும் இழக்கின்றான் தருமன். அந்நிலையில் துச்சாதனன் திரௌபதியின் கூந்தல் பற்றி இழுத்துச் சபைக்குக் கொண்டு வருகின்றான். நாணழிந்த திரௌபதி, சபையோர் முன்னிலையில் தான் அடைந்த அவமானத்தால் ஆத்திரமடைந்து, கொடூரமான ஒரு சபதம் செய்கின்றாள். தொடர்ந்து வீமன், அர்ச்சுனன் முதலானோரும்

சபதம் எடுக்கின்றனர். இதுவே இக்கதை பொதி பாடலின் கருவாகும். இக்கதைப் பாடல் குறியீட்டு நிலையில் இந்திய விடுதலை உணர்வைப் பிரதிபலிக்கின்றது. இக்காவியம் இரண்டு பாகங்களையும் 5 சருக்கங்களையும் 308 பாடல்களையும் கொண்டது.

## 1.6 தொகுப்புரை

நண்பர்களே! இதுவரை காப்பியத்தின் இலக்கணம் பற்றிய செய்திகளைப் படித்தீர்கள். இந்தப் பாடத்திலிருந்து என்ன என்ன செய்திகளை அறிந்து கொண்டீர்கள் என்பதனை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்திப் பாருங்கள்.

- காப்பியம் என்றால் என்ன என்பது பற்றியும், காப்பிய இலக்கணம் பற்றிய செய்திகளையும் அறிந்திருப்பீர்கள்.
- காப்பியத்தின் இலக்கணம் கூறும் இலக்கண நூல்கள் யாவை என்பதையும் அறிந்திருப்பீர்கள்.
- காப்பியத்தின் தோற்றம், வளர்ச்சி, காப்பிய வகைகள், காப்பியப் பாகுபாடு, காப்பிய மரபு முதலான செய்திகளையும், தமிழில் காலந்தோறும் படைக்கப்பட்ட காப்பிய நூல்களைப் பற்றியும் விரிவாக அறிந்திருப்பீர்கள்.
- இக்காலக் காப்பியங்கள் குறித்தும் அறிந்திருப்பீர்கள்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## பாடம் - 2

# P10412 சிலப்பதிகாரம் - வழக்குரை காதை

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். அதில் ஒரு சிறு பகுதியான வழக்குரை காதை என்ன சொல்கிறது என்பதை இப்பாடம் விளக்குகின்றது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- சிலப்பதிகாரக் காலத்திய அரசாட்சி முறை குறித்து அறியலாம்.
- வழக்கு விசாரிக்கும் விதம் குறித்து அறியலாம்.
- அரச நீதி காக்கப்படும் முறையை அறியலாம்.
- அறத்தின் வலிமை உணர்த்தப்படுவதை அறியலாம்.

# பாட அமைப்பு

2.0 பாட முன்னுரை

2.1 சிலப்பதிகாரம்

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

2.2 வழக்குரை காதை

2.3 வழக்குரை காதை நிகழ்ச்சிகள்

2.4 வெண்பா

2.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 2.0 பாட முன்னுரை

பழந்தமிழில் நூல்கள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டன. தொடர்நிலைச் செய்யுள் வடிவில் செய்யப்பட்டது காப்பியம் எனப்பட்டது. தமிழ் மொழியில் ஐந்து பெருங்காப்பியங்களும் ஐந்து சிறு காப்பியங்களும் உள்ளன. இவை தவிர வேறு சில காப்பியங்களும் உள்ளன.

ஐம்பெருங் காப்பியங்களுள் முதல் பெருங்காப்பியமாகப் போற்றப்படுவது சிலப்பதிகாரம் ஆகும். அதில் ஒரு சிறுபகுதி வழக்குரை காதை என்பது. இந்தப் பகுதி மூலம் காப்பியத் தலைவி கண்ணகி, தன் கணவன் கோவலன் கள்வன் அல்லன் என நிறுவியதையும் அதன்வழி முப்பெரும் உண்மைகளுள் இரண்டு உணர்த்தப்படுவதையும் இந்தப் பாடத்தில் காணலாம்.

## 2.1 சிலப்பதிகாரம்

தமிழ் மொழியில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இந்நூலின் ஆசிரியர் இளங்கோ அடிகள் ஆவார். இது சமண சமயக் காப்பியம். இந்தக் காப்பியம் சங்க காலத்திற்கும் தேவாரக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்தது.

காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்குவது இந்நூல். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை மூன்று காண்டங்களில் முப்பது காதைகளில் விரிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

### 2.1.1 காப்பிய அமைப்பு

சிலப்பதிகாரக் காப்பிய நிகழ்ச்சிகள் முறையே சோழ, பாண்டிய, சேர நாடு என்னும் மூன்று நாடுகளில் மூவேந்தரின் தலைநகரங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளாம். எனவே இக்காப்பியம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்று காண்டங்களாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த மூன்று காண்டங்களில் முப்பது காதைகள் அமைந்துள்ளன. (காண்டம் = பெரும் பிரிவு; காதை = சிறு பிரிவு)

- பெயர்க்காரணம்

இந்தக் காப்பியத்தின் கதை சிலம்பினைக் காரணமாகக் கொண்டு அமைந்ததால் சிலப்பதிகாரம் எனப் பெயரிடப்பட்டது.



- காப்பிய நோக்கம்

காப்பியத்தில் அறம், பொருள், இன்பம் மூன்றும் இடம் பெறுகின்றன. கோவலனும் கண்ணகியும் வானவர் உலகு (வீடு) செல்வதும் காட்டப்படுகிறது. எனினும் காப்பியத்தில் இளங்கோவடிகளின் நோக்கம் அறமே எனலாம். தம்மை அறவுணர்வு

உந்த, தாமும் மக்களிடம் அறவுணர்வை விழிப்புறச் செய்ய இளங்கோவடிகள் பாடியது சிலப்பதிகாரம்.

### 2.1.2 காப்பியச் சிறப்பு

சிலப்பதிகாரம் தோன்றுவதற்கு முன்னிருந்த தமிழிலக்கியம் அகத்திணை, புறத்திணைப் பாடல்களே. அவை தனிமனித உணர்ச்சிகளைப் பொதுமையில் நின்று உணர்த்தின. ஆனால் ஒருவரது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து, உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் இலக்கிய முயற்சியாக, பெருங்காப்பியமாக, அமைந்தது சிலப்பதிகாரம் ஆகும்.

- காப்பியத் தலைவி

காப்பிய இலக்கணப்படி பெருங்காப்பியம் தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் சிலம்பில் கண்ணகி தன் நிகரில்லாத தலைவியாகப் போற்றப்படுகின்றாள்.



- முத்தமிழ்க் காப்பியம்

இளங்கோ அடிகள் இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழையும் பயன்படுத்தியுள்ளார். அதனால் சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் எனப் போற்றப்படுகிறது.

- மூன்று நீதிகள் அல்லது உண்மைகள்

சிலப்பதிகாரம் இவ்வுலக மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் மூன்று உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. அந்த மூன்று உண்மைகள் எவை என அறிந்து கொள்வோமா? அவையாவன :

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது ;

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவது ;
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது

(பிழைத்தல் = தவறு செய்தல்; கூற்று = எமன்; உரைசால் = புகழ்மிகுந்த; உருத்து = சினந்து)

இவை சிலப்பதிகார நூல் முழுமையும் விரவி வந்துள்ளதைக் காணலாம்.

- காப்பியப் பெருமை

சிலப்பதிகாரக் காலத்தில் வழக்கிலிருந்த தமிழர்தம் பண்பாடு, சமய நெறிகள், பழக்க வழக்கங்கள், கலைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள இக்காப்பியம் பெரிதும் துணைநிற்கும். சிலப்பதிகாரக் காப்பியத்தின் பெருமையைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்” எனப் பாராட்டியுள்ளார்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 2.2 வழக்குரை காதை

சிலப்பதிகாரத்தின் இரண்டாம் காண்டமான மதுரைக் காண்டத்தில் பத்தாவது காதையாக வழக்குரை காதை இடம்பெற்றுள்ளது. ஆசிரியப் பாவினால் அமைந்த இக்காதையில் சில வெண்பாக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

### 2.2.1 கதைச் சுருக்கம்

கோவலன் தன் மனைவி கண்ணகியுடன் பொருள் தேட மதுரை செல்கிறான். மதுரையில் மாதரி என்ற ஆயர்குலப் பெண்ணிடம் கண்ணகியை அடைக்கலமாக இருக்கச் செய்து, கண்ணகி தந்த காற்சிலம்பை விற்று வரக் கருதி மதுரை நகரக் கடைத்தெருவிற்குச் செல்கிறான். அங்கு அரண்மனைச் சிலம்பைத் திருடிய பொற்கொல்லன் ஒருவனது சூழ்ச்சிக்கு ஆளாகிறான். அதன் விளைவு கோவலன் திருடன் எனக் கருதப்பட்டு அரசன் ஆணையால் கொலை செய்யப்படுகிறான். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி சினந்து எழுந்து பாண்டியன் அரசவைக்குச் சென்று வழக்குரைத்துக் கோவலன் கள்வன் அல்லன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றாள். உண்மை உணர்ந்த பாண்டியன் அக்கணமே தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்துகிறான்.

- கதை அமைப்பு

அரசநீதி பற்றி எழுந்த இந்த வழக்குரை காதை நாடகப் பாங்கில் அமைந்துள்ளது.

- கதை மாந்தர்

வழக்குரை காதைக் கதை நிகழ்ச்சியில் கோப்பெருந்தேவி, பாண்டிய மன்னன், வாயில் காவலன், கண்ணகி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

## 2.3 வழக்குரை காதை நிகழ்ச்சிகள்

கண்ணகி உணர்ச்சி பொங்க வழக்குரைத்து வெல்வதும், தோற்ற பாண்டிய மன்னன் உயிர் நீப்பதும் இக்காதை நிகழ்ச்சிகள் ஆகும்.

### 2.3.1 கோப்பெருந்தேவியின் கனவு

அரண்மனையில் பாண்டிய அரசி கோப்பெருந்தேவி தான் கண்ட தீய கனவினால் உள்ளங் கலங்கித் தன் தோழியிடம் கூறியது :

“தோழீ! கேள். நம் மன்னரது வெண்கொற்றக் குடை செங்கோலுடன் கீழே விழுந்தது. அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணியின் ஓசை இடைவிடாது ஒலித்தது. எல்லாத் திசைகளும் அப்போது அதிர்ந்தன. அப்பொழுது சூரியனை இருள் சூழக் கண்டேன். இரவு நேரத்தில் வானவில் தோன்றக் கண்டேன். பகல் பொழுதில் விண்மீன்கள் மிக்க ஒளியோடு பூமியில் விழக் கண்டேன். இதெல்லாம் என்ன? அதனால் நமக்கு வரக்கூடிய துன்பம் ஒன்றுண்டு. அதனை நம்மன்னவர்க்குச் சென்று கூறுவேன்.”

இவ்வாறு கூறிய தேவி மன்னன் இருக்கும் அரசவை நோக்கிச் சென்றாள்.

(பின்னால் நிகழப் போகும் நிகழ்ச்சியைக் குறிப்பாக முன்னரே உணர்த்துவது நாடக உத்தியாகும். இங்குத் தேவி கண்ட கனவின் மூலம் பாண்டிய மன்னன் வீழ்ச்சி அடையப் போவது குறிப்பாக உணர்த்தப்பட்டது.)

இப்பகுதியை ஆசிரியர் கீழ்வருமாறு பாடுகிறார் :

ஆங்குக்
குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்
கடைமணி யின்குரல் காண்பென்காண் எல்லா
திசைஇரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்
கதிரை இருள்விழுங்கக் காண்பென்காண் எல்லா
விடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழும்
கடுங்கதிர் மீன்இவை காண்பென்காண் எல்லா
கருப்பம்

(வழக்குரை காதை : 1-8)

(எல்லா = தோழி; கடைமணி = முறைவேண்டி வருவோர் ஒலிக்கும் பொருட்டு அரண்மனை வாயிலில் கட்டப்படுவதோர் பெரியமணி; கதிர் = சூரியன்; கருப்பம் = அறிகுறி)

- கோப்பெருந்தேவியின் வருகை

அரசி மன்னனை நாடிச் சென்ற போது தோழியரும் உடன் வந்தனர். கண்ணாடி ஏந்தி வந்தனர் சிலர்; ஆடை, அணிகலன், ஏந்தினர் சிலர்; மணப்பொருள் ஏந்தி வந்தனர் சிலர்; மாலை, கவரி, அகிற்புகை முதலியன ஏந்தி வந்தனர் சிலர்; கூனராயும், குறளராயும், ஊமையராயும் உள்ள பணி செய்யும் இளைஞரோடு, குற்றேவல் செய்யும் மகளிர் அரசியைச் சூழ்ந்து வந்தனர்; முதுமகளிர் பலரும் 'பாண்டியன் பெருந்தேவி வாழ்க!' என உள்ளன்போடு வாழ்த்தினர்.

(கூனர், குள்ளர், ஊமையர் முதலிய குறைபாடு உடையோர் அரண்மனையில் பணிபுரிவது அக்காலத்து வழக்கமாகும்.)

இவ்வாறு தன் பரிவாரத்துடன் தேவியானவள் சென்று, தன் தீய கனவில் கண்டவற்றை எல்லாம் பாண்டிய மன்னனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். சிங்கம் சுமந்த அரசு கட்டிலின் மேல் வீற்றிருந்து, தென்னவர் கோமானாகிய பாண்டியன் தேவி கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

**2.3.2** கண்ணகி வருகை

அவ்வேளையிலே கண்ணகி அரண்மனை வாயிலை அடைந்தாள்; அங்கிருந்த காவலனை நோக்கி, "வாயில் காவலனே! வாயில் காவலனே! நல்ல அறிவு அற்றுப் போன, தீய நெஞ்சத்தால் செங்கோல் முறையினின்றும் தவறிய கொடுங்கோல் மன்னனுடைய வாயில் காவலனே! பரல்களையுடைய இணைச் சிலம்புகளுள் ஒரு சிலம்பினை ஏந்திய கையை உடையவளாய், தன் கணவனை இழந்தாள் ஒருத்தி அரண்மனை வாயிலில் உள்ளாள் என்பதை உன் மன்னனிடம் சென்று அறிவிப்பாய்" என்று கூறினாள்.

வாயிலோயே வாயிலோயே
அறிவு அறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே
(வழக்குரை காதை : 24-29)

(அறிவு அறை போதல் = அறிவு சமயத்தில் உதவாமல் போதல்; இறைமுறை = செங்கோன்மை)

- வாயில் காவலன் மன்னனுக்கு அறிவித்தல்

வாயில் காவலன் கண்ணகியின் சினங்கொண்ட தோற்றம் கண்டு அஞ்சியவனாய் விரைந்து சென்று மன்னனை வணங்கி வாழ்த்தி நின்றான்.

“எம் கொற்கைப் பதியின் வேந்தனே வாழ்க! தென் திசையிலுள்ள பொதிகை மலைக்கு உரிமை உடையவனே வாழ்க! செழிய வாழ்க! தென்னவனே வாழ்க! பழி வருவதற்குக் காரணமான நெறியில் செல்லாத பஞ்சவனே வாழ்வாயாக !

குருதி பீறிடும் மகிடாசுரனுடைய பிடர்த்தலைப் பீடத்தின் மேல் நின்ற கொற்றவையோ என்றால் அவளும் அல்லள்; சப்த மாதர் ஏழு பேருள் இளையவளான பிடாரியோ என்றால் அவளும் அல்லள்; இறைவனை நடனமாடக் கண்டருளிய பத்திர காளியோ எனில் அவளும் அல்லள்; பாலை நிலக் கடவுளான காளியோ எனில் அவளும் அல்லள்; தாருகன் என்ற அசுரனின் அகன்ற மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்; உள்ளத்திலே மிகவும் சினங்கொண்டவள் போல் தோன்றுகின்றாள்; அழகிய வேலைப்பாடமைந்த பொன் சிலம்பு ஒன்றினைக் கையிலே பிடித்துள்ளாள்; கணவனை இழந்தவளாம்; நம் அரண்மனை வாயிலில் உள்ளாள்,” என்றான்.

வாழிஎம் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் தலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல்கண்டு அருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே

(வழக்குரை காதை : 30-44)

(கொற்கை = சிறந்த முத்துகள் கிடைக்கும் கடற்கரைப் பட்டினம். செழியன், தென்னவன், பஞ்சவன் என்பன பாண்டிய அரசர்க்குரிய பெயர்கள்.

பழியொடு படராப் பஞ்சவ என்றது அன்று வரையிலும் அரசியல் நீதி தவறாது அரசாண்டவன் என்பதை உணர்த்தும்.

பசுந்துணி = வெட்டப்பட்ட துண்டம்; பிடர்த்தலை = பிடரியோடு கூடிய

மகிடாசுரன் தலை; இறைவன் = சிவபெருமான்; அணங்கு = பத்திரகாளி; கானகம் உகந்தகாளி = பாலைநிலத் தெய்வம்; செற்றனள் = உட்பகை கொண்டவள்; செயிர்த்தல் = சினத்தல்)

இப்பகுதி கண்ணகி சினத்தாலும் உருவத்தாலும் மக்கள் தன்மையில் இருந்து வேறுபட்டு, கொற்றவை முதலிய தெய்வ மகளிரே போல் காணப்பட்டாள் என்பதை உணர்த்துகிறது.

**2.3.3** அரசன் வினாவும் கண்ணகி விடையும்

தனது ஆணைப்படி, தன்முன் வந்து நின்ற கண்ணகியை நோக்கி அரசன் “நீர் ஒழுகும் கண்களுடன் எம்முன் வந்திருப்பவளே! இளையவளே! நீ யார்?” எனக் கேட்டான்.

“உண்மை தெளியா மன்னனே! சொல்லுகிறேன் கேள். தேவர்களும் வியக்கும்படி ஒரு புறாவினது துன்பத்தை நீக்கின சிபி என்னும் செங்கோல் மன்னனும்; தனது அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணியை இடைவிடாது அசைத்து ஒலித்த ஒரு பசுவின் துயரைப் போக்க எண்ணி, அப்பசுவின் துன்பத்திற்குக் காரணமான தனது அரும்பெறல் மகனைத் தானே தனது தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்றவனான செங்கோல் வேந்தன் மநுநீதிச் சோழனும் அருளாட்சி செய்த பெரும் புகழை உடைய புகார் நகரம் என்னுடைய ஊராகும்.

புகார் நகரில் மிக்க புகழுடன் விளங்கும் பெருங்குடி வணிகனான மாசாத்துவான் என்னும் வணிகனது மகனாய்ப் பிறந்து, வாணிகம் செய்து வாழ்தலை விரும்பி, ஊழ்வினை காரணமாக உனது பெரிய நகரமாகிய மதுரையிலே புகுந்து, இங்கு அத்தொழிலுக்கு முதலாக என்னுடைய காற்சிலம்புகளுள் ஒன்றினை விற்பதற்கு வந்து, உன்னால் கொலைக்களப்பட்ட கோவலன் என்பான் மனைவி ஆவேன். என்னுடைய பெயர் கண்ணகி” என்றாள்.

தேரா மன்னா செப்புவது உடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்கு

என்கால் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி

(வழக்குரை காதை : 50-63)

(தேரா மன்னா = ஆராய்ச்சி இல்லாத அரசனே; புள் = பறவை. இங்குப் புறாவைக் குறிக்கும்; புன்கண் = துன்பம்; ஏசாச் சிறப்பு = பழி கூறப்படாத பழஞ்சிறப்பு)



இப்பகுதியில் அரசன் மீண்டும் தன்னை வினவுவதற்கு இடமின்றிக் கூறவேண்டிய அனைத்தையும் குறைபடாது கூறிக் கண்ணகி வழக்குரைக்கின்ற திறம் போற்றுதற்குரியது.

- மன்னன் கூற்று

“பெண் அணங்கே ! கள்வனைக் கொல்வது செங்கோல் முறைமைக்கு ஏற்றது ஆகும். முறை தவறாத அரச நீதியே ஆகும்,” என்று மன்னன் விளக்கினான்.

- கண்ணகி காட்டும் சான்று

அது கேட்ட கண்ணகி, “நல்ல முறையில் ஆராய்ந்து பார்த்துச் செயல்படாத கொற்கை வேந்தனே! என்காற் பொற்சிலம்பு மாணிக்கக் கற்களை உள்ளிடு பரல்களாக உடையது” என்றாள்.

(சிலம்பு ஒலிக்க வேண்டும் என்பதற்காக அதன் உள்ளே சிறு கற்களை இடுவார்கள். அக்கற்களைப் ‘பரல்’ என்றும் ‘அரி’ என்றும் குறிப்பிடுவார்கள். சிலம்பினுள் மாணிக்கப் பரலிடுதல் அரியதொரு நிகழ்ச்சி ஆதலாலும், பாண்டியன் அரண்மனைச் சிலம்பில் முத்துகளே பரல்களாக இருக்க வேண்டும் என்னும் துணிவு பற்றியும் கண்ணகி ‘என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே’ என்றாள்.)

- சான்றினைப் பாராட்டுதல்

அது கேட்ட மன்னன் உண்மையை அறிவதற்குத் தகுந்த சான்று கூறிய கண்ணகியைத் தன்னுள் பெரிதும் பாராட்டி, "நல்லது. நீ கூறியவை நல்ல சொற்கள். எமது சிலம்பு முத்துகளை உள்ளிடு பரல்களாக உடையது." என்றான்.

அக்காலத்தில் மன்னர்கள் நடுநிலை தவறாது முறையாக அரசாண்டனர். குடிமக்கள் தம்மை வந்து காண்பதற்கு எளியவராகவும், இனிமையாகப் பேசும் பண்பு உடையவராகவும் இருந்தனர். சான்றோர் கூறும் அறிவுரைகள் தம் காதுகளுக்குக் கசப்பாய் இருப்பினும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் பண்பு உடையவராகவும் இருந்தனர். இவ்வாறு முறை செய்து காப்பாற்றும் மன்னர்களை மக்கள் கடவுளாகப் போற்றினர்.

இப்பாடப் பகுதியில் பாண்டிய மன்னன் கண்ணகி கூறிய சான்றினைக் கொண்டு உண்மையை உணர்வதற்கு ஆர்வம் காட்டுதல் மன்னனது நடுநிலைமையை நமக்கு விளக்குகிறது. மேலும். பாண்டியன் கண்ணகி கூறிய கடுஞ்சொற்களால் சிறிதேனும் சினவாது அமைதியுடன் இருந்து, உண்மை அறிய விரும்பி விரைந்து செயல்பட்ட பண்பு அவன் சிறந்த பண்புடைய மன்னன் என்பதைக் காட்டுகிறது.

**2.3.4** கண்ணகி சிலம்பை உடைத்தல்

மன்னனது ஆணைப்படி கோவலனிடமிருந்து பெற்ற காற்சிலம்பினை ஏவலர் கொண்டு வந்து தர, அச்சிலம்பினை வாங்கித் தானே அதனைக் கண்ணகியின் முன் பாண்டியன் வைத்தான். உடனே கண்ணகி விரைந்து அச்சிலம்பினைக் கையில் எடுத்து மன்னன் முன்னிலையில் உடைத்தாள். அச்சிலம்பு உடைந்து அதனுள் இருந்த மாணிக்கக் கற்கள் சிதறுண்டு அரசனுடைய முகத்திலும் பட்டுக் கீழே விழுந்தன.

கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு உடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே

(வழக்குரை காதை : 71-72)

- பாண்டியன் நிலைமை

பாண்டிய மன்னன் அவ்வாறு சிதறிய மாணிக்கப் பரல்களைக் கண்டவுடன் தனது வெண்கொற்றக் குடை ஒருபக்கம் விழவும், பிடிதளர்ந்து தனது செங்கோல் ஒருபக்கம் சாய்ந்து நிற்கவும், "பொற்கொல்லனின் சொல்லைக் கேட்டு அதனை உண்மையென்று துணிந்த அறிவிலியாகிய யானும் ஓர் அரசன் ஆவேனோ? இப்பொழுது யானே கோவலனின் சிலம்பைக் கவர்ந்த கள்வன் ஆகின்றேன். குடிமக்களைப் பேணிக் காத்து வருகின்ற இத்தென்னாட்டின் பாண்டியர் ஆட்சிச் சிறப்பு என்னால் பிழைபட்டு விட்டதே; ஆதலால் என் ஆயுள் அழிவதாக" என்று கூறி மயங்கி அரசு கட்டிலினின்றும் வீழ்ந்தான்.

பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகவென் ஆயுள்என

(வழக்குரை காதை : 74-77)

இவ்வாறு அரசன் தன் தவற்றை உணர்ந்ததும், தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்தினான்.

- கோப்பெருந்தேவியின் நிலை

அரச மாதேவியின் உள்ளமும் உடலும் நடுங்கின. கணவனை இழந்த கற்புடைய மகளிர்க்கு அந்த இழப்பிற்கு ஈடாகக் காட்டுவதற்கு உலகில் யாதொன்றும் இல்லை. ஆதலால் தன் கணவனுடைய திருவடிகளைத் தொழுது வீழ்ந்தனள்; உயிர் துறந்தனள்.

## 2.4 வெண்பா

இக் காதையின் இறுதியில் மூன்று வெண்பாக்கள் உள்ளன. முதல் வெண்பா கண்ணகி கூற்றாகவும், ஏனைய இரண்டும் நிகழ்ச்சியைக் கண்ட ஒருவர் கூற்றாகவும் அமைந்துள்ளன.

### 2.4.1 கண்ணகி கூற்று

'தீவினைகளைச் செய்தவர்களை அறக்கடவுளே கூற்றாக நின்று தண்டிக்கும் என்று சான்றோர் கூறிய வாக்கு வாய்மையே ஆகும். பொல்லாத பழிச் செயலைச் செய்த வெற்றி வேந்தனின் தேவியே! தீவினைக்கு ஆளான நான் இனிச் செய்கின்ற செயலையும் காண்பாயாக' என்று, கண்ணகி தான் அடுத்துச் செய்யவிருந்த செயலைப் பற்றிக் குறிப்பிட்டாள்.

அல்லவை செய்தார்க்கு அறம்கூற்ற மாம்என்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே – பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் தேவி
கடுவினையேன் செய்வதூஉம் காண்

(வழக்குரை காதை : வெண்பா எண் : 1)

(அல்லவை = தீயவை; அவையோர் = சான்றோர்; பழுது = பொய்ம்மை; வடு = பழி)

### 2.4.2 கண்டோர் கூற்று

கண்ணகியின் மலர் போன்ற விழிகளில் இருந்து சொரிகின்ற துன்பக் கண்ணீரையும், அவள் கையிலே ஏந்தி வந்த ஒற்றைச் சிலம்பினையும், உயிர் நீத்த உடம்பு போன்ற அவள் உருவத்தையும், காடு போன்று அடர்ந்து, அவிழ்ந்து சரிந்த அவளது கரிய கூந்தலையும் கண்டு அச்சமுற்று, மதுரை மன்னன் தானே அந்நிலைக்குக் காரணமானதால் உயிர் துறந்து வெற்றுடம்பாய்க் கிடந்தான். தீவினையுடையேன் இந்நிகழ்ச்சியைக் கண்கூடாய்க் கண்டேன்.

கண்ணகியினுடைய உடம்பில் படிந்த புழுதியையும், அவளது விரிந்து கிடந்த கரிய கூந்தலையும், அவளது கையிலேந்திய ஒற்றைச் சிலம்பையும் பார்த்த பொழுதே பாண்டிய நாட்டு மன்னன் வழக்கில் தோற்றான். அக்கண்ணகி வழக்குரைத்த சொற்களைக் கேட்ட அளவிலேயே மன்னன் உயிரையும் துறந்தான்.

## 2.5 தொகுப்புரை

தமிழ் இலக்கியத்தில் தொடர்நிலைச் செய்யுளாலான முதல் பெருங்காப்பியமாக விளங்குவது சிலப்பதிகாரம் ஆகும். இக்காப்பியத்தின் ஒரு காதையான வழக்குரை காதை என்ற இந்தப் பாடப் பகுதியில் கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாறு மூலம் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்; பாண்டிய மன்னன் ஆராயாது செய்த தவறே அவனது உயிருக்குக் கூற்றாய் முடிந்தது என்பதன் மூலம் அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளன.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# P10413 மணிமேகலை-விழாவறை காதை

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று மணிமேகலை. அதில் முதல் பகுதியான விழாவறை காதை என்ன சொல்கிறது என்பதை இப்பாடம் விளக்குகின்றது. குறிப்பாக, இந்திரவிழா நடைபெற்ற சிறப்பும், அனைவரும் சமய வேறுபாடில்லாமல் அதனைக் கொண்டாடிய முறையும் கூறப்படுகின்றன.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- பழங்காலத் தமிழக மாந்தர் விழா நிகழ்த்திய முறையையும், ஒப்பற்ற நாகரிகத்தையும் அறிந்து கொள்ளலாம்.
- இந்திரவிழா இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடப்பட்ட சிறப்பினையும், அதுவே பழங்கால மரபாக இருந்தமையையும் உணரலாம்.
- பூம்புகார் நகரத்தில் சான்றோர்கள் ஒருங்கே கூடி நகரின் நலம் நாடினார்கள் என்பதை அறியலாம்.
- விழா எடுப்பதால் நகரம் வளமடையும் என்றும், விழா எடுக்காவிட்டால் துன்பம் ஏற்படும் என்றும் ஒரு நம்பிக்கை அக்காலத்து மக்களிடையே இருந்ததை அறியலாம்.
- விழாக் காலங்களில் சமயப் பூசல் இல்லாமல் சமயப் பொறை காத்துள்ளனர் என்பதை அறியலாம்.
- முரசு அறைவோர் நகரத்தையும், மழையையும், செங்கோலையும் முதலில் வாழ்த்திப் பின்னரே செய்தி அறிவிப்பது மரபு என்ற செய்தியினை அறியலாம்.

# பாட அமைப்பு

3.0 பாட முன்னுரை

3.1 மணிமேகலை

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

3.2 விழாவறை காதை

3.3 இந்திர விழா

3.4 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 3.0 பாட முன்னுரை

காலந்தோறும் இலக்கியங்கள் பெருகி வருவது இயல்பே. சங்க காலத்தில் தனிநிலைச் செய்யுள்கள் புலவர்கள் பலராலும் பாடப்பட்டன. அதன் பின்னர் இலக்கிய வளர்ச்சியின் ஒரு குறிப்பிடத் தகுந்த வளர்ச்சியாகத் தொடர்நிலைச் செய்யுள் வடிவில் நூல்கள் தோன்றின. அவை கதை கூறும் நிலையில் பல இலக்கியக் கூறுகளைக் கொண்டவையாகத் தோன்றின. அவ்வாறு தோன்றிய நூல்களைக் காப்பியங்கள் என்றனர். காப்பியங்களைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இருவகைப்படுத்தினர். பெருங்காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்றாகத் திகழ்வது மணிமேகலை.

மணிமேகலை என்னும் பெருங்காப்பியத்தின் முதல் காதையாக இடம் பெறுவது விழாவறை காதையாகும். புகார் நகரில் இந்திர விழா நடத்தும் மரபு தோன்றிய வரலாறும், அதனை நடத்த ஆன்றோர்கள் எடுத்த முடிவும், அதனை முரசறைந்து வள்ளுவன் தெரிவித்த முறையும் பற்றி இந்தப் பாடத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## 3.1 மணிமேகலை

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தினையும் தமிழில் தோன்றிய ஐம்பெருங் காப்பியங்கள் என்பர். ஐந்தனுள் சிறப்புத் தகுதி வாய்ந்தவை சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகும். இவை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்று குறிப்பிடுவார்கள். இவ்விரண்டும் கதை நிகழ்ச்சியில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. மேலும் சமகாலத்தில் தோன்றியவை. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளாலும் மணிமேகலை சீத்தலைச் சாத்தனாராலும் பாடப்பட்டவை. சமண சமயச் செய்திகளைச் சிலப்பதிகாரமும், பௌத்த சமயக் கொள்கைகளை மணிமேகலையும் கூறுகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் பௌத்த சமயம் தமிழகத்தில் விரிவாகப் பரவி மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. புத்தருடைய வரலாறும், அறவுரையும் புலவர் பெருமானாகிய சாத்தனாருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதன் வெளிப்பாடே மணிமேகலையாகும். இந்நூல்,

1) கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகின்றது.

2) இதனாலேயே இக்காப்பியத்திற்கு மணிமேகலை துறவு எனச் சாத்தனார் பெயரிட்டு வழங்கினார். பின்னர், அது மணிமேகலை என்றே வழங்கப்படலாயிற்று.

3) நூல் முழுவதும் நிலைமண்டில ஆசிரியப்பா யாப்பினால் பாடப்பட்டது. முப்பது காதைகளிலும் மணிமேகலையின் வாழ்க்கை வரலாறு விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

- காப்பிய அமைப்பு

மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி என்பது போலவே தொடர்ந்து வளர்ந்து முடிகிறது. மணிமேகலையின் பிறப்பையும், கோவலன் இறந்த நிலையில் அவள் இளநங்கையாய் இருத்தலையும் சிலப்பதிகாரம் சுட்டிச் செல்கிறது. அந்த இளநங்கையைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு மணிமேகலைக் காப்பியம் பாடப்படுகிறது.

- பெயர்க் காரணம்

இக்காப்பியத்தின் கதை முழுதும் காப்பியத் தலைவி மணிமேகலையை மையமாகக் கொண்டு பாடப்பட்டதால், இந்நூலுக்கு மணிமேகலை எனப் பெயர்

வந்தது.

### 3.1.1 காப்பிய நோக்கம்

பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல் மணிமேகலையாகும். மக்களிடையே பௌத்த சமய உணர்வு மேலோங்கவும், சமயக் கொள்கைகளைப் பரப்பிடவும், அதனை நடைமுறையில் பின்பற்றவும் எழுந்த சமயப் பிரச்சார விளக்க நூல் மணிமேகலை எனலாம்.

மணிமேகலை பௌத்த சமயத்தைச் சார்ந்து, துறவியாகிப் பௌத்த சமயத்தைப் போற்றிப் பரப்பிய முறையை இக்காப்பியம் கூறுகிறது. இந்நூலில் அமைந்த முப்பது காதைகளிலும் ஊடுருவிச் செல்லும் மணிமேகலையின் வரலாற்றின் மூலமாக, காப்பியத்தின் இந்த நோக்கம் நிறைவேறி இருக்கிறது எனலாம்.

### 3.1.2 காப்பியச் சிறப்பு

இலக்கியங்கள், காலம் காட்டும் கண்ணாடி என்பர். அவ்வகையில் காலந்தோறும் தோன்றும் இலக்கியங்களில் தனி மனித வாழ்வு நிலை, சமய நிலை, சமுதாய நிலை ஆகிய மூன்றினையும் அறிந்து கொள்ளலாம். இம்மூன்று நிலைகளிலும் மனித வாழ்வு செம்மை அடைவதற்காக அறநெறிகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டதே மணிமேகலைக் காப்பியமாகும்.

- காப்பியத் தலைவி

தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருப்பதே காப்பியத்தின் இலக்கணமாகும். ஆனால் மணிமேகலைக் காப்பியத்துள் தனக்கு நிகரில்லாத தலைவியாக மணிமேகலையே எடுத்துக் காட்டப்படுகிறாள்.

- பௌத்தக் காப்பியம்

மணிமேகலை, குறிக்கோளை வெளிப்படையாகக் காட்டிக் கொள்கையைப் பரப்ப எழுதப் பெற்ற காப்பியம் ஆகும். ஆதலால் காப்பிய இலக்கணத்திற்கோ இலக்கியச் சுவைக்கோ முதன்மை தராமல் பௌத்த சமயக் கருத்துகளை விளக்குவதிலே முன்னிலை வகிக்கின்றது. இதனால் பௌத்தக் காப்பியம் என்று கூறினால் மிகையாகாது.

மாதவியின் மகளான மணிமேகலை உலக இன்ப நாட்டத்தினை அறவே வெறுத்துப் பௌத்த மதத் துறவி (பிக்குணி)யாகித் தன் பவத்திறம் அறுக என நோற்றுச் சிறப்புப் பெற்றதனைச் செந்தமிழ் நலம் சிறக்கச் சாத்தனார் பாடியுள்ளார்.

- சமுதாயச் சீர்திருத்தக் காப்பியம்

பௌத்த மதக் கோட்பாடுகள், ஒழுக்க நெறி, அரச நெறி, பசி போக்கும் அற மாண்பு இவற்றுடன், சிறைக் கோட்டங்களை அறக்கோட்டமாக மாற்றி அமைத்தல், கள்ளுண்ணாமை, பரத்தைமையை ஒழித்தல் போன்ற சீர்திருத்தக் கருத்துகளையும் சமுதாய மேம்பாட்டையும் வலியுறுத்திக் கூறுகின்ற நூலாக மணிமேகலை விளங்குகிறது. இத்தகு சீர்மையில் மணிமேகலையைச் சமுதாயச் சீர்திருத்தக் காப்பியம் என்பது சாலப் பொருந்தும்.

- மூன்று கருத்துகள்

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என்னும் மூன்று கருத்துகளையும் இக்காப்பியம் அழுத்தமாகக் கூறுகின்றது.

- காப்பியப் பெருமை

ஐம்பெருங் காப்பிய நூல்களையும் தமிழன்னையின் ஐந்து அணிகலன்களாக ஆன்றோர்கள் கற்பித்துள்ளனர். அவற்றுள் இம்மணிமேகலை மேகலை என்னும் இடை அணி ஆகும் பெருமையுடையது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.2 விழா அறை காதை

மணிமேகலை என்னும் காப்பியத்தில் முப்பது காதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் முதல் காதையாக விளங்குவது விழாவறை காதையாகும். இக்காதை, நிலைமண்டில ஆசிரியப்பா யாப்பினால் (72 அடிகள்) அமைந்தது. பூம்புகார் நகரில் இந்திர விழா நடப்பதனை அறிவித்தல் என்னும் செய்தியினை விளக்குகின்றது.

### 3.2.1 கதைச் சுருக்கம்

பண்டைக் காலத்தில், புகார் நகரத்தினை வளமுடைய நகராக ஆக்குவதற்கு அகத்தியர் நினைத்தார். அதற்காகத் தேவர் தலைவனாகிய இந்திரனுக்கு இருபத்தெட்டு நாட்கள் விழா எடுக்குமாறு, சோழ நாட்டு அரசனாகிய தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியனுக்குக் கூறினார். அரசனும் அதற்கிசைந்து அவ்விழாவைச் சிறப்புற நடத்தினான். இவ்விழாக் காலத்தில் தேவரும் புகார் நகருக்கு வந்து தங்குவர். இந்திர விழா எடுக்கத் தவறினால் நகருக்குத் துன்பம் ஏற்படும் என்று சமயவாதிகள் கருதி, விழா எடுக்க முடிவு செய்தனர். இச்செய்தியை வள்ளுவன் முரசு அறைந்து தெரிவித்தான்: செய்தியைக் கூறத் தொடங்கும் முன்.

நாடு, மழை, அரசனது செங்கோல் ஆகியவை நிலவுலகில் சிறக்க வேண்டும் என்று வாழ்த்துக் கூறினான்.

"புகார் நகர மக்களே! நம் நகரை வளமும் பொலிவும் உள்ள நகராக அழகுபடுத்தி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுங்கள்; இறைவனுக்கும், ஊரைக் காக்கும் தெய்வங்களுக்கும் உரிய வழிபாடு செய்து தீங்கின்றி நலமே பெற்று வாழ்க; சமயச் சான்றோர்களே, மக்கள் மெய்ம்மொழிகளைக் கேட்டுப் பயனடையவும் வெவ்வேறு சமயங்களின் சார்பான கருத்துகளை வெளியிடவும் பட்டி மண்டபத்தில் உரை நிகழ்த்துங்கள்; சான்றோர் உரை கேட்ட பயனால் எப்போதும் சினமும் பகையும் இன்றி வாழுங்கள்".

இவ்வாறு செய்தி வள்ளுவன் முரசு முழங்கி அறிவித்தான். மேலும் நாட்டில் பசி, பிணி, பகை இல்லாமல் மழையும் வளமும் நிறையட்டும் என்று வாழ்த்தி, நகரின் பல பகுதிகளில் விழா பற்றிய செய்தியினைக் கூறி முடித்தான்.

- கதை மாந்தர்கள்

விழாவறை காதை, கதை நிகழ்ச்சியில் இடம்பெறும் கதை மாந்தர்கள் அகத்தியர், தொடித்தோட் செம்பியன், இந்திரன், தேவர்கள், முரசறையும் வள்ளுவன் மற்றும் இந்திரவிழா எடுக்க அரசவையில் கூடியவர்கள், சமயக் கணக்கர்கள், சோதிடர்,

பன்மொழி பேசும் வேற்று நாட்டினர், ஐம்பெருங் குழுவினர், எண்பேராயத்தினர் ஆவர். இவர்கள் அனைவரும் கிளைக்கதை மாந்தர்கள்தாம். மணிமேகலைக் காப்பியக் கதையின் மாந்தர்கள் அல்லர்.

- கதை அமைப்பு

இந்திர விழா நடைபெறும் பொருட்டு வள்ளுவன் முரசறைந்து, புகார் நகருக்குச் செய்தி அறிவித்தான். இந்நிகழ்ச்சி, மக்களுக்கு விழாச் செய்தி தெரிவித்தல் என்னும் நிலையில் அமைந்துள்ளது.

# 3.3 இந்திர விழா

நாவலந் தீவிலுள்ள மாந்தர் எல்லாம் பசி, பிணி, பகை முதலியவற்றால் துன்பம் அடையாது இருத்தல் பொருட்டுத் தெய்வத்தைக் கருதிச் செய்யும் சாந்திப் பெருவிழாவே இந்திர விழாவாகும். இவ்விழாவைத் தீவகச் சாந்தி செய்தரு நன்னாள் என்று சாத்தனார் கூறுகின்றார்.

## 3.3.1 விழா வரலாறு

பழம் பெருமையும் சிறப்பும் வாய்ந்தது புகார் நகரமாகும். ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய மக்கள் பலரும் அந்நகரைப் போற்றுவர். பழஞ்சிறப்பு வாய்ந்த நகரின் புகழ் மேலும் சிறப்புற வேண்டும் என்று அருந்தவ முனிவர் அகத்தியர் நினைத்தார். அப்புகார் நகர் மேலும் வளமுடன் பொலிவடைய வேண்டுமானால் தேவர் தலைவனாகிய இந்திரனுக்கு இருபத்தெட்டு நாட்கள் விழா எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். அப்போது புகார் நகரில் இருந்து ஆட்சி செய்த மன்னன் தூங்கு எயில்கள் எனப்படும் தொங்கும் கோட்டைகளை அழித்தவனாகிய தொடித்தோட் செம்பியன் ஆவான். அவனிடம் இக்கருத்தைத் தெரிவிக்க, உடனே இசைவு அளித்து, விழா சிறப்புடன் நடைபெற ஏற்பாடு செய்தான். செம்பியன் வேண்டுகோளை ஏற்று இவ்விழாவில் தேவர் தலைவனாகிய இந்திரனும், மற்றுமுள்ள தேவர்களும் விழாத் தொடங்கிய இருபத்தெட்டு நாட்களிலும் புகார் நகரத்திலே வந்து தங்கியிருந்தனர். கேள்வி ஞானம் உடைய சான்றோர்கள் இத்தகு உயர்வு மிக்க இந்த இந்திர விழாவினைக் கொண்டாடுதலை ஒரு போதும் தவறவிட மாட்டார்கள்.

காவிரிப் பூம்பட்டினத்திற்குப் பூம்புகார் என்ற மற்றொரு பெயரும் உண்டு. புகார் நகரம் இன்று பூம்புகார் என்னும் பெயரில் வழங்கப்படுகிறது. விழாவறை காதைப் பகுதியால் இந்திர விழா தொடங்கிய முறையையும், சோழ மன்னனின் அருஞ் செயலும் ஆற்றலும் வியந்து போற்றப்படும் செய்தியையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்திர விழாவினை இருபத்தெட்டு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடும் மரபு இருந்துள்ளமையை உணர முடிகின்றது.

## 3.3.2 விழா நடத்த முடிவு செய்தல்

இந்திர விழாவினை நடத்த வேண்டும் என்பதற்காக அரசவையில் கூடியவர்கள்: இம்மை, மறுமைப் பயன்களை உணர்ந்தவரும் நால்வகை உறுதிப் பொருள்களின் உண்மை அறிந்த வரும் ஆன சமயக் கணக்கர், காலம் கணிக்கும் சோதிடர், தம் தேவ உருவினை மறைத்து மனித உருவம் கொண்ட கடவுளர்கள் (தேவர்கள்), பன்மொழி பேசும் வேற்று நாட்டினர், ஐம்பெருங் குழுவினர், எண் பேராயத்தினர் ஆகியோர் ஒன்று கூடி விழா நடத்த முடிவு செய்தனர்.

சமயக் கணக்கரும்;தந்துறை போகிய
அமயக் கணக்கரும்; அகலா ராகிக்
கரந்துரு எய்திய கடவுளாளரும் (13-16)

(சமயக் கணக்கர் = சமயவாதிகள்: அமயக் கணக்கர் = காலம் கூறும் சோதிடர்; கரந்துரு எய்திய = உண்மை உருவத்தை மறைத்த.)

ஐம்பெருங் குழு : அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தூதுவர், சாரணர் ஆகிய ஐவரைக் கொண்ட குழு.

எண்பேராயம் :கரணத்து இயலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடைக் காப்பாளர், நகர மாந்தர், நளிபடைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர் எனப்படும் எண்மரைக் கொண்ட குழு.

ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தினரும் அரசனுக்குரிய பணிகளை நிறைவேற்றக் கூடியவர்கள்.

காதையின் இப்பகுதி, பல்வேறுபட்ட மக்கள் கூடியிருத்தலைக் காட்டுகிறது. அக்காலத்தில் சமயப் பூசல் இல்லாமல் மக்கள் சமயப் பொறை (Religious Tolerance) காத்தனர் என்பதனை இதனால் நன்கு உணர முடிகின்றது.

பண்டைக் காலத்தில் ஊர்ப் பொதுக் காரியங்களை நகர் மக்களும் சான்றோரும், அரசனுடைய பணிகளைச் செய்யும் ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தினரும், பலமொழி பேசுபவர்களும், ஒருங்கு குழுமியே எண்ணித் துணியும் வழக்கம் இருந்தமையை அறிய முடிகிறது. இச்செயல் அக்காலத்து நாகரிகச் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

**3.3.3** விழாத் தொடக்கம்

இவ்விழாவினை வழக்கம்போல் நடத்தாவிடில் புகார் நகருக்கும், மக்களுக்கும் துன்பம் வந்து சேரும். கொடி பறக்கும் தேரினையும், படைப் பெருக்கத்தினையும் கொண்ட கொற்றவனாகிய முசுகுந்த மன்னனுக்கு முன்னாள் ஏற்பட்ட துயரத்தினைப் போக்கியது இப்புகார் நகரத்து நாளங்காடி (பகல் நேரக் கடைத்தெரு)ப் பூதம். அப்பூதம் தனக்கு விழாவினை வழக்கம்போல் எடுக்காவிட்டால், சிவந்த வாயினை மடித்துத் தன் வலிமையான பற்கள் வெளித்தோன்ற, இடியின் முழக்கம் போன்று குரலெடுத்து முழக்கமிட்டு, மக்களுக்கும், புகார் நகருக்கும் துன்பத்தைச் செய்துவிடும் என்று சான்றோர்கள் கூறினர். மேலும், பாவிகளைப் பாசத்தால் (கயிற்றினால்) பிடித்து உண்ணும் சதுக்கப் பூதமும் இப்புகார் நகரை விட்டு நீங்கி விடும். ஆதலினால் இந்த மிகப்பெரிய உலகத்தில் உள்ள அரசர்கள் பலரும் ஒருங்கே வந்து கூடுகின்ற இந்திர விழாவுக்கான, கால்கோள் விழாவினைச் (தொடக்க விழா) செய்யுங்கள் என்றனர் சமய

வாதிகள்.

மாயிரு ஞாலத்து அரசுதலை ஈண்டும்
ஆயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்க
(அடிகள் 25-26)

(ஆயிரங்கண்ணோன் = இந்திரன்)

இப்பகுதியால் இந்திர விழாவை மறந்து கைவிடத் தகுந்த சூழ்நிலை அந்நகரத்தில் இருந்தமையை உணர முடிகிறது. புகார் நகரத்திற்கு ஏற்படும் துன்பத்தினைத் தடுக்கவும், நகரம் வளமடையவும், இந்திர விழாவை வழக்கம்போல் கொண்டாட வேண்டும் என்னும் செய்தி வெளிப்படுகின்றது. மேலும், உலகிலுள்ள அரசர்கள் முதலாக அனைவரும் வந்து கொண்டாடும் விழா என்பது உணர்த்தப்படுகிறது.

- வள்ளுவன் முரசு அறைந்து அறிவித்தல்

வாளேந்திய வீரர்கள், தேர்ப் படையினர், குதிரைப் படையினர், யானைப் படையினர் ஆகிய நால்வகைப் படையினரும் சூழ்ந்து வந்து கொண்டிருக்க, முதுகுடிப் பிறந்த வள்ளுவன் (முரசறைவோன்) வச்சிரக் கோட்டத்தில் உள்ள முரசினை யானையின் கழுத்திலே ஏற்றி, குறுந்தடி கொண்டு முரசறைந்து, இந்திர விழா நடைபெற இருப்பதனைப் புகார் நகர மக்களுக்குப் பின்வரும் செய்திகளைக் கூறி அறிவித்தான்.

முதலில் திருமகள் விரும்பி உறைகின்ற மூதூரான இப்புகார் நகரம் வாழ்க என்று வாழ்த்தினான். பின் மாதந்தோறும் மூன்று முறை தவறாது மழை பொழிவதாகுக என்றான். ஞாயிறு, திங்கள் முதலிய கோள்கள் தம்நிலையில் மாறுபடா வண்ணம் மன்னவன் செங்கோலனாக ஆகுக என்று அரசனை வாழ்த்தி முரசறைந்து தெரிவித்தான்.

திருவிழை மூதூர் வாழ்கஎன் றேத்தி
வானமும் மாரி பொழிக! மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக. (32-34)

(திரு = திருமகள்; விழை = விரும்பும்; மூதூர் = பழைமை வாய்ந்த புகார் நகரம்; கோள்நிலை = ஞாயிறு, திங்கள் முதலான கோள்கள்.)

இப்பகுதியால் முரசறைவோர் நகரத்தையும், மழையையும், செங்கோலையும் முதலில் வாழ்த்திப் பின்னரே செய்தி அறிவிப்பது மரபு என்னும் செய்தி உணர்த்தப்படுகின்றது.

### **3.3.4** விழாவின் மாண்புரைத்தல்

தீவகச் சாந்தி விழா கொண்டாடப்படும் நன்மையுடைய நாட்களிலே ஆயிரம்

கண்களை உடைய இந்திரன் தலைமையாக வீற்றிருப்பான். அவ்விடத்திலே வசுக்கள் எண்மர், ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், மருத்துவர் இருவர் ஆகிய முப்பத்து மூவர் எனப்படும் நால்வகைத் தேவர்களும், பல பிரிவினரான தேவ கணத்தினர் பதினெண்மரும் உடனிருந்து விழாவினைச் சிறப்புச் செய்வர்.

மன்னன் கரிகால் வளவன், பகைவரை வெல்லக் கருதி, வடதிசை நோக்கிப் போயினான். அந்நாளிலே இப்புகார் நகரம் வெறுமையாகிப் பொலிவிழந்து போயிற்று. அதுபோலத் தேவர் கோமானின் பொன்னகரமான அமராபதியும் இந்திர விழா நாளில் வறிதாகிப் போகும் தன்மையில் தேவர்கள் இப்புகார் நகருக்கு வந்து விடுவர். இவ்விழாவினைக் குறித்துப் பழைய நிலையினை உணர்ந்த சான்றோர்கள் முடிவாகக் கூறிய, பொருள் பொதிந்த சொற்கள் இவையே ஆகும்.

மன்னன் கரிகால் வளவன் நீங்கியநாள்
இந்நகர் போல்வதோர் இயல்பினது ஆகிப்
பொன்னகர் வறிதாப் போதுவர் என்பது
தொன்னிலை உணர்ந்தோர் துணிபொருள் (35-42)

(பொன்னகர் = அமராபதி; வறிதாக = வெற்றிடமாக; தொன்னிலை = பழமையான வரலாறு)

இப்பகுதியில் இந்திர விழா நடக்கும் நாளில் தேவர்கள் எல்லாரும் வந்து புகாரில் தங்குவதால், அமராபதியே வெற்றிடம் ஆகிவிடும் என்று கூறுவதால் விழாவின் மேன்மை புலப்படுகின்றது.

**3.3.5** மக்களின் ஈடுபாடு

வள்ளுவன் முரசறைந்து வாழ்த்திய பிறகு, மக்களுக்கு, நகரை அழகுபடுத்தும் விதம் பற்றிக் கூறினான். கொடிகள் விளங்கும் வீதிகளிலும், குற்றமற்ற கோயில் வாயில்களிலும் பூரணக் கும்பங்களும், பொற்பாலிகைகளும், பாவை விளக்குகளும் மற்றும் பல வகையான மங்கலப் பொருள்களுடனே பரப்புங்கள்; வாழை, கரும்பு, கமுகு, வஞ்சிக்கொடி, பூங்கொடி ஆகியவற்றைக் கட்ட வேண்டிய இடங்களில் கட்டுங்கள்; விழாக் கோலம் நிறைந்த வீதிகளிலும், மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதுமணலைப் பரப்புங்கள்; சிறுசிறு கொம்புகளில் கட்டும் கொடி முதலானவற்றை மாடங்களிலும் வாயில்களிலும் கட்டுங்கள்; மேலும் நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் முதலாக இந்நகருக்குள்ளே (புகார் நகரம்) வாழும் சதுக்கத் தெய்வமான சதுக்கப் பூதம் ஈறாக உள்ள கோயில்களில் எல்லாம் செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகளை முறைப்படி செய்யுங்கள் என்று மக்களுக்கு விரிவாகக் கூறி முரசறைந்தான்.

விழவுமலி மூதூர் வீதியும், மன்றமும்

பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்;
நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின் (54-57)

(நுதல்விழி = நெற்றிக்கண்; சதுக்கத்துத் தெய்வம் = சதுக்கப் பூதம்)

இப்பகுதியால் மக்கள், வீதிகள், பொது இடங்கள், கோயில்கள் முதலான இடங்களில் அழகுபடுத்திய விதம் பற்றிய செய்தியினை அறிந்து கொள்ள முடிகிறது.

இப்பகுதி இந்திரனுக்கு விழா எடுக்கும் நாட்களில், அந்நகரத்து உறைகின்ற எல்லாத் தெய்வங்களுக்கும் விழா நிகழ்த்தப்படும் வழக்கம் மரபாய் இருந்தமையை உணர்த்துகின்றது.

- பட்டி மண்டபம் ஏறுமின்

குளிர்ந்த மணல் பரப்பிய பந்தல்களிலும் நிழல் தரும் மரங்களின் கீழ் அமைந்துள்ள ஊர்ப் பொதுவிடங்களிலும், புண்ணிய நல்லுரைகள் அறிந்தவர்கள் உரையாற்றுங்கள்; தத்தம் சமயத்தில் பொதிந்த தத்துவங்கள் சிறந்தவை என்றால், பட்டி மண்டபத்து ஏறி வாதிட்டுப் பயன் காணுங்கள்; பகை மக்களோடும் பகையும், கோபமும் கொள்ளாமல் அவரை விட்டு அகன்று செல்லுங்கள்; வெண்மணற் குன்றுகள், பூஞ்சோலைகள், நீர்த்துறை ஆகிய இடங்களில் தேவர்களும் மக்களும் சமமாக உலவிக் கொண்டு இருங்கள்; இவை அனைத்தையும் இந்திர விழா நடக்கும் இருபத்தெட்டு நாட்களிலும் எங்கும் எல்லா இடங்களிலும் பின்பற்றுங்கள். இவ்வாறு செய்தி வள்ளுவன் முரசறைந்து மக்களுக்குத் தெரிவித்தான்.

ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்;
பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமுஞ் செய்யாது அகலுமின்; (60-63)

(பற்றா மாக்கள் = பகைவர்; செற்றம் = தீராத சினம்; கலாம் = கலகம் – போர், சண்டை)

இப்பகுதியில், விழா நாட்களில் செய்ய வேண்டியன இவை, செய்ய வேண்டாதன இவை என்று வகைப்படுத்திச் சாத்தனார் கூறியுள்ளார்.

- வாழ்த்துக் கூறுதல்

பசியும், பிணியும், பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் சுரக்கட்டும் என முடிவில் வாழ்த்தினான். இவ்வாறெல்லாம் புகார் நகரில் உள்ள பட்டினப் பாக்கத்துப் பகுதிகள் அனைத்திலும் விழா அணி பற்றிய செய்தியினை வள்ளுவன் முரசறைந்து தெரிவித்தான்.

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க!என வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்

(70-72)

(வசி = மழை.)

இப்பகுதியின் வாயிலாக, முரசறையும் செய்தி வள்ளுவன், தொடக்கத்திலும் முடிவிலும் நாடு, அரசன், மக்கள் முதலியோரை வாழ்த்துதல் மரபு என்ற செய்தியினை அறிய முடிகிறது.

## 3.4 தொகுப்புரை

தமிழ் இலக்கியங்களில் இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது மணிமேகலை. இக்காப்பியத்தின் முதல் காதையாகிய விழாவறை காதை என்னும் இப்பாடப் பகுதியில் பூம்புகார் நகரில் தொன்று தொட்டு நடத்தப்பட்டு வரும் இந்திர விழாவின் சிறப்புப் பேசப்படுகிறது.

இப்பகுதி மூலம் இந்திரவிழா நடத்தப்பட்டதையும் நடத்தப்பட்ட முறையினையும் நாம் உணர முடிகிறது; விழா நாட்களில் நகரை அழகுபடுத்திய விதம் பற்றிய கருத்துகளை அறிய முடிகிறது.

இந்திர விழா நடப்பதைத் தெரிவிக்கும் வள்ளுவன் முதலிலும், முடிவிலும் ஊர், மழை, அரசன் முதலானோரை வாழ்த்துவது மரபு என்னும் செய்தி உணர்த்தப்படுகிறது.

விழா நாட்களில் மக்கள் பிறருடன் பகையும், கோபமும் கொள்ளக் கூடாது என்னும் பண்பு உணர்த்தப்படுகிறது. நாட்டில் பசி, பிணி, பகை முதலியன நீங்கி மழையும் வளமும் பெருக வேண்டும் என்று வள்ளுவன் இறுதியாக வாழ்த்தினான் என்பதும் கூறப்படுகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 4

## P10414 சீவக சிந்தாமணி - விமலை பந்தாடுதல்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

பெருங்காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்று சீவக சிந்தாமணி. இந்நூலின் எட்டாம் உட்பிரிவு விமலையார் இலம்பகம். இப்பகுதி என்ன சொல்கிறது என்பதை இப்பாடம் விளக்குகின்றது. விசயை, தன் மகன் சீவகன்பால் கொண்டிருந்த தாயன்பு புலப்படுகின்றது. அறநெறிகளைப் பின்பற்றி, பகைவனான கட்டியங்காரனை வீழ்த்தி, அரசைக் கைப்பற்றிய தன் மகன் நல்லாட்சி நடத்த வேண்டும் என்கின்ற அவளது உணர்வு வெளிப்படுகின்ற நிலையை இப்பாடம் விளக்குகின்றது.

விமலையின் பந்தாட்டச் சிறப்பும், விமலையைச் சீவகன் மணந்த வரலாறும் விரித்துரைக்கப் படுகின்றன.

சோதிடக் கலையின் நுட்பமும், கனவின் சிறப்பும் இங்குத் தெளிவாகக் காட்டி விளக்கப்படுகின்றன.

இந்தப் பாடத்தில் சீவக சிந்தாமணியின் பெயர்க் காரணமும், நூலின் அமைப்பும், சிறப்பும் குறிப்பிடப் பெறுகின்றன. நூலாசிரியரின் சிறப்பும் பெருமையும் இப்பாடத்தின் வழி தெரிவிக்கப் பெறுகின்றன.

### இந்தப் பாடத்தைப் படிப்பதனால் என்ன பயன் பெறலாம்?

- விருத்தம் என்னும் புதிய பாவகை முதன் முதலில் திருத்தக்க தேவரால் கையாளப்பட்டது என்பதனை அறிந்து கொள்ளலாம்.
- தாயன்பு, சகோதரத்துவம், நட்புப் பாராட்டல் முதலான பண்புகள் வெளிப்படுவதனை இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.
- கனவுக் காட்சி பலித்தல், சோதிடக் கலையின் தன்மை, நாட்டுப் பற்று, அரச நெறிமுறைகள் முதலான செய்திகளைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.
- நூல் ஆசிரியரின் பெருமை, பாட்டுடைத் தலைவன் சீவகனின் சிறப்பு, விமலையின் தனித்திறன், இலக்கியச் சிறப்பு ஆகிய செய்திகளை முறைப்படுத்திக் காணலாம்.
- பண்டைத் தமிழரின் பண்பாட்டு நிலைகளைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை

4.1 சீவக சிந்தாமணி

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

4.2 விமலையார் இலம்பகம்

4.3 இலம்பகத்தில் இடம் பெறும் நிகழ்ச்சிகள்

4.4 இலக்கியச் சிறப்பு

4.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 4.0 பாட முன்னுரை

தமிழ் மொழிக்கு வளமையும், பெருமையும் சேர்க்கும் இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகத் திகழ்வது காப்பியமாகும். சங்கம் மருவிய காலத்தில் தொடங்கி, இடைக்காலத்தில் மிகுதியாகப் படைக்கப்பட்ட பெருமை உடையது காப்பியமாகும். ஐம்பெருங் காப்பியங்களுள் சீவகசிந்தாமணியும் ஒன்று. இந்நூலின்கண் எட்டாவது இலம்பகமாக விமலையார் இலம்பகம் விளங்குகின்றது. இப்பகுதியில் காப்பிய நாயகனான சீவகனின் காதலும், வீரமும் வெளிப்படுகின்றன. மேலும் இந்தப் பாடம் விமலை பந்தாடும் திறன், அவள் சீவகனை மணந்து கொள்ளுதல் ஆகிய செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறது.

# 4.1 சீவக சிந்தாமணி

தமிழில் முழுமையாகக் கிடைக்கும் காப்பியங்களுள் ஒப்பற்றதாய்த் திகழ்வது சீவக சிந்தாமணி ஆகும். சீவக சிந்தாமணி என்னும் காப்பியம் கதை அமைப்பு, கதை மாந்தர் படைப்பு, நூற்பயன் முதலான கூறுகளால் முழுமை பெற்றுத் திகழ்கின்றது. விருத்தம் என்னும் புதிய பாஇனம்-இந்நூலில் முதன் முறையாகக் கையாளப்பட்ட சிறப்புடையது. அதனால் இக்காப்பியம் பிற்காலத்தில் எழுந்த கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காப்பியங்களுக்கு அடிப்படையாகவும், முன்னோடியாகவும் அமைந்துள்ள பெருமையுடையது.

## 4.1.1 பெயர்க் காரணம்

சிந்தாமணி – ஒளி கெடாத ஒரு வகை மணி. இந்நூலிற்கு இப்பெயர் அமைந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒளி கெடாத மணி போன்றது என்ற காரணமே இந்நூலுக்குப் பொருத்த மானதாகும். இந்நூல் தோன்றிய காலம் முதல் புகழ் குன்றாது நின்று நிலவுவதே தக்க சான்றாகும்.

இலக்கண நூலார், சிந்தாமணி என்பது நெஞ்சின் கண் பொதிந்து வைத்தற்குரிய ஒரு மணி போன்றது என்பர். அதுபோல் இந்நூலைப் படிப்போர் அறிவுப் பொருள் அனைத்தும் ஒருங்கே பெறுமாறு படைத்தலால் இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம்.

காவியத் தலைவனான தன் மகனை விசய மாதேவியார் முதன் முதலாக இட்டு விளித்த பெயர் சிந்தாமணி என்பதாகும். பின்னர் வழிபடு தெய்வம் வானொலியாக 'சீவ' என்று வாழ்த்தியது. அதற்குப் பின் அக்குழந்தைக்குச் சீவகன் என்று பெயரிட்டனர். சீவகனின் வரலாற்றை முழுமையாகத் தெரிவிப்பதால் சீவக சிந்தாமணி என்று இந்நூல் பெயர் பெற்றது.

## 4.1.2 நூலாசிரியர்

சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்தைப் படைத்தவர் திருத்தக்க தேவர். சோழர் குலத்தில் அரச மரபைச் சார்ந்தவர். சமண சமயத்தைச் சார்ந்தவர். தீபங்குடியில் பிறந்தவர். இவருடைய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும்.

சமணத் துறவிகள் அறக்கருத்துகளை மட்டும் அன்றி இல்லறச் சுவையையும் பாட முடியும் என்பதனை நிறுவும் பொருட்டு இந்நூலை இயற்றினார் திருத்தக்க தேவர்.குருவின் வேண்டுகோளுக்கு இணங்க நரி விருத்தம் பாடிய பிறகே சீவக சிந்தாமணியைப் பாடினார். இத்தகு சிறப்புக் கொண்ட திருத்தக்க தேவரைத் 'தமிழ்க்

கவிஞர்களுள் சிற்றரசர்' என்று வீரமாமுனிவர் பாராட்டுகின்றார். தேவர், திருத்தகு முனிவர், திருத்தகு மகாமுனிவர், திருத்தகு மகாமுனிகள் என்னும் பெயர்களாலும் வழங்கப்படுவார்.

### 4.1.3 நூல் கூறும் செய்தி

சச்சந்தன் விசயை என்போர் சீவகனின் பெற்றோர் ஆவர். கட்டியங்காரன் என்னும் அமைச்சன் சூழ்ச்சியால் மன்னன் சச்சந்தனைக் கொன்று, ஏமாங்கத நாட்டினைக் கைப்பற்றினான். குழந்தைப் பருவம் முதற்கொண்டு சீவகனைக் கந்துக்கடன் என்னும் வாணிகன் வளர்த்து வந்தான். உரிய பருவம் எய்தியதும் தன் நாட்டைப் பெறுவதற்குத் தாயின் அறிவுரையோடு, மாமன் கோவிந்தனின் துணைக்கொண்டு போரிட்டு வென்றான், சீவகன். அச்செய்திகளை விரிவாக விளக்கிக் கூறும் நூலே சீவக சிந்தாமணி ஆகும்.

### 4.1.4 நூல் அமைப்பு

சீவக சிந்தாமணி என்னும் பேரிலக்கியம், நாமகள் இலம்பகம் முதலாக முத்தி இலம்பகம் ஈறாக, 13 இலம்பகங்களைக் கொண்டு திகழ்கின்றது. இலம்பகம் யாவும் மகளிர் பெயரினையே பெற்றுள்ளன. ஒவ்வோர் இலம்பகத்திலும் ஒரு மண நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. இலக்கியச் சிறப்பு மிக்க இந்நூலில் 3145 பாடல்கள் உள்ளன. விருத்தம் என்னும் பாவகையால் பாடப் பெற்றது.

### 4.1.5 நூலின் சிறப்பு

சீவகனின் வீர தீரச் செயல்கள், பேரழகு, பேராற்றல், போராற்றல், அரச குடும்பத்தின் செயல்கள், அரசியல் நெறிமுறைகள், மனித குல மேம்பாட்டிற்குத் தேவையான அறக்கருத்துகள் கூறுதல் முதலான பல செய்திகளைக் கொண்டதாக இந்நூல் விளங்குகின்றது. சீவகன் தன் ஆற்றலால் எட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றான். இதனால் இந்நூலுக்கு மணநூல் என்ற பெயரும் உண்டு. திருத்தக்க தேவர் தம் நூலுக்குச் சிந்தாமணியின் சரிதம் என்றே பெயரிட்டனர்.

சிந்தாமணி ஒரு சமயக் காப்பியமாகும். வட மொழியிலுள்ள கத்திய சிந்தாமணி, சத்திர சூடாமணி, ஸ்ரீ புராணம் ஆகிய நூல்களில் சீவகன் கதை காணப்படுகிறது. அவற்றைத் தழுவித் தமிழில் சீவக சிந்தாமணி என்னும் பெரு நூலாகத் தந்துள்ளார் திருத்தக்க தேவர்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 4.2 விமலையார் இலம்பகம்

சீவக சிந்தாமணியில் எட்டாம் உட்பிரிவாக விமலையார் இலம்பகம் இடம் பெற்றுள்ளது. இவ்விலம்பகத்தில் 106 விருத்தப் பாடல்கள் அமைந்துள்ளன.

### 4.2.1 கதைச் சுருக்கம்

சீவகன், பலவகை மாலைகளையும், வெற்றி வேலையும் உடையவன். அவன் தம்பி நந்தட்டன், 'சீவகன் ஒரு மாமணி. அவனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்' என்று நண்பன் பதுமுகனிடம் கூறினான். பிறகு ஏமமாபுரத்திலிருந்து குதிரை மீதேறி, சீவகன் தன் தோழர்களும், மறவர்களும் புடை சூழ, தன் தாய் விசயை தங்கியிருக்கும் காட்டிலுள்ள தவப் பள்ளிக்குச் சென்றான். அங்கு விசயை வைகறையில் கண்ட கனவு நனவாகும்படி நேரில் மகனைக் கண்டாள். சீவகன் தன் தாயின் காலில் விழுந்து வணங்கினான். விசயை தாயன்பு மீதூர்ந்தவளாக ஆனந்தம் கொண்டாள். பின்னர் தன் மகனுக்கு அரசர்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகளையும், பகைவரை வெற்றி கொள்ள வேண்டிய வழிமுறைகளையும் தெளிவாக எடுத்துக் கூறினாள்.

விசயை, தன் நாட்டைக் கைப்பற்றிய கட்டியங்காரனைக் கொல்லத் தாய்மாமன் கோவிந்தனைத் துணையாகக் கொள்ளும்படி மகனைப் பணித்தாள். பின்னர்ச் சீவகன், விசயையைத் தன் மாமனாகிய கோவிந்தனின் இருப்பிடத்திற்கு அனுப்பினான். பின்பு, சீவகன் தன் தோழர்களுடன் புறப்பட்டு ஏமாங்கத நாட்டிலுள்ள இராசமாபுரத்தை அடைந்து, நகர்ப் புறத்தேயுள்ள ஒரு சோலையில் தங்கினான். மறுநாள் காலையில் சோலையிலேயே நண்பர்களை இருக்கச் செய்து விட்டுத் தான் மட்டும் வேற்றுருவில் நகருக்குள் சென்றான்.

அந்நகரத்தின் சாகர தத்தன் என்னும் வணிகனின் மகள் விமலை ஆவாள். அவள் பந்தாடுவதில் வல்லவள். அவளது அழகும், விளையாட்டும் சீவகனது மனத்தை மயக்கின. சீவகனும் அவளை மறக்க முடியாதவனாய், அவள் தந்தையின் கடையருகே வந்து நின்றான்.

சீவகன் கடையருகே வந்தவுடன், விலையாகாமல் நெடுநாள் தேங்கிக் கிடந்த பொருட்கள் எல்லாம் விலை போயின. அது கண்ட தத்தன் சீவகனை நோக்கி, அன்போடு வரவேற்றான். "முன்பு ஒரு சோதிடன், உன் மகளுக்குரிய கணவன், உன் கடைக்கு வலிய வருவான். அப்படி அவன் வலிய வந்ததும் உன் கடையில் விற்காது கிடந்த பழஞ்சரக்கெல்லாம் விற்று முதலாகும்" என்று அவள் பிறந்த போதே பயனைக் கணித்துக் கூறியிருந்தான். இன்று நீ என் கடையருகே வந்து நின்றதும் என் இருப்பெல்லாம் விற்றுத் தீர்ந்தன. எனவே நீதான் அச்சோதிடன் கூறிய, என் மகள் விமலைக்கேற்ற கணவனாவாய்" என்று கூறி அவனைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று

விமலையைத் திருமணம் செய்து கொடுத்தான். சீவகன் விமலையோடு கூடி இரண்டு நாள் இன்புற்று இருந்து, பின் தன் தோழர்களை அடைந்தான்.

- கதை மாந்தர்கள்

இவ்விலம்பகத்தில் விசயை, சீவகன், கோவிந்தன், தம்பி நந்தட்டன், நண்பன் பதுமுகன், சாகர தத்தன், கமலை, விமலை, சோதிடன் ஆகியோர் கதை மாந்தர்களாக இடம் பெற்றுள்ளனர்.

## 4.3 இலம்பகத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகள்

விமலையார் இலம்பகத்தில், விசயை, சீவகனுக்குக் கூறிய அறவுரைகளும், சீவகன் தெருவில் சென்ற காட்சியும், விமலை சீவகனைக் காணுதலும், திருமணமும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெற்றுள்ளன.

### 4.3.1 விசயையின் அறவுரைகள்

விசயை, தன்னைக் காண வந்த அன்பு மகனைச் சீராட்டி, பாராட்டினாள். நூல் வல்லார் கூறுகின்ற அரசர்கள் கைக்கொள்ள வேண்டிய நெறி முறைகளையும், வெற்றி வாழ்வினைப் பெறக் கைக்கொள்ள வேண்டிய நெறிகளையும் எடுத்துக் கூறினாள். மேலும், "உன் மாமன் கோவிந்தனோடு சேர்ந்து, அவன் சொற்படி நடந்து, நம்மோடு நிலைபெற்று இருக்கின்ற பகையையும் பகைவரையும் வெல்வாயாக" என்று கூறினாள் விசயை.

சீவகன் உடனே, "என் மீது வைத்த அன்பினால் கவலை கொள்ள வேண்டாம். நீங்கள் மாமனின் இருப்பிடம் சென்று தங்கியிருங்கள்" என்றும், "நான் ஏமாங்கத நாடு சென்று, பகையழித்து வெற்றியுடன் வருகின்றேன்" என்றும் கூறிப் புறப்பட்டான்.

மாமன் மற்றுன்
சீர்தோன்ற வேமலருஞ் சென்றவன் சொல்லி னோடே
பார்தோன்ற நின்ற பகையைச்செறற் பாலை யென்றாள்.
(பாடல் -43)

(மாமன் மலரும் = மாமன் மனம் மகிழும்; செறற் பாலை = கொல்லத் தக்காய்)

அரசர்கள் கைக்கொள்ள வேண்டிய நெறிகள்

1) இறையாக வந்த செல்வத்தை ஆறில் ஒரு பங்கு பெருக்குதல்

2) பழம் பகையை மனத்தில் இருத்துதல்

3) பகைவரை, அவர் பகைவரோடு மோத விடுதல்

4) பல பகைவர்கள் இருப்பின் அவர்களைப் பிரித்துத் தம்மிடம் சேர்த்துக் கொள்ளுதல்.

வெற்றி வாழ்வைப் பெறும் நெறிகள்

1) பல்வகை வெற்றிகளை உண்டாக்குதல்

2) மேல்நிலையை அடைதல்

3) மெலியவரை வலியவராக்குதல்

4) கல்வி, அழகு உண்டாகச் செய்தல் முதலான செயல் புரிவதால் பல நாடுகள் கிடைக்கும். இறையாகப் பெரும் பொருள் வந்து சேரும். உலகில் கிடைக்காதது ஒன்றுமில்லை என்று நினைத்தல்.

**4.3.2** தெருவில் கண்ட காட்சி

சீவகன் குதிரை மேலேறி மலை, காடு, வயல், அருவி கடந்து ஏமாங்கத நாடு அடைந்தான். பிறகு இராசமாபுர நகரின் வளம் காணும் பொருட்டு, அழகிய வடிவங்கொண்டு வெளியே சென்றான். அத்தெருவிலே நின்று கொண்டிருந்த பெண்களின் அழகு, துறவிகளையும் இல்லறத்திலே ஈடுபடத் தூண்டும் தன்மையுடையதாக இருந்தது. அவ்வழி வந்த சீவகனின் அழகினைக் கண்ட பெண்கள். இவன் முருகனோ? மன்மதனோ? யார் என்றே தெரியவில்லையே? தெரிந்தால் கூறுங்கள் என்று வருத்தப்பட்டனர். அத்தெருவின் ஒரு புறத்தில் விமலை பந்தாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது பந்து, தெருவின் ஓரத்தில் ஓடிச் சென்றது. அப்பந்தை எடுக்கச் சென்ற போது, அவள் சீவகனைக் கண்டாள். இருவரும் கண்களால் கலந்து, காதல் நோயால் அவதியுற்றனர்.

மின்னின் நீள்கடம் பின்னெடு வேள்கொலோ
மன்னும் ஐங்கணை வார்சிலை மைந்தனோ
என்ன னோஅறி யோம்உரை யீர்எனா.... (பாடல் – 60)

(நெடுவேள் = முருகன்; என்னனோ = யார் தான் என்று)

**4.3.3** விமலை பந்தாடுதல்

விமலை, மான்போலும் மருளும்நோக்குடைய கண்களை உடையவள். தேவமகளைப் போன்ற அழகுடையவள். பால் போலும் இனிய மொழி பேசுபவள். பெண்மைக்கு அழகுதரும் நீங்காத நிறங்கொண்டவள். மார்பிலே மந்தார மாலையினை அணிந்தவள். ஒரே நேரத்தில் ஐந்து பந்துகளை விடாமல் பந்தடிக்கும் திறனுடையவள்.

மானொடு மழைக்க ணோக்கி வானவர் மகளு மொப்பாள்
பானெடுந் தீஞ்சொ லாளோர் பாவைபந் தாடு கின்றாள்
(பாடல் – 63)

மலை தன்னுடைய அழகிய கைகளிலே ஐந்து பந்துகளைக் கொண்டு

ஆடினாள்.

1) மேலே எழும்பியும் முறை தவறிக் கீழே விழுதலின்றியும் ஓடுகின்ற பந்து, கூடச் சென்று ஆடும் போது மாலைகளுக்குள் சென்று மறைந்த பந்து கைகளுக்கு வந்து சேரும்.
2) கருங் கூந்தலுக்குப் பின்புறம் சென்று மறைந்த பந்து, அழகுடைய முகத்தின் முன்னே வரும்.
3) தலைக்கு மேலே சென்ற பந்து, மார்பில் அணிந்த மாலைக்கு நேரே வந்து சேரும்.
4) இன்னும் தலை மாலைக்கு மேலே உயரப் போன பந்து, கை விரல்களுக்கு இடையிலும் வந்து சேரும்.
5) இடையில் மாலை தொடுத்தும், குங்குமம் அணிந்தும் படிப்படியாக உயரும்படி பந்தினை அடித்தும், தன்னைச் சுற்றி வட்டமாக வரும்படி பந்தினை எறிந்தும் மயில் போலப் பொங்கியும், வண்டும் தும்பியும் தேன் உண்ணாமல் பாட, வலிமையோடு பந்தாடினாள் விமலை.

அங்கை யந்த லத்த கத்த ஐந்து பந்த மர்ந்தவை
மங்கை யாட மாலை சூழும் வண்டு போல வந்துடன்
(பாடல் – 65)

(அங்கை அம் தலத்த = அழகிய உள்ளங்கையினிடத்தில்)

இப்பகுதியில், விமலை பந்தாடிய விதம் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. பாடலின் சந்தம் (ஓசை) பந்தாடும் அசைவுகளை உணர்த்துவது போல் உள்ளது அல்லவா?

**4.3.4** திருமணம்

சீவகனும் விமலையும் தம்முள் மாறி மாறிக் காதல் நோயால் அவதியுற்றனர். விமலையின் அழகினைப் பார்த்துத் திகைப்புடன், அவள் தந்தை சாகர தத்தன் கடையருகில் சீவகன் நின்றான். அப்போது விற்காமல் தேங்கிக் கிடந்த பழஞ் சரக்குகளெல்லாம் ஆறு கோடிப் பொன்னுக்கு மேல் இலாபத்துடன் விற்று விட்டது. இதனைக் கண்ட விமலையின் தந்தை சாகர தத்தன், சீவகனைக் கண்டு மகிழ்ந்தான். அவனைத் தன் மாளிகையில் இருத்தி, இந்த இல்லம் இனி இருப்பிடம் என்று கூறினான். “எனக்கும் என் வாழ்க்கைத் துணைவி கமலைக்கும் பிறந்த அழகுப் பெண்ணே விமலை என்பாள். அவள் பிறந்த பொழுது அவளின் எதிர்கால வாழ்வைக் கணித்துக் கூறினான் ஒரு சோதிடன். “பன்னிரண்டாம் வயதில் இம்மங்கைக்குரிய மணவாளன், உன் கடையின் அருகே வருவான். அப்போது தேங்கிய பொருட்கள் எல்லாம் விற்று விடும்” என்பதே அவன் கணித்துக் கூறிய செய்தியாகும்” என்றான்.

திருமல்க வந்த திருவேயெனச் சேர்ந்து நாய்கன்,
செருமல்கு வலோய்க் கிடமால் இதுவென்று செப்ப
(பாடல் – 86)

மங்கைக் குரியான் கடையேறும்வந் தேற லோடும்
வங்கந் நிதிய முடன்வீழுமற் றன்றி வீழா
தெங்குந் தனக்கு நிகரில்லவ னேற்ற மார்பம்
நங்கைக் கியன்ற நறும்பூ வணைப்பள்ளி யென்றான்.
(பாடல் – 89)

(திருமல்க = செல்வம் பெருக; திருவே = செல்வமே; நாய்கன் = வணிகன்; செரு = போர்; வலோய்க்கு = வேலினை உடைய உனக்கு)

“சோதிடன் கூறிய செய்தி, இன்று நடந்ததால் நீயே என் மகளுக்குக் கணவனாவாய், இவளைத் தழுவி இன்பநலம் பெறுக” என்றும் கூறினான் சாகர தத்தன். புதுமனையில் இருத்தி மங்கல இசை முழங்கத் திருமணம் புரிவித்தான். இருவரும் ஒன்று கூடிய அன்பால் இரு உடலும் ஓர் உயிரும் ஆனார்கள். பின் சீவகன் விமலையுடன் இரண்டு நாட்கள் கூடியிருந்து, பின் சோலையில் தங்கியிருந்த தன் தோழர்களைக் காணவேண்டும் என்று கூறிப் பிரிந்து சென்றான்.

இப்பகுதி, விமலைக்குத் திருமணம் நடந்த விதம் பற்றி உணர்த்துகின்றது.

# 4.4 இலக்கியச் சிறப்பு

காப்பிய இலக்கண மரபுப்படி அமைந்த முதல் காப்பியம் சீவக சிந்தாமணி. இது விருத்தப்பாவில் அமைந்துள்ளது. வருணனைக்குப் பொருத்தமான பாவாக அது விளங்குகிறது.

## 4.4.1 இயற்கை வருணனை

விமலையார் இலம்பகத்தில் சீவகன் ஏமாங்கத நாடு செல்லும் போது காட்டினைக் கடந்து சென்றான். அங்குக் காணப்பட்ட இயற்கையழகைத் திருத்தக்க தேவர் சுவைபட வருணித்துள்ளார்.

பெரிய மலைகளில் மலையாடுகள் தம் கால்களால் மிதித்த மணிகள் பலவும் செந்துகள்களாயின. அத்துகள்கள் மலையிலிருந்து கொட்டுவது, விண்ணுலகமே உளுத்துக் கொட்டுவதாய்த் தோன்றியது. இப்படி விழுந்த அந்த மணிகளின் செந்துகள்கள் படிந்த மரங்கள் கற்பகத் தருவை ஒத்துத் தோன்றின.

அண்ணலங் குன்றின்மேல் வருடைபாய்ந் துழக்கலின்
ஒண்மணி பலவுடைந் தொருங்கவை தூளியாய்
விண்ணுளு வுண்டென வீழுமா நிலமிசைக்
கண்ணகன் மரமெலாங் கற்பக மொத்தவே
(பாடல் – 11)

(வருடை = மலையாடு; உழக்கல் = மிதித்தல்; தூளி = துகள்; உளுவுண்டென= உளுத்தது போல )

மணிகளின் செந்துகள் படிந்த மரம், கற்பக மரத்திற்கு ஒப்பாயிற்று.

## 4.5 தொகுப்புரை

நண்பர்களே! இதுவரை விமலையார் இலம்பகம் பற்றிய செய்திகளை அறிந்திருப்பீர்கள். இந்தப் பாடத்திலிருந்து என்னென்ன செய்திகளை அறிந்து கொண்டீர்கள் என்பதை மீண்டும் ஒரு முறை நினைவு படுத்திப் பாருங்கள்.

1) சிந்தாமணி என்றால் என்ன என்பது பற்றியும், சீவக சிந்தாமணி கூறும் செய்திகளைப் பற்றியும் அறிந்தீர்கள்.

2) விமலையார் இலம்பகம் கூறும் செய்திகளைப் பற்றி, சிறப்பு நிலையில் விளக்கமாக அறிந்து கொண்டீர்கள்.

3) கதை அமைப்பு, பாத்திரப் படைப்பு முதலியவற்றால் பிற்காலத்தில் தோன்றிய காப்பியங்களுக்குச் சீவக சிந்தாமணி அடிப்படையாக விளங்கியதை அறிய முடிகிறது.

4) சீவக சிந்தாமணியின் ஆசிரியர், பாட்டுடைத் தலைவன், நூலின் இலக்கியச் சிறப்புகள் முதலியன பற்றி விரிவாக உணர்ந்து கொண்டீர்கள்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 5

## P10415 கம்பராமாயணம் - கங்கைப் படலம்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் காப்பியங்களில் ஒன்று இராமாயணம். அதில் அயோத்தியா காண்டத்தின் ஒரு பகுதியான கங்கைப் படலம் என்ன சொல்கிறது என்பதை இப்பாடம் விளக்குகின்றது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- பெரியோரைக் (அரசனைக்) காணுங்கால், கையுறை எடுத்துச் செல்ல வேண்டும் என்னும் நாகரிகம் வெளிப்படுகிறது.
- தான் வேடர் தலைவனாயினும், சக்கரவர்த்தித் திருமகனுக்குக் கட்டுப்படுகின்ற குகனின் உயர் பண்பு குறிப்பிடத் தக்கதாகும்.
- இராமன் சக்கரவர்த்தித் திருமகனாயினும் வேடனாகிய குகனோடு அவன் கொள்ளுகின்ற நட்பு, தோழமை ஆகியவை இராமனின் உயர்பண்பை வெளிக்காட்டுகின்றன.
- ஒவ்வொருவரையும் அவரவர் பணியில் நிறுத்தும் இராமனின் நிர்வாகத்திறன் (தலைமைப் பண்பு) மேலோங்கி நிற்பதனைக் காணலாம்.
- அன்புடையாரைக் காணுங்கால், மகிழ்வது மட்டுமன்றி, அவர் இடருற்ற பொழுது அவர்க்கு உற்றுழி உதவ வேண்டும் என்கின்ற உயர்ந்த பண்புடையவன் குகன் என்பதை இப்படலத்தின் வழி உணர முடிகின்றது.
- அன்பால் அகிலத்தை ஆளலாம் என்னும் உயர்ந்த கருத்து, இப்படலத்தில் சிறப்பாக வெளிப்படுவதை அறியலாம்.
- அன்பால், உடன்பிறப்பு என்னும் உறவுமுறை விரிவடையும் தன்மையைக் கம்பர் காட்டுவதை அறிந்து மகிழலாம்.

# பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை

5.1 கம்பராமாயணம்

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

5.2 குகன்

5.3 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 5.0 பாட முன்னுரை

புலவர்களது கவித்திறனின் பேரெல்லையைக் காட்டும் இலக்கிய வகைகளில் ஒன்று காப்பியமாகும். தமிழில் காப்பியம் சங்கம் மருவிய காலத்தே தோன்றிய சிறப்பினையுடையது. இடைக்காலத்தில் பரவலாகக் காப்பியங்கள் தோன்றலாயின. காப்பியங்களுள் சிறந்ததாகப் போற்றப்படுவது கம்பராமாயணம் ஆகும். கம்பராமாயணத்தில் ஆறு காண்டங்கள் உள்ளன. அவற்றுள் இரண்டாவது காண்டம் அயோத்தியா காண்டம். அதன் ஒரு பகுதியாகக் கங்கைப் படலம் விளங்குகிறது. அப்படலத்தில் காப்பிய நாயகனான இராமனின் தலைமைப் பண்பு வெளிப்படுகிறது. அதனையும் குகன் இராமன் மீது கொண்டிருந்த அன்பையும் பக்தியையும் இப்பாடத்தின் மூலமாக அறியலாம்.

## 5.1 கம்பராமாயணம்

தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் காப்பிய நூல்களுள் ஒன்று இராமாயணம். இந்நூலின் ஆசிரியர் கம்பர்.

சமயக் காப்பியங்களுள் இது வைணவ சமயத்தைச் சார்ந்தது. இந்தக் காப்பியம் தோன்றிய காலம் இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆண்ட, கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகும். சிலர் ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் கூறுவர். சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் மரபில் தோன்றிய கம்பரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல் ஆவார்.

வான்மீகி முனிவர் வடமொழியில் இராமாயணத்தை இயற்றினார். அதனை, தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப ஈடும் இணையும் இல்லாமல் கம்பர் தமிழில் தந்த காவியமே இராமாயணமாகும். கம்பர், தம் நூலுக்கு இராமாவதாரம் என்று பெயரிட்டார்.

- காப்பிய அமைப்பு

இக்காப்பியம் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களைக் கொண்டது. இந்த ஆறு காண்டங்களின் சிறு பிரிவுகளாக 113 படலங்கள் உள்ளன. மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 10,500 ஆகும்.

(காண்டம் – பெரும்பிரிவு; படலம் – சிறுபிரிவு.)

- பெயர்க் காரணம்

இக்காப்பியத்தின் கதை இராமனின் வரலாற்றைப் பற்றித் தெரிவிப்பதால் இராமாயணம் எனப்பட்டது. கம்பர் எழுதியதால் கம்ப இராமாயணம் எனப்பட்டது. இராம + அயணம் என்ற வடமொழிச் சொற்கள் இணைந்து இராமாயணம் என்றாயிற்று.

- காப்பிய நோக்கம்

அடிப்படையில் அறமும், சமயமும் காப்பியத்தின் பொருளாக அமைகின்றன. மனிதர் யாவருக்கும் பயன் தரும் ஒழுக்க முறைகளையும் பண்பாட்டினையும் குறிக்கோளினையும் ஆட்சிச் சிறப்பினையும் விளக்கும் அருமையான இலக்கியமாகத் திகழும் சிறப்புடையது கம்பராமாயணமாகும்.

### 5.1.1 காப்பியச் சிறப்பு

இந்நூல் நடையில் நின்றுயர் நாயகனாக விளங்கும் இராமன், தெய்வநிலையில் இருந்து இறங்கி மானுட நிலையில் மனிதனாக வாழ்ந்து காட்டிய தன்மைகளையும், சிறப்புகளையும் விளக்கும் ஓர் ஒப்பற்ற நூலாகும். இந்நூலில் கம்பர் வலியுறுத்தும் நீதியும் அறனும் மக்கட் சமுதாயம் அனைத்திற்கும் பொதுவானவை ஆகும்.

- காப்பியத் தலைவன்

இலக்கணப்படி, காப்பியம் தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வகையில் கம்பராமாயணத்தில் இராமனே தன்னிகரில்லாத் தலைவனாகப் போற்றப்படுகின்றான்.

- வைணவக் காப்பியம்

திருமாலின் மானுட அவதாரமே இராமாவதாரமாகும். இந்நூலில் வைணவ சமயக் கருத்துகள் விரவிக் கிடக்கின்றன. மேலும் உயர்ந்த இலட்சியங்களை முன்னிறுத்தி இராமனை மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்திக் காட்டும் இலக்கியமே கம்பராமாயணமாகும். பல உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டு பாடப்பட்ட சமய நூலாக இந்நூல் விளங்குகிறது எனலாம்.

- நீதி உணர்த்தும் காப்பியம்

கம்பராமாயணம் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கற்பு நெறி நின்று வாழவேண்டும் என்ற உண்மையை ஏகபத்தினி விரதனாம் – இராமன் மூலம் தெரிவிக்கின்றது. பிறன் மனைவியை விரும்பினால் அவனும் அவனைச் சார்ந்த சுற்றமும் குலமும் அழிந்துவிடும் என்பதை இந்நூல் விளக்குகின்றது. பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப என்னும் நீதி (கிளை = சுற்றம்) இந்நூல் மூலம் உணர்த்தப்படுகிறது.

**5.1.2** இலக்கியச் சிறப்பு

காப்பியத்தில் கதைப் பாத்திரங்களின் இயல்புக்கு ஏற்றவாறும் சூழலுக்கு இசைந்தவாறும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றவாறும் உரிய சந்தங்களோடு (சந்தம் = ஓசை நயம்) அமைத்துக் கம்பர் பாடியிருப்பதால் கற்போர் உள்ளத்தில் நன்கு பதிந்து விடுகின்றது.

கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ என்னும் கருத்திற்கு ஏற்ப, கம்பராமாயணம் உயர் கருத்துகளைத் தெரிவிப்பதாக விளங்குகின்றது. மேலும் வான்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய காப்பியமாகக் கம்பர் படைத்துள்ளார் என்று வ.வே.சு. ஐயர் போற்றியுள்ளார்.

கல்வியில் பெரியர் கம்பர் என்றும் கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்றும் வழங்கும் மொழிகள் அவரது கவித்திறனைப் பறை சாற்றும். பாரதியார் தம் பாடலில் புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்று போற்றியுள்ளார்.

“யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை” என்றும் பாராட்டியுள்ளார் பாரதியார்.

கதைப் பாத்திரங்களை மனிதப் பாங்கின் அடித் தளத்திலிருந்து பேச வைத்து, உணர்ச்சியை வெள்ளம் போலப் பெருகி ஓட விட்டுப் பாத்திரங்களைப் படைத்துக் காட்டுகின்ற தன்மையால் கம்பர் உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராகத் திகழ்கின்றார். உலக மகாகவி, கவிச்சக்கரவர்த்தி என்றும் தமிழறிஞர்களால் சிறப்பிக்கப்படுகின்றார்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 5.2 குகன்

இராமன் வனவாசம் செல்லத் தொடங்கும் பொழுது முதன் முதல் அறிமுகமானவனும் துணை செய்தவனும் குகன் ஆவான். அவனது பண்பு நலன்களைக் கண்ட இராமன், அவனைத் தன் தம்பியருள் ஒருவனாக ஆக்கிக் கொண்டவன்.

### 5.2.1 தோற்றமும் பண்பும்

குகன், வேட்டுவர் குலத் தலைவன்; அரையில் ஆடையும் காலில் தோல் செருப்பும் அணிந்தவன்; இடுப்பைச் சுற்றிக் கட்டிய ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்ட புலி வாலை உடையவன்; வீரக் கழலுடன் அணிகலன்கள் பல அணிந்தவன்; இருளைத் தொடுத்தது போன்ற கருத்த தலைமயிர் கொண்டவன். பாறை போன்ற பரந்த மார்பும், இந்திரனது வச்சிராயுதத்தைப் போன்ற இடையும், நீண்ட கைகளும், கொடிய பார்வையும், பித்தன் போலத் தொடர்பில்லாத பேச்சும், கருமையான நிறத்தைப் பெற்ற உடலும் கொண்டவன். இத்தகு தோற்றத்தைக் கூறும் கம்பர் பாடலைக் காண்போமா?

பிச்சர் ஆம் அன்ன பேச்சினன் இந்திரன்
வச்சி ராயுதம் போலும் மருங்கினான்
(கங்கைப் படலம் 34:34)

(பிச்சர் = பைத்தியம்; மருங்கு = இடை, இடுப்பு)

- பண்பு

கங்கையாற்றின் பக்கத்திலே அமைந்த சிருங்கி பேரம் என்று சொல்லப்படும் நகரத்தில் வாழும் வாழ்க்கையைப் பெற்றவன். பொய் நீங்கிய மனத்தினன். இராமனிடம் அன்பு கெள்ளும் குணத்தினன்; யானைக் கூட்டம் போன்ற சுற்றத்தினரைப் பெற்றவன்; அவன் ஆயிரம் ஓடங்களுக்குத் தலைவன்; தூய கங்கையாற்றின் ஆழம் அளவு உயர்ந்தவன்; வேட்டைக்குத் துணையாக நாயினை உடையவன்; துடி, ஊது கொம்பு, துந்துபி முதலான இசைக்கருவிகள் நிறைந்த படையை உடையவன் என்பதனைத் தம் பாடலில்
புலப்படுத்துகின்றார், கம்பர்:

ஆய காலையிள், ஆயிரம் அம்பிக்கு
நாயகன் போர்க்குகன் எனும்நா மத்தான்;
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்
காயும் வில்லினன், கல்திரள் தோளினான்
(கங்கைப் படலம் 28)

துடியன் நாயினன்
(கங்கைப் படலம் 29:1)
கங்கையின் ஆழம் இட்ட நெடுமையினான்.
(கங்கைப் படலம் 31:2)

(அம்பி = படகு; காயும் = கொல்லும்; கல்திரள் = மலை)

**5.2.2** இராமனைச் சந்தித்தல்

இத்தகு தோற்றமும் பண்பும் உடைய குகன் கங்கையாற்றின் கரையில் அமைந்துள்ள தவப் பள்ளிக்கு இராமன் வந்துள்ளான் என்ற செய்தி அறிந்து பார்க்கச் சென்றான். தனது படைகளையும் சுற்றத்தினரையும் விட்டுத் தான் மட்டும் தனியாக இராமனைக் காண்பதற்காகத் தேனையும் மீனையும் ஒருங்கே காணிக்கையாகக் கையில் எடுத்துக் கொண்டு சென்றான்.

ஒருங்கு தேனொடு மீன்உப காரத்தன்
இருந்த வள்ளலைக் காண வந்து எய்தினான்
(கங்கைப் படலம் 36:3-4)

1)வேடர் குலத்தில் சிறந்த தலைவனாக விளங்குபவன் குகன். அவன் போராற்றலும், பேராற்றலும் மிக்கவன் என்பதை இப்பகுதி புலப்படுத்துகின்றது.

2)ஆற்றில் கிடைக்கும் மீனையும், உயர்ந்த மலையில் கிடைக்கும் தேனையும் கொண்டு வந்து இராமனிடம் காணிக்கையாகத் தருகின்ற போது குகனின் இறைபக்தி வெளிப்படுகின்றது.

இராமனைக் காணத் தவப் பள்ளி வாயிலை அடைந்த குகன், தான் வந்துள்ளதைத் தெரிவிக்கக் கூவிக் குரல் கொடுத்தான். முதலில் இலக்குவன் அவனை அணுகி, நீ யார்? என வினவினான். குகன் அவனை அன்போடு வணங்கி "ஐயனே ! நாய் போன்ற அடியவனாகிய நான் ஓடங்களைச் செலுத்தும் வேடனாவேன். தங்கள் திருவடிகளைத் தொழ வந்தேன்" என்று கூறினான். இலக்குவன் தன் தமையனாகிய இராமனிடம், தூய உள்ளமும், தாயன்பும் உடைய குகன், தன் சுற்றம் சூழத் தங்களைக் காண வந்துள்ளான் என்று தெரிவித்தான்.

- குகனை அழைத்து வரப் பணித்தல்

இராமனும் மன மகிழ்ச்சியோடு "நீ சென்று குகனை அழைத்து வருக" என்று கூற, இலக்குவனும் "உள்ளே வருக" என அழைத்தான். குகன் அழகு திகழும் இராமனைத் தன் கண்ணினால் கண்டு களிப்படைந்து, நெடுஞ்சாண் கிடையாகத் தண்டனிட்டு விழுந்து வணங்கினான். உடலினை வளைத்து வாயினைப் பொத்திக் கொண்டு

பணிவுடன் நின்றான்.

தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாய்அடியேன் என்றான்.
(கங்கைப் படலம் 38:3-4)

(நாவாய் = ஓடம்)

இப்பகுதி மூலம் இராமனுக்கு, இலக்குவன் மூலமாக, குகனின் இயல்பும் சிறப்பும் கூறப்படுவதனை உணர முடிகின்றது. வள்ளுவர் கூறும் பணியுமாம் என்றும் பெருமை என்பதற்கு ஏற்பக் குகனின் பணிவு உணர்த்தப்படுகின்றது.

**5.2.3** குகனின் பணிவுடைமை

இராமன், பணிவு கொண்ட குகனைத் தன்னருகில் அமரும்படி கூறினான். ஆனால் குகன் அமரவில்லை. அளவு கடந்த அன்பை வெளிப்படுத்திக் குகன், இராமனை நோக்கி, "தங்களுக்கு உணவாக அமையும்படி தேனையும், மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டு வந்துள்ளேன். தங்களுடைய எண்ணம் யாதோ?" என்று கேட்டான்.

'இருத்தி ஈண்டு' என்னலோடும். இருந்திலன் எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்
திருத்தினென் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன.
(கங்கைப் படலம் 41 : 1-3)

(அருத்தி = அன்பு; திருத்து = பக்குவப்படுத்து)

இப்பகுதியால் குகன் கொண்டு வந்த பொருள்கள் தேன், மீன் மட்டுமல்ல, உயர்ந்த அன்பினையும் கொண்டு வந்துள்ளான் என்பதனை அறிய முடிகிறது.

இராமன், மூத்தவர்களாகிய முனிவர்களை நோக்கிப் புன்னகைத்து விட்டு, "குகனே ! நீ அன்போடும் பக்தியோடும் கொண்டு வந்த தேனும், மீனும் மிகவும் அருமையானவை. அமுதத்தைக் காட்டிலும் சிறந்தவை. இவையெல்லாம் எம்மைப் போன்றவர் ஏற்கத் தக்கவையே. ஆதலால் நாம் அவற்றை இனிதாக உண்டவர்போல் ஆனோம்" என்று குகனிடம் கூறினான்.

அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே
பரிவினின் தழீஇய என்னின் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான்
(கங்கைப் படலம் 42)

இப்பகுதியால் உயர்ந்தவர்களிடத்தில் நாம் கொடுக்கும் பரிசுப் பொருள்கள் (தேன், மீன்) பெரிதல்ல, அவர்களிடத்தில் காட்டும் மதிப்பும் மரியாதையுமே பெரிது என்னும் பண்பினைக் குகன் வாயிலாக அறிய முடிகிறது. உண்ணத்தகாத பொருளாயினும் அன்போடு தந்தால் பெரியோர்கள் ஏற்றல் வேண்டும் என்பதை இராமனின் பெருந்தன்மையால் அறியலாம்.

- நாளைவா என்னல்

இராமன், குகனை நோக்கி, "நாம் இன்று தவச் சாலையில் தங்கி, நாளை கங்கையைக் கடப்போம். எனவே நீ, அன்பு நிறைந்த நின் சுற்றத்தாரோடு இங்கிருந்து சென்று, உன்னுடைய நகரத்திலே உவகையோடு இனிதாகத் தங்கி, விடியற் காலை நாங்கள் ஏறிச் செல்வதற்குரிய ஓடத்துடன் இங்கே வருக!" என்றான்.

பொங்கும்நின் சுற்றத் தோடும் போய்உவந்து இனிதுன் ஊரில்
தங்கிநீ நாவா யோடும் சாருதி விடியல் என்றான்
(கங்கைப் படலம் 43:3-4)

இப்பகுதியில் தவச் சாலையில் தவநெறி நிற்பவரே இருத்தல் வேண்டும் என்பது உள்ளமைந்த செய்தியாக வெளிப்படுகிறது.

**5.2.4** குகனின் விருப்பம்

கார்மேக வண்ணனாகிய இராமன் கூறியவுடன் பேரன்புடைய குகன், "இவ்வுலகம் முழுவதையும் உனக்குரிய செல்வமாக உடையவனே ! உன்னை இந்தத் தவக் கோலத்தில் பார்த்தும் என் கண்களைப் பிடுங்கி (பறித்து) எறியாத கள்ளனாகிய நான், பெருந்துன்பம் அடைந்துள்ளேன். மேலும் இந்நிலையில் உன்னைப் பிரிந்து எனது இருப்பிடத்தை நோக்கிச் செல்ல மாட்டேன். ஐயனே! இங்கிருந்து என்னால் முடிந்த அளவில் அடிமைத் தொழிலை உனக்குச் செய்கிறேன்" என்று வேண்டினான்.

கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்த்து வான்இப்
பார்குலாம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆனதுஐய செய்குவென் அடிமை என்றான்
(கங்கைப் படலம் 44)

(ஈர்கிலா = பறிக்காத)

இப்பகுதியால் குகனின் மனவுணர்வும், செயலுணர்ச்சியும் வெளிப்படுவதனைக் காண முடிகிறது. தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தல் வேண்டும் என்ற துடிப்புப் புலப்படுகிறது.

- இராமனின் நட்பு

குகனின் வேண்டுகோளைக் கேட்ட இராமன், தன் அருகில் நின்ற சீதை, இலக்குவன் ஆகிய இருவரின் திருமுகத்தையும் நோக்கி, அவர்கள் மனமும் ஏற்றுக் கொள்வதை அறிந்து, "இவன் நம்மிடம் நீங்காத அன்புடையவன் ஆவான்", என்று கூறினான். "கருணையினால் மலர்ந்த கண்களை உடையவனாகிய எவற்றிலும் இனிமையான நண்பனே ! நீ விரும்பியவாறே இன்று என்னோடு தங்கியிரு" என்று குகனிடம் கூறினான்.

கோதைவில் குரிசில் அன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதலன் ஆகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப இருத்திஈண்டு எம்மொடு என்றான்
(பாடல் – 18)

நம்முடன் ஒருவர் தங்கியிருக்க வேண்டுமானால் குடும்பத்தினரின் இசைவும் வேண்டும் என்பதை இராமன் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது.

- குகனின் வருத்தம்

"மனுக்குலத்தின் (அரசகுலம்) வழி வந்த மன்னனே! நீ அழகிய அயோத்தி நகரத்தை விட்டு இங்கு வந்த காரணத்தைத் தெரிவிப்பாயாக" என்று குகன் கேட்டான். இலக்குவன், இராமனுக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்ல, அதைக் கேட்டு இரங்கிய குகன் மிகவும் துன்பமுற்றுக் கூறலானான்: "பெரிய நிலத்தை உடையவளான பூமி தேவி தவம் செய்தவளாக இருந்தும், அத்தவத்தின் பயனை முழுவதும் பெறவில்லையே, ஈதென்ன வியப்பு" என்று கூறி. இரண்டு கண்களும் அருவி போலக் கண்ணீர் சொரிய அங்கே இருந்தான். அன்புக்குரியவர் துன்பப்பட்டால், அன்புடையவர் வருந்துவர் என்பதைக் குகன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

- இலக்குவன் கூற்று

குகன் கேட்க, இலக்குவன் பின்வருமாறு கூறினான் :

அயோத்தி மன்னன் தசரதன், அரச குல மரபுப்படி மூத்த மகன் இராமனுக்கு முடி சூட்ட முடிவு செய்தான். கைகேயி தன் தோழி மந்தரை (கூனி)யின் சூழ்ச்சிக்குப் பலியானாள். தசரத மன்னனிடம், தான் சம்பராசுர யுத்தத்தில் உதவி செய்தற்காகத் தனக்கு அளித்த இரு வரங்களைக் கொடுக்குமாறு வேண்டினாள். தசரதன் உடன்பட்டான். அவ்விரு வரங்களில் ஒன்று தன் மகன், பரதனுக்கு முடி சூட்ட வேண்டும் என்பது; மற்றொன்று இராமன் 14 ஆண்டுகள் காட்டுக்குச் செல்ல வேண்டும் என்பது. தந்தையின் வாக்கைக் காப்பாற்ற இராமன் காட்டுக்குப் புறப்பட்டான்.

அப்போது, சீதையும் உடன் வர, யானும் சேர்ந்து மூவரும் வனவாசம் மேற்கொண்டோம். இவ்வாறு தொடர்ந்து வரும்போது இவ்வனத்தில் உன்னைக் கண்டோம்.

**5.2.5** குகனின் வேண்டுதல்

இராமன் இட்ட கட்டளையைச் சிர மேற் கொண்ட நிலையில் கண்ணீர் பொழியும் கண்களையும், வாடுகின்ற உயிரினையும், சோர்ந்த மனத்தினையும் கொண்ட குகன், சீதையோடு இருக்கும் கார்மேக வண்ணனாகிய இராமனின் திருவடிகளைப் பிரிய விரும்பாமல், தனது எண்ணத்தைச் சொன்னான்:

“நாங்கள் காட்டில் வாழ்ந்தாலும் செல்வத்திலும் வலிமையிலும் குறைவற்றவர்கள். ஆனால் பொய் வாழ்க்கை பெறாதவர்கள். எங்களை உறவினராகக் கருதி எங்கள் ஊரில் நெடுங்காலம் இனிதாகத் தங்கியிருங்கள். செய்ய வேண்டிய முறைப்படி நீங்கள் சொல்லும் வேலைகளைச் செய்வோம்”.

செய்ம்முறை குற்றேவல் செய்குதும் அடியோமை
இம்முறை உறவுஎன்னா இனிதுஇரு நெடிதுஎம்ஊர்
(கங்கைப் படலம் 54:3-4)

“தேவர்களும் விரும்பி உண்ணக் கூடிய தேனும், தினையும் உள்ளன; மாமிசமும் இங்கு உள்ளது. உமக்குத் துணையாக நாய் போன்ற அடிமைப்பட்டவராகிய எங்கள் உயிர்கள் உள்ளன. விளையாடுவதற்கு இக்காடும், நீராடுவதற்குக் கங்கையும் இருக்கின்றன. நான் உயிரோடு உள்ளவரை நீ இங்கேயே இனிதாக இருப்பாயாக.” என்றும் தெரிவித்தான் குகன்.

கான்உள புனல்ஆடக் கங்கையும் உளதுஅன்றோ
நான்உள தனையும்நீ இனிதுஇரு நாடஎம்பால்
(கங்கைப் படலம் 55:3-4)

“தேவர்களைக் காட்டிலும் மன வலிமையும், உடல் வலிமையும் கொண்டு வில்லேந்திப் போர் புரியும் வீரர்கள் (5லட்சம் வேடர்கள்) என்னிடம் உள்ளனர். எங்கள் குடியிருப்பில் நீ ஒரு நாள் தங்கினாய் என்றாலும் நாங்கள் கடைத்தேறுவோம். அதைக் காட்டிலும் வேறான சிறப்பு எங்களுக்கு இல்லை” என்று கூறினான் குகன்.

உய்குதும் அடியேம் எம்குடிலிடை ஒருநாள்நீ
வைகுதி எனின்மேல்ஒர் வாழ்வுஇலை பிறிதுஎன்றான்
(கங்கைப் படலம் 57:3-4)

(உய்குதும் = கடைத்தேறுவோம்)

"உடுத்துக் கொள்ள மெல்லிய ஆடை போலும் தோல்கள் உள்ளன. உண்பதற்குச் சுவையான உணவு வகைகள் உள்ளன; உறங்குவதற்குத் தொங்கும் பரண்கள் உள்ளன. தங்குவதற்குச் சிறு குடிசைகள் உள்ளன. வில் பிடித்துப் போரிடக் கைகள் உள்ளன.

நீ விரும்பும் பொருள் வானத்தில் இருந்தாலும் விரைவாகக் கொண்டு வந்து சேர்ப்போம்" என்று தொடர்ந்து பேசினான் குகன்.

கலிவானின் மேல்உள பொருளேனும்
விரைவோடு கொணர்வேமால்
(க.ப 56)

(கொணர்வேம் = கொண்டு வந்து கொடுப்போம்)

விருந்தினரைத் தம் உறவினரைப் போல நேசிக்கும் தன்மையைக் குகன் வாயிலாக அறிய முடிகிறது. அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்னும் குறள் நெறிக்கேற்ப, குகன் இராமனிடம் கொண்ட அன்பிற்காக எதையும் கொடுக்கத் தயாராக இருக்கிறான் என்பதை அறிகிறோம்.

- இராமனின் வாக்குறுதி

குகன் வேண்டுகோளைக் கேட்ட இராமன், மிகவும் மன நெகிழ்ச்சியோடு சிரித்தான். "வீரனே ! நாங்கள் புண்ணிய நதிகளில் நீராடி, ஆங்காங்கு உள்ள புனிதமான முனிவரை வழிபாடு செய்து, வனவாசம் செய்ய வேண்டிய சில நாட்கள் முடிந்ததும் உன்னிடம் இனிதாக வந்து சேருவோம்" என்று குகனிடம் இராமன் கூறினான்.

.... ...... ...... வீரநின் னுழையாம்அப்
புண்ணிய நதிஆடிப் புனிதரை வழிபாடுஉற்று
எண்ணிய சிலநாளில் குறுகுதும் இனிதுஎன்றான்
(க.ப 58:2-4)

(நின்னுழை = நின் இருப்பிடம் ; புனிதர் = முனிவர்)

எளியவர் ஆயினும் அன்போடு இருந்தால், பெரியோர்கள் தம் நிலையில் இருந்து இறங்கி அன்பும் அருளும் செலுத்துவர் என்பது, இராமன் குகனிடம் கூறிய செய்தியால் உணர்த்தப்படுகிறது. பெரியோர்கள், அன்பிற்காக எதனையும் பொருட்படுத்த மாட்டார்கள் என்னும் கருத்தை இதன் வாயிலாக அறிய முடிகிறது.

- கங்கையைக் கடத்தல்

இராமனின் கருத்தை அறிந்துகொண்ட குகன், விரைவாகச் சென்று பெரிய

படகு ஒன்றைக் கொண்டு வந்தான். தாமரை மலர்போலும் கண்களை உடைய இராமன் அங்கிருந்த முனிவர்களான அந்தணர்கள் அனைவரிடமும் விடை தருக என்று கூறிவிட்டு, அழகு திகழ் சீதையோடும் இலக்குவனோடும்
படகில் இனிதாக ஏறினான்.

தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமைஎல்லாம் 'அருளுதிர் விடை'என்னா
இந்துவின் நுதலாளாடு இளவலொடு இனிதுஏறா
(க.ப 59:2-4)

(நயனம் = கண்; இந்து = சந்திரன்)

இராமன் உண்மையான உயிர் போன்றவனான குகனை நோக்கிப் படகை விரைவாகச் செலுத்துக என்றான். உடனே படகு விரைவாகவும், இள அன்னம் நடப்பதைப் போல அழகாகவும் சென்றது. படகில் செல்லும் போது சீதையும் இராமனும் கங்கையின் புனித நீரை அள்ளி எடுத்து ஒருவர் மீது ஒருவர் வீசி விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது கரையில் நின்று கொண்டிருந்த முனிவர்கள் இராமனைப் பிரிந்த துயரத்தால் நெருப்பில் இட்ட மெழுகுபோல் ஆனார்கள்.

விடுநனி கடிதுஎன்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் ................................... ..............................
இடர்உற மறையோரும் எரிஉறு மெழுகுஆனார்
(க.ப.60:2-4)

அன்புடையார்களைப் பிரிவது என்பது மிகவும் வருத்தம் தரக் கூடியதாகும்.

**5.2.6** குகனின் பக்தி

கங்கையின் மறுகரையை அடைந்த இராமன் குகனை நோக்கி, 'சித்திர கூடத்திற்குச் செல்லும் வழியினைக் கூறுக' என்று கேட்டான். இராமனிடம் கொண்ட பக்தியினால் தனது உயிரையும் கொடுக்கும் உள்ளன்பு உள்ளவனான குகன். இராமனின் திருவடிகளை வணங்கி, "உத்தமனே! அடிமைப்பட்ட நாய் போன்றவனாகிய நான் உங்களிடம் சொல்ல வேண்டியது ஒன்று உள்ளது" என்றான்.

சித்திர கூடத்தின் செல்நெறி பகர்என்ன
பத்தியின் உயிர்ஈயும் பரிவினன் அடிதாழா
உத்தம அடிநாயேன் ஓதுவது உளதுஎன்றான்
(க.ப. 63: 2-4)

"நாய் போன்றவனாகிய நான் உங்களுடன் வரும் பேறு பெறுவேனானால்,

நேர் வழியையும், அதில் குறுக்கிடும் பல கிளை வழிகளையும் அறிய வல்லவனன் ஆகையால், தக்க வழியைக் காட்டுவேன். உண்பதற்கு இனிய நல்ல காய், கனி, தேன் முதலானவற்றைத் தேடிக் கொண்டு வந்து தருவேன். தாங்கள் விரும்பிய இடங்களில் தக்க குடில்கள் அமைத்துக் கொடுப்பேன். தங்களை விட்டு ஒரு நொடிப் பொழுதும் பிரிய மாட்டேன்" என்று குகன் கூறினான்.

நெறிஇடு நெறிவல்லேன் நேடினென் வழுவாமல்
நறியன கனிகாயும் நறவுஇவை தரவல்லேன்
உறைவிடம் அமைவிப்பேன் ஒருநொடி வரைஉம்மைப்
பிறிகிலென் உடன்ஏகப் பெறுகுவென்எனின் நாயேன்
(க.ப. 64)

(நேடு = தேடு; நறியன = நல்லன; நறவு = தேன்)

குகன், தன் பிரிவாற்றாமையை உணர்த்துவதை இதன் மூலம் அறியலாம்.

மேலும் குகன் தொடர்ந்து பேசினான், "தீய விலங்குகளின் வகைகள் யாவும் தங்களை நெருங்க விடாமல் சென்று அவற்றை அழித்து, தூயன ஆகிய மான், மயில் போன்றவை வாழும் காட்டிடத்தை ஆராய்ந்து கண்டுபிடித்துக் காட்டும் வல்லமை பெற்றுள்ளேன். நீங்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவேன். விரும்பிய பொருளைத் தேடிக் கொண்டு கொடுப்பேன். இரவிலும் வழி அறிந்து நடப்பேன்" என்றான்.

தீயன அவையாவும் திசைசெல நூறி
தூயன உறைகானம் துருவினென் வரவல்லேன்
................ இருளினும் நெறிசெல்வேன்
(க.ப. 65)

(நூறி = அழித்து; துருவி = ஊடுருவி)

"மற்போரில் சிறப்புப் பெற்ற தோள்களை உடையவனே! மலைப் பகுதி வழியே சென்றாலும் அங்குக் கிடைக்கும் கிழங்கு, தேன் முதலியன கொண்டு வந்து தருவேன். வெகு தொலைவில் கிடைக்கும் நீர் கிடைத்தாலும், எளிதில் உடனே கொணர்ந்து தருவேன். பல வகையான விற்களைப் பெற்றுள்ள நான் எதற்கும் அஞ்ச மாட்டேன். இராமனே! உன் மலர்போலும் திருவடியை ஒருபோதும் பிரிய மாட்டேன்" என்றும் குகன் கூறினான்.

- குகனைத் 'தம்பி' எனல்

குகன், இராமனை நோக்கி, "என் படைகள் யாவையும் கொண்டுவந்து காவல் காத்து நிற்பேன். என்னால் வெல்ல முடியாத பகைவர்கள் வந்தாலும், உங்களுக்குத் தீங்கு

நேரும் முன் நான் இறந்து விடுவேன் என்று கூறினான். மேலும் சிறிது நேரங்கூடப் பிரியாமல் இருப்பேன்" என்றான்.

இராமன் உடனே, "நீ எனது உயிர் போன்றவன். என் தம்பி இலக்குவன் உனக்குத் தம்பி, அழகுடைய நெற்றியைப் பெற்ற சீதை, உனக்கு உறவினள், குளிர்ந்த கடலால் சூழப்பட்ட இந்நாடு முழுவதும் உன்னுடையது" என்றான். மேலும், "உன்னைக் கண்டு தோழமை கொள்வதற்கு முன் உடன் பிறந்தவர்களாக நால்வர் இருந்தோம். இப்போது உன்னோடு சேர்த்து, உடன் பிறந்தவர்கள் ஐவராகி விட்டோம்" என்றான். "இனி நீ உன் இருப்பிடம் சென்று அங்குள்ள மக்களைக் காக்க வேண்டும்" என்று கட்டளை இட்டான்.
அதனைக் குகன் மறுக்க முடியாமல் ஏற்றுச் செயல்பட்டான்.

முன்புஉளெம் ஒருநால்வேம் முடிவுளது எனஉன்னா
அன்புஉள இனிநாம்ஓர் ஐவர்கள் உளர்ஆனோம்
(க.ப 69:3-4)

இப்பகுதி அன்பால், உடன்பிறப்பு விரிவடையும் தன்மையைப் புலப்படுத்துகிறது.

- குகன் விடைபெறல்

இராமனை விட்டுப் பிரிய மனமில்லாமல் மிகுந்த மன வருத்தத்துடன் விடைபெற்றுக் கொண்டான் குகன். பின்பு இராமன், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் மரங்கள் அடர்ந்த காட்டில் நெடுந்தூரம் செல்வதற்குரிய வழியிலே நடந்து சென்றார்கள்.

## 5.3 தொகுப்புரை

நண்பர்களே! இதுவரை கங்கைப் படலத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளை அறிந்து இருப்பீர்கள். இந்தப் பாடத்தில் இருந்து என்னென்ன செய்திகளை அறிந்து கொண்டீர்கள் என்பதை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திப் பாருங்கள்.

- இராமாயணத்தில் இடம்பெறும் கங்கைப் படலத்தின் சிறப்புத் தன்மையைப் பற்றி அறிந்திருப்பீர்கள்.
- குகனின் தோற்றம், பண்பு, அவன் இராமன் மீது கொண்டிருந்த பேரன்பு, தன்னால் முடிந்த அளவு உதவ முற்படுதல் போன்ற பல செய்திகளைச் சிறப்பாக அறிந்து இருப்பீர்கள்.
- குகனின் அன்பினைக் கண்டு, இராமன் அவனைத் தன்னுடன் பிறந்த தம்பியாக ஏற்றுக்கொண்ட செய்தியினையும் அறிந்திருப்பீர்கள்.
- கம்பராமாயணத்தின் சிறப்புகள், நூலாசிரியரின் சிறப்புகள் முதலியன பற்றி விரிவாக உணர்ந்து இருப்பீர்கள்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## பாடம் - 6

# P10416 பெரிய புராணம்-கண்ணப்ப நாயனார் புராணம்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

சிறந்த தமிழ்க் காப்பியங்களுள் ஒன்று பெரிய புராணம் இந்நூலில் இலைமலிந்த சருக்கத்தில் பத்தாவது உட்பிரிவு கண்ணப்ப நாயனார் புராணம். இப்பகுதி என்ன சொல்கிறது என்பதை இப்பாடம் விளக்குகின்றது.

திண்ணனார், குடுமித் தேவர் மீது கொண்டிருந்த பக்தி (மெய்யன்பு) புலப்படுத்தப்படுகின்றது. திண்ணனார், சிவகோசரியார் ஆகிய இருவரின் வழிபாட்டு நிலைகளில் சடங்குகளை விட உணர்வே உயர்ந்தது என்பதனை இப்பாடம் விளக்குகின்றது.

இறைவனுக்கே, தம் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்ட சிறப்பு இப்பாடத்தின் வழி தெரிவிக்கப் பெறுகின்றது.

தனி மனித வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்கும் அன்பே முதன்மையானதும் சிறந்ததும் ஆகும் என்பதனை இப்பகுதி உணர்த்துகின்றது.

புராணத்தில் இடம் பெறும் திண்ணனாரின் கண்தானச் செயல், இற்றைக்கால அறிவியல் வழிப்பட்ட கண்தானங்களுக்கு முன்னோடியாகவும் முற்போக்குச் சிந்தனை உடையதாகவும் திகழ்வதை இப்பாடத்தின் வழி அறியலாம்.

ஆகம நெறியினும், அன்பு நெறியே சிறந்தது என்பதனை இப்பாடம் உணர்த்துகின்றது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- சோழர் காலத்தில் தோன்றிய காப்பியங்களுள் தமிழ்க் காப்பியமாக, பெரியபுராணம் விளங்குகின்றது என்பதனை அறிந்து கொள்ளலாம்.
- ஆட்சி முறையில் தந்தைக்குப் பின் மகன் ஆளல் என்னும் வாரிசு உரிமை முறை, இறைப் பற்று, அன்பு நெறி ஆகியன பற்றியும், தன்னை இழந்தால் இறைவனின் அருள்கிடைக்கும் என்னும் ஆன்மிக உண்மையையும் இப்பகுதியால் அறிந்து கொள்ளலாம்.

- அறிவு நெறியைக் காட்டிலும் அன்பு நெறியே மேம்பட்டது, வீடுபேறு அளிப்பது என்பதனைக் கண்ணப்பர் வரலாற்றின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.
- ஞான யோகம், கர்ம யோகம் ஆகிய இரண்டிலும் மேம்பட்டதாகப் பக்தி யோகம் திகழ்கின்றது என்னும் தத்துவக் கருத்தினை உணர்ந்து கொள்ளலாம்.
- ஆறே நாட்களில் வழிபாடு செய்து சிவனருள் பெற்ற கண்ணப்பரின் வரலாறு மூலம், எத்தனைக் காலம் வழிபாடு செய்கின்றோம் என்பதை விட. எப்படி வழிபாடு செய்கின்றோம் என்பதே இன்றியமையாதது என்னும் கருத்தினைப் பெரிய புராணம் புலப்படுத்தி நிற்பதனை அறிந்து கொள்ளலாம்.
- நூலாசிரியரின் பெருமை, திண்ணனாரின் சிறப்பு, பக்தி நெறி ஆகிய செய்திகளை முறைப்படுத்திக் காணலாம். அடியார்களின் பக்தி நிலை பற்றி அறிந்து கொள்ள இப்பாடம் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

# பாட அமைப்பு

6.0 பாட முன்னுரை

6.1 பெரிய புராணம்

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

6.2 கண்ணப்ப நாயனார் புராணம்

6.3 இடம்பெறும் நிகழ்ச்சிகள்

6.4 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 6.0 பாட முன்னுரை

தனிப் பாடல்களாக இருந்த சங்கத் தமிழ், கதைபொதி பாடல்களாக வளர்ந்து, தொடர்நிலைச் செய்யுள்கள், காப்பியம், புராணம் என்பனவாக விரிந்தது. புராணத்திற்கும், காப்பியத்திற்கும் மிகுதியான வேறுபாடுகள் இல்லை எனலாம். பெருங்காப்பிய இலக்கணங்களில் பெரும்பாலானவற்றைத் தனக்குரியதாகக் கொண்டு பழமையான வரலாற்றின் அடிப்படையில் அமைந்த நூல் புராணம் எனப்படும். சமயக் கருத்துகளை வலியுறுத்தவே காப்பியங்களும், புராணங்களும் எழுந்தன. கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய சமயப் போராட்டங்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் நிலவின. இடைக்காலத்தில் (கி.பி. ஏழாம் நூற்றாண்டு) தோன்றியது பக்தி இயக்கம். இவ்வியக்கம் தமிழிற்குப் பல பக்தி இலக்கியங்களைத் தந்தது. அவற்றுள் சைவ இலக்கியங்களின் சாரமாகத் திகழ்வது சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணமாகும். இந்நூல் இறைவனுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்த 63 சைவ அடியார்களான நாயன்மார்கள் சிறப்பையும், அவர்களின் வரலாற்றையும், தொண்டின் சிறப்பையும் விளக்குகின்றது. சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்படுகின்றது.

சுந்தரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இந்நூலில், பக்தியின் பெருமை, மக்களின் வாழ்க்கை முறை, ஆட்சி முறை, தமிழ்நாட்டின் திருத்தலங்கள் ஆகிய பல செய்திகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. தமிழில் தோன்றிய மற்ற காப்பியங்களில் வெளிப்படையாகக் காணமுடியாத ஒரு தனிச் சுவையாகப் பக்திச் சுவையைக் கொண்டும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டும் பாடப்பட்டதே இந்நூல் எனலாம். இத்தகு சிறப்பினைக் கொண்ட புராண நூலைத் தேசிய இலக்கியம் என்று ஆன்றோர்கள் பாராட்டியுள்ளனர். இப்பெரிய புராணத்தில் இலைமலிந்த சருக்கத்தில் கண்ணப்ப நாயனார் புராணம் விளங்குகின்றது. இப்பகுதியில் திண்ணனாரின் தோற்றம், பக்திச் சிறப்பு, வழிபாட்டு முறை, இறைவனுக்குக் கண்ணை அப்பிக் கண்ணப்பராதல் முதலான பல செய்திகளைக் காணலாம்.

# 6.1 பெரிய புராணம்

செயற்கு அரிய செய்வர் பெரியர் என்னும் குறள் வரிக்கேற்ப அறுபத்து மூன்று நாயன்மார்கள் புரிந்த இறைப் பக்தியையும், தொண்டு நெறியையும் வரலாற்று முறையில் கூறும் நூலே பெரிய புராணம் (பெரியர் புராணம்) ஆகும். இந்நூல் பல்வேறு நாடு, ஊர், சாதி, தொழில் கொண்ட நாயன்மார்களுடைய வாழ்க்கையை விவரிக்கிறது. அக்காலச் சமுதாய வரலாற்றையும் எளிய, இனிய நடையில் எடுத்து சொல்கிறது. தில்லை அம்பலத்தே ஆடும் சிவபெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார், பக்தி வளமும், இறையருட் திறமும் குறைவிலாது சிறக்குமாறு இலக்கியப் பெருங்களஞ்சியமாக, பெரிய புராணத்தை இயற்றி அருளினார்.

## 6.1.1 காப்பிய அமைப்பு

பெரிய புராணம் என்னும் பெருங்காப்பியம் தமிழகச் சூழலையும், 63 அடியார் பெருமக்களையும் மையமாகக் கொண்டு திகழ்கின்றது. இந்நூல் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் உடையது. 4286 விருத்தப் பாக்களையுடைய ஒரு பெரு நூலாகும்.

சுந்தரரின் சிறப்பு, அடியார்களின் சிறப்பு, சிவபெருமானின் அருட்திறம், குரு (ஆசிரியன்), இலிங்கம் (இறைவன் திருமேனி), சங்கமம் (அடியார்) ஆகிய முறைகளில் சிவனை வழிபட்ட நிலைகள், தொண்டின் திறம், சாதி, மத, இன வேறுபாடில்லாமல் அடியார் நோக்கில் கண்டு வழிபட்டு முத்தி பெற்ற தன்மைகள், சிவன் அடியார்களை ஆட்கொண்ட விதம் முதலான பல செய்திகளைக் கொண்டதாக இந்நூல் விளங்குகின்றது. அடியார்களின் வரலாறும். அவர்கள் கடைப்பிடித்த தொண்டு நெறியும், இறைவன் அவர்களை ஆட்கொண்ட விதமும் இந்நூல் முழுதும் எடுத்துக் கூறப்படுவதால் சேக்கிழார், திருத்தொண்டர் மாக்கதை என்று பெயரிட்டார். செயற்கரிய செயல் புரிந்த அடியார்களின் (பெரியார்களின்) சிறப்பினை உரைப்பதால் இதனைச் சான்றோர்கள் பெரியர் புராணம் என்று கூற, காலப் போக்கில் பெரிய புராணம் என்று வழங்கப்பட்டது.

## 6.1.2 காப்பிய நோக்கம்

கி.பி.11, 12-ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆட்சி செய்த மன்னன் இரண்டாம் குலோத்துங்க சோழனாவான் (அநபாய சோழன்). அம்மன்னனின் அவையில் முதல் அமைச்சராகப் பணி புரிந்தவர் சேக்கிழார். சோழ மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க, சிவனடியார்களின் உயர்ந்த வாழ்க்கையைக் கதைப் பின்னலாகக் கொண்டு பெரிய புராணத்தைப் பாடினார் சேக்கிழார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும்,

நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு பெரிய புராணத்தைச் சார்பு நூலாகப் படைத்தார் சேக்கிழார்.

சிவனை முதன்மைப்படுத்தி வழிபடும் சமயமாகிய சைவத்தையும், அடியார்களது வரலாறு, தொண்டு நிறைந்த வாழ்வு, முத்தி பெற்ற நிலை ஆகியவற்றையும் விரிவாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதே பெரிய புராணத்தின் நோக்கம் ஆகும்.

**6.1.3** காப்பியச் சிறப்பு

அறுபத்து மூன்று நாயன்மார்களின் புகழ் மிக்க வரலாற்றினை உலகறிய, பக்திச் சுவையோடு விரிவாக எழுதிய பெருமைக்கு உரியவர் சேக்கிழார் ஆவார். அவர் சோழ நாட்டு அமைச்சராக இருந்தமையால் நாட்டின் பல பகுதிகளுக்கும், நாயன்மார்கள் வாழ்ந்த ஊர்களுக்கும் நேரில் சென்று, அவ்விடத்தில் செவிவழி மரபாக வழங்கும் வரலாற்றுச் செய்திகளையும் தொகுத்து இந்நூலை அமைத்தார் என்பர்.

பிற மொழிக் கதைகளைத் தழுவாமல், தமிழ் மக்களையும், தமிழகச் சூழலையும் மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களைப் போலவே பெரியபுராணம் என்னும் நூல் சிறப்புற்றுத் திகழ்கின்றது. ஆண் பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும், தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் தேசிய இலக்கியம் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.

**6.1.4** நூலாசிரியர்

சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூர் என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்தவர் அருண்மொழித் தேவர். இப்பெயரே அவருக்குப் பெற்றோர் இட்டு வழங்கியதாகும். சேக்கிழார் என்பது இவரது குடிப்பெயராகும். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதால், இரண்டாம் குலோத்துங்க சோழன் அவையில் முதலமைச்சராகப் பணிபுரிந்தார். அம்மன்னனின் வேண்டுகோளை ஏற்று, அடியார்களின் பெருமையை வரலாறாக எழுதினார். இந்நூலின் பெருமையை உணர்ந்த மன்னன், அவரைப் பட்டத்து யானையின் மீதேற்றி நகர்வலம் செய்து உத்தம சோழப் பல்லவராயன் என்னும் பட்டம் தந்து சிறப்பித்தான். இவருடைய காலம் கி.பி. 12 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

சிவத் தொண்டர்களின் வரலாற்றைச் சிறப்பித்த காரணத்தால் இவருக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. கல்வெட்டுகள் இவரை மாதேவடிகள் என்றும், இராமதேவர் என்றும் சிறப்பிக்கின்றன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ என்று இவரைப் பாராட்டுகின்றார்.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 6.2 கண்ணப்ப நாயனார் புராணம்

பெரிய புராணம் என்னும் காப்பியத்துள் 63 நாயன்மார்கள் வரலாற்றில் கண்ணப்பநாயனார் வரலாறு இலைமலிந்த சருக்கத்தில் 10-ஆவது புராணமாக (காதையாக) இடம் பெற்றுள்ளது. இந்நாயனார் வரலாற்றைச் சேக்கிழார், 186 விருத்தப் பாக்களினால் பாடியுள்ளார்.

திண்ணனார் சிவலிங்கத் திருவுருவத்தின் கண்ணிலிருந்து இரத்தம் கசிந்ததைக் கண்டு, தன் கண்ணைத் தோண்டி அப்ப இறைவனால் கண்ணப்பன் என்று அழைக்கப்பட்ட செய்தியினை இக்கதை விளக்குகின்றது. இக்கதை நிகழ்ந்த இடம் இன்று காளத்தி என வழங்கும் திருக்காளத்தி மலையாகும் (பொத்தப்பி நாடு).

சுந்தரமூர்த்தி சுவாமிகளால் கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர் என்றும், பட்டினத்தாரால் நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லேன் அல்லன் என்றும், திருநாவுக்கரசரால் திண்ணன், கண்ணப்பன், வேடன் என்றும் பலவாறாகச் சான்றோர்கள் பலரால் கண்ணப்பர் பாராட்டப்படுகிறார்.

### 6.2.1 கதைச் சுருக்கம்

பொத்தப்பி என்னும் நாட்டில் உடுப்பூர் என்னும் ஊரில் நாகன் என்பவன் வேடர்குலத் தலைவனாக இருந்து மக்களைக் காத்து வருபவன். தத்தை, அவன் மனைவியாவாள். நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறில்லாமல் இருக்கவே, முருகனை வேண்டி விழா எடுத்தனர். அவர்களின் வேண்டுதலை ஏற்றுக் கொண்ட முருகன் அருள் புரிந்தான். அவர்களுக்கு அழகான வலிமை மிக்க ஆண்குழந்தை பிறந்தது. நாகன் அக்குழந்தையைத் தன் கைகளால் தூக்கும்போது திண் என்று இருந்தமையால் திண்ணன் என்று பெயரிட்டான். திண்ணன் வளர்ந்து குல மரபிற்கேற்ப வில், அம்பு, ஈட்டி, வாள் முதலான போர்ப் பயிற்சிகளைக் கற்றுச் சிறப்படைந்தான். நாகன் முதுமை காரணமாகத் தன் பதவியினைத் தன் மகனாகிய திண்ணனிடம் தந்து நாடாளும்படி பட்டம் சூட்டினான். இதனைக் கண்டு, தேவராட்டியும் வந்து, நலம் சிறக்க என வாழ்த்திச் சென்றாள்.

ஒரு நாள் திண்ணன் நாணன், காடன் ஆகிய நண்பர்களோடு வேட்டையாடச் சென்றார். வேட்டைக்காக விரித்த வலைகளை அறுத்துக்கொண்டு ஒரு பன்றி மட்டும் ஓடியது. விடாது துரத்திச் சென்று, புதருள் மறைந்த அந்தப்பன்றியைத் திண்ணன் தம் குறுவாளால் வெட்டி வீழ்த்தினார். இதனைக் கண்ட நண்பர்கள் வியந்து, திண்ணனின் வலிமையைப் பாராட்டினார்கள். அருகே ஓடும் பொன்முகலி ஆற்றையும் வானாளாவ நிற்கும் காளத்தி மலையையும் கண்டு வியந்தார் திண்ணன். இதனைக் கண்ணுற்ற நாணன். இம் மலையின் மீது குடுமித் தேவர் இருக்கிறார். அவரைக் கும்பிடலாம் வா

என்றான். மலை ஏறும்போது திண்ணனுக்கு மட்டும் புதுவிதமான இன்பமும் உணர்வும் ஏற்பட்டன. குடுமித் தேவருக்கு, சிவ கோசரியார் என்பவர் ஆகம விதிமுறைப்படி பூசை செய்வதனை நாணன் மூலம் அறிந்தார். மலையேறிய திண்ணன், குடுமித் தேவரைக் கண்டவுடன் அவரை வணங்கியும், கட்டித் தழுவியும் ஆடினார்; பாடினார். நண்பன் காடன் ஆற்றங்கரையில் தீயில் இட்டுப் பக்குவப் படுத்திய இறைச்சியைத் தன்னுடைய ஒரு கையில் எடுத்துக் கொண்டார், மறு கையில் வில் இருந்ததால் வாய் நிறைய ஆற்று நீரையும், அருகில் இருந்த மரத்தின் மலர்களைத் தலையில் செருகியும் கொண்டு வந்தார். குடுமித் தேவருக்குத் திருமஞ்சனமாகத் தன் வாய் நீரையும், அமுதமாகப் பன்றி இறைச்சியினையும் தலையில் சூடிய மலரை வழிபாட்டு மலராகவும் இட்டு மகிழ்ந்தார் திண்ணனார். பின் இரவு முழுவதும் வில்லேந்திக் காவல் புரிந்தார். காலையில் குடுமித் தேவருக்குத் திருவமுது தேடி வரப் புறப்பட்டார்.

வழக்கம் போல, பூசை புரிய வந்த சிவ கோசரியார் இறைவன் மீதிருந்த இறைச்சி முதலானவற்றைக் கண்டு வருந்தினார், புலம்பினார். பின் அவற்றை நீக்கித் தூய்மை செய்து பூசனை புரிந்து சென்றார். அடுத்து, திண்ணனாரும் வந்து இறைச்சி முதலானவற்றை வைத்து வழிபட்டார். மறுநாளும் இறைச்சி முதலானவை இருப்பது கண்டு வருந்திச் சிவ கோசரியார் இறைவனிடம் முறையிட்டு வீட்டிற்குச் சென்று உறங்கினார். அவரது கனவில் சிவபிரான் தோன்றித் திண்ணனாரின் அன்பு வழிபாட்டை நாளை மரத்தின் மறைவில் நின்று பார்ப்பாயாக என்று கூறி மறைந்தருளினார்.

ஆறாம் நாள் திருக்காளத்தி நாதர் திண்ணனாரின் அன்பின் பெருமையைக் காட்ட, வலக் கண்ணில் இருந்து உதிரம் பெருகும்படிச் செய்தார். அதனைக் கண்ட திண்ணனார், செய்வதறியாமல் திகைத்தார். பின் தம் கைகளால் துடைத்தாலும் பச்சிலை இட்டாலும் நிற்கவில்லையே என வருந்தி நின்றபோது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. உடனே தம் வலக்கண்ணை அம்பினால் அகழ்ந்து எடுத்து அப்பினார். உதிரம் நின்றுவிட்டது. இதைக் கண்டு மகிழ்ந்து ஆடினார். சிவபிரான் இடக்கண்ணிலும் உதிரம் பெருகும்படிச் செய்தார்.

தம் இடக்கண்ணையும் பெயர்த்து எடுத்து அப்பினால் உதிரம் நின்றுவிடும் என்று உணர்ந்தார். தம் மறு கண்ணையும் பெயர்த்துவிட்டால் இறைவனின் இடக்கண்ணைச் சரியாகக் கண்டறிய முடியாது என்பதால், அடையாளத்துக்காகத் தம் காலின் பெருவிரலை இறைவனின் உதிரம் பெருக்கும் கண் மீது ஊன்றிக் கொண்டார். அம்பினால் தம் இடக்கண்ணைப் பெயர்க்கத் தொடங்கினார். உடனே காளத்தி நாதர் நில்லு கண்ணப்ப என்று மூன்று முறை கூறித் திண்ணனாரைத் தடுத்தருளினார்.

இதனைக் கண்ட சிவ கோசரியார் தம்மை மறந்து சிவன் அருளில் மூழ்கித் திளைத்தார். அன்று முதல் இறைவனுக்கே தம் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

குறிப்பு :

பொத்தப்பி நாடு : ஆந்திர மாநிலத்தின் இப்போதைய கடப்பை மாவட்டத்தில் புல்லம் பேட்டை வட்டத்தில் உள்ள ஒரு சிற்றூராகும்.

உடுப்பூர் : இவ்வூர் குண்டக்கல் – அரக்கோணம் ரயில் பாதையில் உள்ள இராசம்பேட்டைக்கு அருகில் உள்ளது. உடுக்கூர் என இன்று வழங்கப்படுகிறது.

- கதைமாந்தர்

கண்ணப்ப நாயனார் வரலாற்றில் இடம்பெறும் கதை மாந்தர்கள். நாகன், தத்தை, திண்ணன், நாணன், காடன், வேடுவர்கள், தேவராட்டி, குடுமித் தேவர், சிவ கோசரியார்.

## 6.3 இடம்பெறும் நிகழ்ச்சிகள்

நாயனாரின் வாழ்க்கையையும் அதில் ஏற்பட்ட மாற்றத்தையும் விரிவாகக் காணலாம்.

### 6.3.1 திண்ணனார்

பொத்தப்பி எனும் மலைநாட்டில் உள்ள உடுப்பூர் என்னும் ஊரினை வேடர் குலத் தலைவன் நாகன் என்பான் ஆட்சி செய்து வந்தான். அவன் மனைவி தத்தையாவாள். அவர்களுக்கு நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறு இல்லாமல் இருக்கவே, முருகனுக்கு விழா எடுத்தனர். அம்முருகனின் அருளால் பிறந்தவனே திண்ணன். திண் என்று இருந்த காரணத்தால் தன் மகனுக்குத் தந்தையாகிய நாகன் திண்ணன் என்று பெயரிட்டான். வேடுவர் குல மரபிற்கு ஏற்ப வில், வேல், ஈட்டி, முதலான ஆயுதங்களைக் கற்றுத் தேர்ந்து கையில் ஏந்தியவன், திண்ணன், அவன் கரிய நிறமுடையவன். உரத்த குரலுடையவன். தலை மயிரைத் தூக்கிக் கட்டியவன். தலையிலே மயிற்பீலி அணிந்தவன். சங்கு மணிகளும், பன்றிக் கொம்புகளும் கோத்த மாலையும், புலித் தோலினால் செய்யப்பட்ட தட்டை வடிவமான வெற்றி மாலையினையும் மார்பிலே அணிந்தவன். இடையிலே புலித் தோல் ஆடையணிந்தவன், குறுவாளையும் வைத்திருப்பவன். கால்களில் வீரக் கழல் பூண்டு, தோல் செருப்பு அணிந்தவன். வேட்டையாடுவதற்கு நாயினைத் துணையாகக் கொண்டவன்.

### 6.3.2 குடுமித் தேவரைக் காணல்

தந்தை நாகனுக்கு வயது முதிர்ந்தது. அதனால் நாட்டுக்கு இடையூறு விளைவிக்கும் விலங்குகளை வேட்டையாட வேண்டி, தன் மகனை வேடர் தலைவனாக்கினான் நாகன். இதனைக் கண்ட தேவராட்டியும் நலம் சிறக்க எனக் கூறித் திண்ணனாரைப் பாராட்டி வாழ்த்திச் சென்றாள். ஒருநாள் நாணன், காடன் என்னும் இரு நண்பர்களோடு வேட்டைக்குச் சென்றார் திண்ணனார். காட்டில் திரிந்த வலிய பன்றியைத் தம் குறுவாளால் வீழ்த்தினார். அருகில் ஓடும் பொன்முகலி ஆற்றினையும் வானளாவி நிற்கும் காளத்தி மலையையும் கண்டு வியந்தார். நண்பர்கள், “இம்மலையில், குடுமித் தேவர் இருக்கிறார். அவரைக் கும்பிடலாம் வா” என்றார்கள். திண்ணனாருக்கு மலையேறும் போதே புதுவிதமான இன்பமும், உணர்வும் உண்டாயின.

### 6.3.3 வழிபடல்

மலையேறிய திண்ணனார் பேருவகை கொண்டு ஓடிச் சென்று, காளத்தி நாதரைக் கட்டித் தழுவினார். ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார். மேலும் கன்றை ஈன்ற பசுவைப் போலப் பிரிய மனமின்றிச் சுழன்று சுழன்று இறைவனிடமே நின்றார். பின்பு

பொன் முகலியாற்றங் கரையினருகில் காடன், தீயில் இட்டு பக்குவப்படுத்திய பன்றி இறைச்சியினைத் தம் வாயினால், சுவையும் பதமும் பார்த்துப் பின் ஒருகையில் அதனை எடுத்துக்கொண்டு, மற்றொரு கையில் வில்லம்பு ஏந்தினார். இறைவனது திருமஞ்சனத்திற்காகப் பொன்முகலியாற்று நீரை வாயில் நிறைத்துக்கொண்டு, பூசனைக்காகப் பூங்கொத்துகளைத் தம் தலையில் செருகிக் கொண்டு, மலையுச்சிக்கு வந்தார். குடுமித் தேவரின் மேல் இருந்த சருகுகளைச் செருப்பணிந்த தம் பாதங்களால் விருப்பமுடன் தள்ளினார். தம் வாயிலிருந்த நீரால் திருமஞ்சனம் செய்தார். தம் தலையில் இருந்த மலர்களைத் திருமுடி மீது சார்த்தி, பன்றி இறைச்சியினைத் திருவமுதாகப் படைத்து மகிழ்ந்தார்.

குடுமித் தேவருக்கு இரவில் துணை யாருமில்லை என்று எண்ணி, இரவு முழுவதும் அவரே கையில் வில்லேந்திக் காவல் புரிந்தார். காலை புலர்ந்தது. திண்ணனார், காளத்தி நாதருக்குத் திருவமுது தேடிவரப் புறப்பட்டார்.

### **6.3.4** சிவபிரானின் அருள்வாக்குப் பெறல்

திண்ணனார் சென்றவுடன் வழக்கம் போல் சிவ கோசரியார் பூசை செய்ய வந்தார். மேலுள்ள இறைச்சி முதலானவற்றை நீக்கி ஆகம முறைப்படி பூசை செய்துவிட்டுச் சென்றார்.

திண்ணனார் முன் போலவே வேட்டையாடி விலங்குகளைத் தீயில் சுட்டு அமுதாக்கிப் படைத்திட வந்தார். தொடர்ந்து, சிவ கோசரியார் வழிபட்டுச் சென்றவுடன், திண்ணனார் வந்து அவற்றை நீக்கி வழிபடுவதும் தொடர்ந்தது. தினமும் சிவன் திருமேனி மீது இறைச்சி இருப்பது கண்டு சிவ கோசரியார் வருந்தினார். மனம் கசிந்து இறைவனிடம் முறையிட்டு வீட்டிற்குச் சென்று உறங்கினார். அவரது கனவில் சிவபிரான், நீ கூறும் மறைமொழிகள் அவன் அன்பு மொழிகளுக்கு ஈடாகாது, நீ வேள்வியில் தரும் அவியுணவைக் காட்டிலும் அவன் தரும் ஊனமுது இனியது என்றும் இந்நிகழ்ச்சியினை மரத்தின் மறைவில் நின்று பார்ப்பாயாக என்றும் கூறினார்.

அவனுடைய வடிவுஎல்லாம் நம்பக்கல் அன்புஎன்றும்
அவனுடைய அறிவுஎல்லாம் நமைஅறியும் அறிவுஎன்றும்
அவனுடைய செயல்எல்லாம் நமக்குஇனிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வாறு அறிநீஎன்று அருள்செய்தார்.

**(**பெரி**:** க.
பு.**: 157)**

என்றும் திண்ணனாரின் பக்திச் சிறப்பைச் சிவபிரான் கூறினார்.

### **6.3.5** கண்ணப்பன் ஆதல்

ஆறாம் நாள், திருக்காளத்திப் பெருமான் திண்ணனார் தம் மீது கொண்டுள்ள அன்பின் பெருமையைக் காட்ட, தமது வலக்கண்ணில் இருந்து உதிரம் பெருகச் செய்தார். இதனைக் கண்ட திண்ணனார் தாம் செய்வதறியாமல் திகைத்தார். பூசைக்காகக் கொண்டு வந்த பொருள்கள் சிதறின. தம் கையால் இரத்தம் கசிவதைத் துடைத்தாலும் நிற்கவில்லை. உடனே பச்சிலைகளைத் தேடிக் கொண்டுவந்து தடுத்துப் பார்த்தார். நிற்கவில்லை.

இந்த நிலையில் திண்ணனார் அடைந்த துயரத்தையும், தவிப்புகளையும் சேக்கிழார் உணர்ச்சி மிக்க கவிதையாய் வடித்திருக்கிறார்.

பாவியேன் கண்ட வண்ணம்
பரமனார்க்கு அடுத்தது என்னோ
ஆவியின் இனிய எங்கள்
அத்தனார்க்கு அடுத்தது என்னோ
மேவினார் பிரிய மாட்டா
விமலனார்க்கு அடுத்தது என்னோ
ஆவது ஒன்று அறிகி லேன்யான்
என்செய்வேன் என்று பின்னும்...

*(க.புராணம் : 174)*

(பரமனார், அத்தனார், விமலனார் = சிவபிரானின் சிறப்புப் பெயர்கள்; மேவினார் பிரிய மாட்டா = சேர்ந்தவர்கள் பிரிய இயலாத பேரன்பு கொண்ட)

இனி என்ன செய்வது என்று சிந்தித்து நின்றார். அப்பொழுது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. உடனே அம்பினால் தமது வலக்கண்ணை அகழ்ந்தெடுத்து, ஐயன் திருக்கண்ணில் அப்பினார். இரத்தம் நின்றுவிட்டது. இதைக் கண்டு மகிழ்ந்து ஆடினார். அடுத்து, சிவபிரான் தமது இடக்கண்ணிலும் உதிரம் பெருகச் செய்தார். அதைக் கண்ட திண்ணனார், ‘இதற்கு யான் அஞ்சேன், முன்பே மருந்து கண்டுபிடித்துள்ளேன். அதனை இப்பொழுதும் பயன்படுத்துவேன். எனது இன்னொரு கண்ணையும் அகழ்ந்தெடுத்து அப்பி ஐயன் நோயைத் தீர்ப்பேன்’ என்று எண்ணினார். அடையாளத்தின் பொருட்டு, காளத்தி நாதர் திருக்கண்ணில் தமது இடக்காலை ஊன்றிக் கொண்டு, மனம் நிறைந்த விருப்புடன் தமது இடது கண்ணைத் தோண்டுவதற்கென அம்பை ஊன்றினார். குடுமித் தேவர் நில்லு கண்ணப்ப! என்று மூன்று முறை கூறித் திண்ணனாரைத் தடுத்தருளினார். மேலும், என்றும் என் வலப்பக்கம் இருக்கக் கடவாய் என்று பேரருள் புரிந்தார். இதனைக் கண்ட சிவ கோசரியார் தம்மை மறந்து சிவனருளில் மூழ்கித் திளைத்தார்.



இறைவனுக்கே தம் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் அன்று முதல் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

## 6.4 தொகுப்புரை

நண்பர்களே! இதுவரை கண்ணப்ப நாயனார் புராணம் பற்றிய செய்திகளைப் படித்தீர்கள். இந்தப் பாடத்திலிருந்து என்னென்ன செய்திகளை அறிந்து கொண்டீர்கள் என்பதனை மீண்டும் ஒருமுறை நினைவு படுத்திப் பாருங்கள்.

- புராணம் என்றால் என்ன என்பது பற்றியும், பெரிய புராணம் கூறும் செய்திகளைப் பற்றியும் அறிந்திருப்பீர்கள்.
- கண்ணப்ப நாயனார் பற்றிய செய்திகளைப் பற்றி, சிறப்பு நிலையில் விளக்கமாக அறிந்து இருப்பீர்கள்.
- கதை அமைப்பு, பாத்திரப் படைப்பு முதலியவற்றால் பக்தி நெறியில் படைக்கும் காப்பியங்களுக்குப் பெரிய புராணம் ஓர் எடுத்துக் காட்டாக உள்ளதனை அறிந்திருப்பீர்கள்.
- பெரிய புராணத்தின் நூலாசிரியர், பாட்டுடைத் தலைவனின் சிறப்புகள், இலக்கியச் சிறப்புகள் முதலியன பற்றி விரிவாக உணர்ந்து இருப்பீர்கள்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# P10411

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. தண்டியலங்காரம் காப்பியத்தை எவ்வாறு வகைப்படுத்துகிறது?

விடை : தண்டியலங்காரம் காப்பியத்தைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரு வகைப்படுத்துகிறது.

2. பாவிகம் என்பது யாது?

விடை : காப்பியம் முழுவதிலும் ஊடுருவி நிற்கும், கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தே பாவிகம் எனப்படும்.

3. ஐம்பெருங் காப்பியங்கள் என்பவை யாவை?

விடை : சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தும் ஐம்பெருங் காப்பியங்களாகும்.

4. காவியம் என்று பெயர் பெறும் இலக்கியங்களைக் கூறுக.

விடை : நாககுமார காவியம், யசோதர காவியம், இயேசு காவியம், இராவண காவியம் முதலான நூல்கள் காவியம் என்று பெயர் பெற்றுள்ளன.

5. தன்னேரில்லாத் தலைவனின் பண்புகள் யாவை?

விடை : மக்களில் நற்பண்பு மிக்கவர்களைக் காப்பியத் தலைவர்களாகக் கொள்ளும் மரபு உள்ளது. தன்னேரில்லாத் தலைவன் என்பான் பேராண்மை, எல்லாரையும் தன் வயப்படுத்தும் தன்மை, உயர்பண்புடைமை, விழுமிய கல்வியறிவு, அனைவரையும் ஈர்க்கும் தோற்றப் பொலிவு, அனைவராலும் விரும்பப்படும் தன்மை, தான் வாழும் காலத்திலேயே தன்னைப் பற்றிய வரலாறு தோன்றக் காரணமாக இருத்தல் போன்ற தலைமைப் பண்புகள் உடையவனாய் இருத்தல் வேண்டும்.

6. காப்பியத்தில் கதையமைப்பு எவ்வாறு அமைய வேண்டும்?

விடை : காப்பியத்தின் உயிர்நாடியே கதையாகும். அது காலத்திற்கும்,

ஆசிரியனின் நோக்கத்திற்கும் ஏற்ப அமையும். வாய்மொழிக் கதைகள், பழமரபுக் கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள், கற்பித்துக் கொள்ளப்படுபவை என்பனவற்றுள் ஏதேனும் ஒரு விதத்தில் காப்பியக் கதையின் அடிப்படை அமைய வேண்டும்.

7. காப்பிய மரபுகள் சிலவற்றைக் கூறுக.

விடை : i) பாவிகம், காப்பியத்தின் சிறப்பு வாய்ந்த மரபாகும்.

ii) காப்பியத்தில் காப்பியக் கட்டமைப்பு சிறப்பாக அமைந்திருக்கும்.

iii) காப்பியம் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் முதலான பிரிவுகளைப் பெற்றிருக்கும். சுவை, பாவம் (மெய்ப்பாடு) ஆகிய கூறுகளையும் கொண்டிருக்கும்.

முன்

# P10411

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. கிரேக்க மொழியில் உருவான காப்பியத்தின் பெயர் என்ன?
விடை : கிரேக்க மொழியில் ஹோமர் இயற்றிய காப்பியம் இலியாது ஆகும்.

2. வடமொழியில் படைக்கப்பட்ட காவியங்கள் எவை?
விடை : வால்மீகி முனிவரின் இராமாயணம், வியாசரின் மகாபாரதம், காளிதாசரின் ரகுவம்சம் முதலியவை.

3. காப்பியங்களைப் பாடுபொருள் அடிப்படையில் பாகுபாடு செய்ய முடியுமா?
விடை : காப்பியங்களைப் புலவர்கள் பாடுகின்ற பாடுபொருள் அடிப்படையில் பாகுபாடு செய்ய முடியும். சான்றாக, நகைச்சுவைக் காப்பியம், தேசியக் காப்பியம், புராணக் காப்பியம், சமயக் காப்பியம், அறக் காப்பியம் முதலானவற்றைக் கொள்ளலாம்.

4. தமிழில் முதற்காப்பியங்களாகப் போற்றப்படுபவை எவை?
விடை : இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும், சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலையும் தமிழில் முதற் காப்பியங்களாகப் போற்றப்படுகின்றன.

5. இதிகாசம் என்றால் என்ன?
விடை : கடவுளரும், கடவுளின் அம்சமானவர்களும், மானிடராகப் பிறந்து, பல தெய்வீகச் செயல்களை ஆற்றி, இறுதியில் தெய்வீக நிலை எய்துவதைப் பற்றி விரிவாகப் பேசுவன இதிகாசங்கள் எனப்படும்.

6. சேக்கிழார் இயற்றிய காப்பியம் யாது?
விடை : சேக்கிழார் இயற்றிய காப்பியம் பெரியபுராணம்.

முன்

# P10412

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. காப்பியம் என்றால் என்ன?

விடை : தொடர்நிலைச் செய்யுள் வடிவில் அமைவது காப்பியம் ஆகும்.

2. சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிகள் நடந்த நாடுகள் எவை?

விடை : சோழ, பாண்டிய, சேர நாடுகள்.

3. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் எவை?

விடை : அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர். ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

4. பாரதியார் சிலப்பதிகாரத்தை எவ்வாறு பாராட்டுகிறார்?

விடை : 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்' எனப் பாராட்டுகிறார்.

5. சிலப்பதிகாரக் காப்பியத்தின் தனிச்சிறப்பு என்ன?

விடை : ஒருவரது வாழ்க்கை வரலாற்றை முழுமையாக எடுத்துக் கொண்டு, அதன்வழி உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் இலக்கிய முயற்சியாகும். இதுவே சிலப்பதிகாரத்தின் தனிச்சிறப்பு எனலாம்.

முன்

# P10412

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. வழக்குரை காதை அமைப்பு முறை என்ன?
   விடை : நாடகப் பாங்கில் அமைந்துள்ளது.

2. கோப்பெருந் தேவியின் கனவு குறித்து எழுதுக.
   விடை : கோப்பெருந்தேவி கண்ட கனவில் பாண்டிய மன்னனின் வெண்கொற்றக் குடையும் செங்கோலும் சரிந்து விழுந்தன; அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணி இடைவிடாது ஒலித்தது; அப்போது எட்டுத் திசைகளும் அதிர்ந்தன; இரவு நேரத்தில் வானவில் தோன்றியது; பகற்பொழுதில் விண்மீன்கள் மிக்க ஒளியுடன் பூமியில் விழுந்தன. இத்தகைய தீய காட்சிகளால் வரக்கூடிய துன்பம் ஒன்று உண்டு என்பதை உணர்ந்து கோப்பெருந்தேவி உள்ளம் நடுங்கியது. இப்பகுதியில் பாண்டிய மன்னன் வீழ்ச்சி அடையப் போவது தேவி கண்ட கனவின் மூலம் குறிப்பாக உணர்த்தப்பட்டது.

3. வாயில் காவலன் கண்ணகியை எவ்வாறு சித்திரிக்கின்றான்?
   விடை : பிடர்த் தலைப் பீடத்தின் மேல் நின்ற கொற்றவையும் அல்லள்; சப்த மாதர் ஏழு பேருள் இளையவளான பிடாரியோ என்றால் அவளும் அல்லள்; இறைவனை நடனமாடக் கண்டருளிய பத்திர காளியோ எனில் அவளும் அல்லள்; பாலை நிலக் கடவுளான காளியோ எனில் அவளும் அல்லள்; தாருகன் என்ற அசுரனை அழித்த துர்க்கையும் அல்லள்; உள்ளத்தில் மிகவும் சினங்கொண்டவள் போல் தோன்றுகின்றாள்; பொற்சிலம்பு ஒன்றினைக் கையிலே பிடித்துள்ளாள் என்று வாயில் காவலன் கண்ணகியைச் சித்திரிக்கின்றான்.

4. கண்ணகி கூறிய சான்று என்ன?
   விடை : கண்ணகியின் காற்சிலம்பு மாணிக்கக் கற்களை உள்ளிடு பரல்களாக உடையது என்பதாகும்.

5. பாண்டியன் எவ்வாறு நீதியை நிலை நாட்டினான்?

விடை : அரசன் தான் செய்த தவற்றை உணர்ந்தவுடன் தன் உயிர் நீத்து நீதியை நிலை நாட்டினான்.

முன்

# P10413

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. ஐம்பெருங் காப்பியங்கள் யாவை?

விடை : சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன ஐம்பெருங் காப்பியங்கள்.

2. இரட்டைக் காப்பியங்கள் யாவை? அவ்வாறு வழங்குவது ஏன்?

விடை : சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்களாகும். இளங்கோவும் சாத்தனாரும் செந்தமிழால் கூடிய நட்பினர். அவர்கள் செய்த சிலம்பும், மணிமேகலையும் இரண்டு தனிக் காப்பியங்கள் ஆகாமல், பொருள் நிலையிலும், கதை நிலையிலும் ஒன்றுடன் ஒன்று ஊடுருவி ஒன்றி நிற்பதால் அவற்றை இரட்டைக் காப்பியம் என்று வழங்குவர்.

3. மணிமேகலை எந்தச் சமயத்தைச் சார்ந்த காப்பியம்?

விடை : மணிமேகலை – பௌத்த சமயக் காப்பியம்.

4. காப்பியத் தலைவியின் பெயர் யாது?

விடை : காப்பியத் தலைவியின் பெயர் மணிமேகலை.

5. மணிமேகலை ஒரு சமுதாயச் சீர்திருத்தக் காப்பியம் என்று ஏன் வழங்குகின்றனர்?

விடை : ஒழுக்க நெறி, அரச நெறி, பசி போக்குதல், சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கல், கள்ளுண்ணாமை, பரத்தைமை ஒழிப்பு போன்ற சீர்திருத்தக் கருத்துகளைக் கூறுவதால் மணிமேகலையைச் சமுதாயச் சீர்திருத்தக் காப்பியம் என்று வழங்குவர்.

முன்

# P10413

# தன் மதிப்பீடு : விடைகள் -II

1. விழாவறை காதை உணர்த்தும் செய்தி யாது?

விடை : மக்கள், இந்திரனுக்கு இருபத்தெட்டு நாட்கள் சிறப்பாக விழாக் கொண்டாட வேண்டும் என்ற செய்தி வள்ளுவன் மூலமாகத் தெரிவிக்கப் படுகிறது.

2. இந்திர விழாவைத் தோற்றுவித்தவர் யார்? அவ்விழாவைச் சிறப்பாக நடத்திய அரசன் யார்?

விடை : இந்திர விழாவைத் தோற்றுவித்தவர் அகத்திய முனிவர். அவ்விழாவைச் சிறப்பாக நடத்திய அரசன். சோழமன்னனாகிய தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்.

3. இந்திர விழாவைக் கொண்டாடாவிடில் என்ன நிகழும்?

விடை : இந்திர விழாவை நடத்தாவிடில் நாளங்காடிப் பூதம் மக்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்தும். பாவிகளைப் பிடித்து உண்ணும் சதுக்கப் பூதம் புகார் நகரை விட்டு நீங்கி விடும்.

4. முரசறைவோன் வாழ்த்திய மரபு பற்றிக் குறிப்பிடுக.

விடை : முரசறைவோன் முதலில் புகார் நகரத்தையும், இரண்டாவதாக மழையையும், மூன்றாவதாக அறநெறி பிறழா மன்னனையும் வாழ்த்துகின்றான்.

5. இந்திர விழா நடத்தப்படும் போது புகார் நகரத்தை எவ்வாறு அழகுபடுத்த வேண்டும்?

விடை : வீதிகள், பொது இடங்கள், கோயில்கள் முதலான இடங்களில் வாழை, கரும்பு, கொடி இவற்றைக் கட்டி, மங்கலப் பொருட்களையும் சேர்த்து அழகுபடுத்த வேண்டும் என்று மக்களுக்கு வள்ளுவன் முரசறைந்து அறிவித்தான்.

6. சாத்தனார், இந்திர விழா நடத்தப்படும் பொழுது மக்கள் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

விடை : அறிவுரை வழங்கும் அறிஞர்களிடம் பந்தர்களிலும், பொது இடங்களிலும் சென்று நல்லுரைகளைக் கேட்க வேண்டும் என்றும், எவரிடத்தும் பகைமையும் கோபமும் கொள்ளக் கூடாது என்றும் தனித்தனியே பிரித்துக் கூறியுள்ளார்.

முன்

# P10414

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. சீவக சிந்தாமணியில் உள்ள இலம்பகங்கள் எத்தனை ?
விடை : சீவக சிந்தாமணியில் உள்ள இலம்பகங்கள் 13.

2. சீவக சிந்தாமணியின் ஆசிரியர் பெயர் என்ன ?
விடை : திருத்தக்க தேவர்

3. சீவகனின் பெற்றோர் யாவர் ?
விடை : சச்சந்தன், விசயை என்போர் சீவகனின் பெற்றோர் ஆவர்.

4. சிந்தாமணி என்றால் என்ன ?
விடை : சிந்தாமணி என்பது 'ஒளிகெடாத ஒரு வகை மணி' யாகும்.

5. சீவக சிந்தாமணியை 'மணநூல்' என்றழைக்கக் காரணம் என்ன ?
விடை : சீவகன் மகளிர் எண்மரைத் திருமணம் செய்து கொள்ளும் வரலாற்றை விரித்துரைக்கும் நூலாதலால் 'மண நூல்' என்று அழைத்தனர்.

6. இக் காப்பியம் உணர்த்தும் சமயம் யாது ?
விடை : சீவக சிந்தாமணி உணர்த்தும் சமயம் சமணம் ஆகும்.

7. சீவக சிந்தாமணியின் முதல் நூல்கள் யாவை ?
விடை : சீவக சிந்தாமணி தோன்றுவதற்குக் காரணமாக அமைந்த முதல் நூல்கள் வடமொழியில் உள்ள (1) கத்திய சிந்தாமணி, (2) சத்திர சூடாமணி, (3) ஸ்ரீ புராணம் ஆகியவை ஆகும்.

முன்

# P10414

# தன் மதிப்பீடு : விடைகள் -II

1. சீவகனின் தாய் மாமன் யார் ?

விடை : சீவகனின் தாய் மாமன் கோவிந்தன் ஆவான்.

2. விசயை கண்ட கனவு யாது ?

விடை : விசயை, விடியற்காலையில் சீவகனை நேரில் காண்பது போல் கனவு கண்டாள்.

3. விமலை என்பாள் யார் ?

விடை : சாகர தத்தனுக்கும் கமலைக்கும் பிறந்த மகளே விமலை ஆவாள்.

4. விமலை பயின்ற விளையாட்டு என்ன ?

விடை : விமலை பந்தாடுதலில் திறன் பெற்றிருந்தாள்.

5. சோதிடன் கணித்துக் கூறியது என்ன ?

விடை : விமலை பிறந்த பொழுது, அவள் தந்தை சாகர தத்தனிடம், இம்மங்கைக்குரிய மணவாளன் உன் கடைக்கு வரும் போது, விலையாகாமல் தேங்கிக் கிடந்த சரக்கெல்லாம் விற்கும் என்று சோதிடன் கணித்துக் கூறினான்.

6. விமலை பந்தாடுந்திறன் பற்றி எழுதுக.

விடை : விமலை ஒரே நேரத்தில் இரு கைகளிலும் ஐந்து பந்துகளை விடாமல் பந்தடிக்கும் திறனுடையவள். மேலே எழும்பியும், முறை தவறிக் கீழே விழுதலின்றியும் ஆடுகின்ற பந்து கையில் சேரும். ஒரு பந்து கையிலும், மற்றொன்று முகத்தின் முன்னேயும், பிறிதொன்று தலைக்கு மேலேயும், மார்புக்கு நேராகவும், கூந்தலுக்குப் பின்னாலும் சென்று வட்டமாக வரும்படி பந்தாடும் வல்லமை உடையவள்.

முன்

# P10415

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. வடமொழியில் இராமாயணத்தை இயற்றியவர் யார்?
விடை : வால்மீகி முனிவர் வடமொழியில் இராமாயணத்தை இயற்றினார்.

2. கம்பராமாயணம் எந்தச் சமயத்தைச் சார்ந்தது?
விடை : கம்பராமாயணம் வைணவ சமயத்தைச் சார்ந்தது.

3. கம்பராமாயணம் எதை விளக்குகின்றது?
விடை : பிறன் மனைவியை விரும்பினால் அவனும் அவனைச் சார்ந்தவர்களும் அழிந்து விடுவார்கள் என்பதை விளக்குகிறது.

முன்

# P10415

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. இராமன் வனவாசம் செல்லத் தொடங்கும் பொழுது முதலில் அறிமுகமானவன் யார்?
விடை : குகன்.

2. குகன் இராமனிடம் படைத்த பொருள்கள் யாவை?
விடை : தேனும், மீனும்.

3. குகனைப் பற்றி, இலக்குவனிடமும் சீதையிடமும் இராமன் என்ன கூறினான்?
விடை : “இவன் நம்மிடம் நீங்காத அன்புடையவன் ஆவான்” என்று கூறினான்.

4. குகனிடம் இராமன் கூறிய வாக்குறுதி என்ன?
விடை : “நாங்கள் புண்ணிய நதிகளில் நீராடி, புனிதமான முனிவர்களை வழிபாடு செய்து, வனவாசம் செய்ய வேண்டிய சில நாட்கள் முடிந்ததும் உன்னிடம் வந்து சேருவோம்” என்று வாக்குறுதி கொடுத்தான்.

5. முனிவர்கள் இராமனைப் பிரிந்த துயரால் எவ்வாறு இருந்தனர்?
விடை : முனிவர்கள் இராமனைப் பிரிந்த துயரால், நெருப்பிலிட்ட மெழுகுபோல் இருந்தனர்.

முன்

# P10416

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. சைவத் திருமுறைகளில் பெரிய புராணத்தின் இடம் யாது?

விடை : சைவத் திருமுறைகளில் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்படுகின்றது.

2. பெரிய புராணம் பிறமொழி தழுவிய காப்பியமா?

விடை : பெரியபுராணம், தமிழ் மக்களையும், தமிழகச் சூழலையும் மையமாகக் கொண்டு பாடப்பட்ட தமிழ்க் காப்பியமாகும்.

3. பெரிய புராணம் உணர்த்தும் செய்தி யாது?

விடை : 'எளிய நிலையில் மனம் தளராமல் இறைச் சிந்தனையோடு, தொண்டு புரிந்தால் இறையருள் பெறலாம்' என்னும் செய்தியை 63 நாயன்மார்களின் வரலாற்றைத் கொண்டு உணர்த்தும் நூலே பெரியபுராணம் ஆகும்.

4. சேக்கிழாரை ஆதரித்த மன்னன் யார்?

விடை : சேக்கிழாரை ஆதரித்த மன்னன் இரண்டாம் குலோத்துங்க சோழன் (அநபாய சோழன்) ஆவான்.

5. பெரிய புராணம் இயற்றக் காரணமான நூல்கள் எவை?

விடை : சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியும் பெரிய புராணம் பாடுவதற்குக் காரணமாக அமைந்த நூல்கள் ஆகும்.

6. பெரிய புராணக் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

விடை : பெரியபுராணக் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவன் சுந்தரர் ஆவார்.

முன்

# P10416 தன் மதிப்பீடு : விடைகள் - II

1. திண்ணனாரின் பெற்றோர் யாவர்?

விடை : திண்ணனாரின் தந்தை: நாகன்; தாய்: தத்தை ஆவர்.

2. குடுமித் தேவர் எங்கு வீற்றிருக்கின்றார்?

விடை : பொன்முகலி ஆற்றங்கரையின் அருகில் இருக்கும் திருக்காளத்தி மலையில் குடுமித் தேவர் வீற்றிருக்கின்றார்.

3. சிவ கோசரியாருக்கும், திண்ணனாருக்கும் உள்ள வழிபாட்டு நிலை வேறுபாடு யாது?

விடை : சிவ கோசரியாரின் வழிபாடு ஆகம முறைப்படி செய்வதாகிய அறிவு வழிப்பட்டது-சடங்கு வழியான வைதிக நெறி, ஆனால் திண்ணனாரின் வழிபாடு அன்பு செலுத்துதல் ஆகிய உணர்வு வழிப்பட்டது-பக்தி நெறி, இறைவனுக்கு விருப்பமானது.

4. திண்ணனாருக்கு எத்தனை நாட்களில் இறைவன் காட்சி தந்தார்?

விடை : ஆறே நாட்களில் இறைவன் திண்ணனாருக்குக் காட்சி தந்தார்.

5. திண்ணனாரின் தோற்றச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுக.

விடை : வேட்டுவர் குலத் தோன்றல் திண் என்னும் உடலைப் பெற்றதால் திண்ணன் எனப் பெயர் பெற்றார். தலைமயிரைத் தூக்கிக் கட்டியவர். தலையிலே மலர்களைச் சூடியவர். கழுத்திலே சங்கு மணிகளும், பன்றிக் கொம்புகளும் கோத்த மாலையையும், புலித் தோலினால் செய்யப்பட்ட தட்டை வடிவமான வெற்றி மாலையினையும் அணிந்தவர். இடையிலே ஆடையாகப் புலித் தோலையும், குறுவாளையும் வைத்திருப்பவர். கால்களில் வீரக் கழல் பூண்டு செருப்பு அணிந்தவர். தலையிலே மயிற்பீலி சூடியவர். வில், வேல், அம்பு, வாள், ஈட்டி முதலானவற்றைக் கையிலே ஏந்தியவர். வேட்டையாடுவதற்கு நாயினைத் துணையாகக் கொண்டவர்.

6. திண்ணனாருக்கு, கண்ணப்பர் எனப் பெயர் வரக் காரணம் என்ன?

விடை : சிவ கோசரியாருக்கு, இறைவன் திண்ணனாரின் அன்பின் பெருமையைக் காட்ட, தமது வலக்கண்ணில் இருந்து உதிரம் பெருகச் செய்தார். இதனைக் கண்ட திண்ணனார் தாம் செய்வது அறியாமல் திகைத்தார். பின்னர் துடைத்தாலும், பச்சிலையிட்டாலும் நிற்காதது கண்டு வருந்தி நின்றார். அப்போது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி நினைவுக்கு வர, தன் கண்ணையே அம்பினால் அகழ்ந்தெடுத்து அப்பினார்.

உதிரம் நின்றது. அது கண்டு மகிழ்ந்தாடினார். உடனே, சிவபிரான் இடக்கண்ணிலும் உதிரம் பெருகச் செய்தார். உடனே அஞ்சாமல் இடது கண்ணையும் அப்ப, காளத்தி நாதரின் திருக்கண்ணில் தமது இடக்கால் விரலை ஊன்றி, அம்பினால் இடக்கண்ணைத் தோண்ட முனைந்தார், குடுமித் தேவர் நில்லு கண்ணப்ப என்று மூன்று முறை கூறித் தடுத்தருளினார். இதனைக் கண்ட சிவ கோசரியார் தம்மை மறந்து சிவனருளில் மூழ்கித் திளைத்தார். அன்று முதல் இறைவனுக்கே தன் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் திண்ணனார், கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

முன்